# ARUL URU THIRUVALAR IRUVAR

FOR

HIGHER FORMS IN HIGH SCHOOLS

BY

VIDWAN

A. NATESAN.

Q4
N51

AWAI PUBLISHING HOUSE,
8, Moosa Sait Street,
Thyagarayanagar, Madras.

1951.

*Copy Right*] *[Price Re. 1*

# முன்னுரை.

நாகரிகத்தின் பொருளுருவை உள்ளபடி கண்டு உயர் நிலை யுற்றுப் பிறநாடுகளுக்கு நாகரிகத்தைக் கற்பித்தது நம் நாடு. நாகரிகம் என்பதை வள்ளுவர் கூறும்போது "நயத் தக்க நாகரிகம்" என்று அடைகொடுத்துரைக்கின்றார். இச் சொற்பொருளின் தொடர்பு (நாகரிகம்-கண்ணோட்டம்-கருணை) அருள் என்பதே.

அருள் இயற்கையாகவே உயிர்நாடியாக அமையப் பிறந்து, அதன் விளைவாக உலக நலம் பெருக உழைத்து உயர்கீர்த்தி பெற்ற பெரியார் பலர் தோன்றுதற்குப் பேறுடைய நாடு நம் நாடு. அப்பெரியார்களுள் புத்தரும், காந்தியும் உயிர்க் கருணையே உலகின்பம் என்னும் கொள்கையுடையவர்கள். பிற்கால காந்திக்கு முற்கோலி வழியமைத்த புத்தர் வரலாற்றில் உருகியவர் காந்தி.

எனவே இவ்விருவருடைய மதம், செயல், பயன் ஆகியவற்றின் ஒற்றுமை மிகுதியை விளக்கக் கருதி இச் சிறு நூல் வரைந்தேன். இச்சிறு நூல் உயர்பள்ளிகளில் உயர் வகுப்புக் களுக்குத் துணைப்பாடமாகும். (Non detailed text for Higher forms).

என்னால் எழுதப்பட்ட பல நூல்களையும் ஏற்ற தமிழுலகம் இதையும் ஏற்க இறைவனை இறைஞ்சுகின்றேன்.

23, வேங்கடேச மேஸ்திரி தெரு,
சவுக்கார் பேட்டை, சென்னை.
1—10—1951

ஐ. நடேசன்,
தமிழன்.

# உள்ளுரை

—:o:—

பக்கம்.

புத்தர் பெருமான்.

1 உலகியல் ... ... 1

2 அறிவியல் ... .... 19

3 துறவியல் ... ... 28

4 போத இயல் ... ... 39

மகாத்மா காந்தி யடிகள்.

1 பிறப்பியல் ... ... 69

2 படிப்பியல் ... ... 75

3 துன்பியல் .... .... 107

4 சிறப்பியல் .... .... 129

5 முடிவியல் .... .... 137



# அருளுருத் திருவாளர் இருவர்

## புத்தர் பெருமான்

## 1. உலகியல்

**நம் நாடு**

"பாருக்குள்ளே நல்ல நாடு" என்ற திருவாக்கினால் பாராட்டினார் பாரதியார். இப்பாராட்டுக்கு முற்றும் பொருந்தியது நம் நாடு - பாரத நாடு - இந்திய நாடு. இந்நாட்டின் வடகோடியில் உள்ளது "விண்ணை இடிக்கும் தலை இமயம் என்னும் வெற்பு" அதன் சாரலில் வற்றாது நீர்நிறைந்து பாயும் யாறுகள் பல. அவற்றுள் உரோகிணி என்பதும் ஒன்று.

உரோகிணி யாற்றின் நீர் பாய்தலால் செழிப்புற்ற நிலப்பகுதி வானளாவிய மரங்களடர்ந்த சோலைகளின் எழிலைக் கொண்டு விளங்கிற்று. அன்றியும் விளை புலங்களாலும் மிகு கவின் பெற்றிருந்தது. இப் பெருநிலப் பகுதியின் பெயர் உத்தரகோசலம். உத்தர கோசல நாட்டில் இருகுடியினர் வாழ்ந்தனர். அவர்கள் சாக்கியர் எனவும் கோலியர் எனவும் பெயர் பெறுவர். இவர் போன்ற மன்னர் பலர் ஆளும் வாய்ப்புப் பெற்றிருந்தது நம் நாடு.

**சாக்கியர்**

பல நூற்றுண்டுகட்கு முன்னர் போடாலா என்னும் நிலப்பகுதியை இக்ஷுவாகு குல மன்னன் ஒருவன்

ஆட்சிபுரிந்தான். அவனுக்கு நால்வர் மைந்தர் இருந்தனர். அவர்களுள் கடைசி மகன் பேரறிவும் பேரழகும் பெற்றிருந்தான். ஆதலால், பெற்றோர் இருவரும் அவனைப் பெரிதும் விரும்பினர்; அவனுக்கே ஆட்சியுரிமையைத் தந்து முடிசூட்டினர்.

அம்மன்னனது செயலால் மனம்புழுங்கிய மற்ற மைந்தர் மூவரும் பெற்றோரைவிட்டுப் பிரிந்தார்கள்; நிலையின்றி அலைந்து திரிந்தார்கள்; காயும் கனியும் கிழங்கும் நாடிக் காட்டில் நுழைந்தார்கள்; அங்கே முனிவர் ஒருவரைக் கண்டார்கள். அம்முனிவர் பெயர் கபிலர். கபிலரைக் கண்ட மூவரும் காலில் பணிந்து கைகூப்பித் தலைதாழ்த்து நின்றார்கள், மைந்தர் மூவரும் மனம் நொந்திருப்பதை அந்த முனிவர் அறிந்தார். "யாது குறை" என வினவினார். அவர்கள் தம் குறையைக் கூறினார்கள்.

தந்தையின் தகுதியற்ற செயலால் நிலைதவறி அலையும் மக்கட்கு ஆறுதல் கூறினார் கபிலர். அந்நிலப் பகுதியிலேயே நகரம் ஒன்றினை அமைத்துக் கொள்ளுமாறு கூறினார். உடனிருந்து ஆவன பலவும் புரிந்தார். நாட்கள் சில கடப்பதற்குள் அவ்விடத்தில் நகரம் ஒன்று நன்கமைந்தது. கபிலர் உதவியாலமைந்த அந்நகரத்திற்குக் கபிலவஸ்து என்னும் பெயர் இடப்பட்டது.

பெற்றோரால் புறக்கணிக்கப்பட்ட மைந்தர் மூவரும் கபிலவஸ்துவில் ஆட்சி நிறுவிச் சிறப்புற வாழ்ந்தனர். நாட்கள் பல கடந்தன. தன் மைந்தர் நிலைமையை அறிய மன்னன் தூதுவர் சிலரை ஏவினான். அவர்கள்

நாற்றிசையும் சென்று நாடினர். கபிலவஸ்துவைக் கண்டு, மீண்டு சென்று, விளம்பினர் வேந்தனுக்கு. அரசன் அகமிக மகிழ்ந்து அவரைக் காணச் சென்றான். கண்டு களிப்புக் கொண்டான். மைந்தர் மூவரும் கொண்ட மனமைந்தினை மெச்சினான். "இம்மூவரும் சாக்கியர்" என்றான் (சாக்கியர் - மன உறுதியுடையவர்) அவரும் அவர்கால் வழியினருமே சாக்கியர் (சாகமரங்கள் என்னும் தேக்கமரக் காட்டில் வாழ்ந்தவர்என்னும் பொருளில் இப்பெயர் பெற்றனர் என்பதும் பொருந்தும்.)

## சுத்தோதனர்

சாக்கியர் மரபில் நாளடைவில் தோன்றிய மன்னர் பலர். அவர்களுள் ஒருவர் சுத்தோதனர். இம்மன்னர் நீதி தவறாதவர்; மன்னுயிரைத் தன்னுயிராகக் கருதிக் காப்பவர், அவர், போர்வன்மை மிக்கவர்; கல்வி அறிவு நிறைந்தவர். ஆதலால், பெருமையிற் சிறந்த பேரரசராக விளங்கினார் சுத்தோதனர். அக்காலத்தில் உத்தரகோசலத்தில் ஆட்சி யுரிமையுடையவர்களாயிருந்தமற்றொரு மரபினராகிய கோலியரும் சாக்கிய மன்னர்க்கு ஒப்புடையவர்களே. ஆதலால் சுத்தோதனர், கோலியர்மரபைச் சேர்ந்தவனாகிய தன் மாமன் அஞ்சனனுக்கு மக்களாகிய இரு பெண்களை மணம் புரிந்தார். அவர்கள்மாயாதேவி, கௌதமி எனப்படுவார்கள்.

எல்லாச் சிறப்பும் பெற்றிருந்தும் நெடுநாள் மகப்பேறு பெறாமல் மனம் வருந்தி அதன்பொருட்டு அரும் புண்ணியங்கள் அளவில செய்தார் சுத்தோதனர்,

## சித்தார்த்தர் பிறப்பு.

ஒருநாளுறக்கத்தில் மாயாதேவி கனவு ஒன்று கண்டார். அக்கனவைக் கணவனிடம் கூறினர், அம் மன்னவர் அறிஞர்பால் கூறினர். அவர்கள், கனவு நூல் ஆய்ந்து, "இக் கனவு கண்ட மாயாதேவியின் வயிற்றில் ஆண்மகவு ஒன்று பிறக்கும். அப் பிள்ளை பெரு ஞானியாகி உலகில் மேன்மையுற்று வாழும்" எனக் கூறினர்கள். அவ்வாறே மாயாதேவி கருவுற்ருர். அரசனும் மற்றும் அனைவரும் அளவற்ற மகிழ்ச்சி யுற்றனர்.

மாயாதேவியார் தமது பிறந்த மனையிலே பிள்ளைப் பேறு கருதினர். வழக்கமும் அப்படித்தான். அதாவது பெண்கள் முதல் மகப்பேறு எவ்வாற்ருனும் தாய் வீட்டிலேயே பெறுதல் வேண்டும் என்பதே. மாயா தேவியாரும் தமது தாயகம் செல்லப் புறப்பட்டார். நெடுந்தூரம் சென்று ஒரு சோலையில் புகுந்தார். வழிக் கடந்த இளைப்பு தவிர்தற்பொருட்டு அசோக மரம் ஒன்றின் கீழ் தங்கினர். அங்கே குயிலின் இனிய குரலும் கிளியின் மழலை மொழியும் வண்டின் இன்னேசையும் கேட்டு மகிழ்ந்தார். ஆடும் மயில், துள் ளும் மான், பாயும் மந்தி, நீரில் உலவும் அன்னம், பறந்து திரியும் பறவைகள் ஆகியவற்றுடன் பன்னிற மலர்க் காட்சிகளையும் கண்டு களித்தார். தாழ இருந்த அசோக மரக் கிளையினின்றும் மலர் ஒன்றைப் பறித்து மணம் முகர்ந்தார்; அம் மலர் மணத்தால் உடற்சோகமும் உள்ளச் சோகமும் அகலப்பெற்ருர்;

அருமருந்தன்ன மகவையும் பெற்ருர். அது நிறை மதி சேர்ந்த விசாக நாளாய் அமைந்தது. மாயாதேவி யார் இங்ஙனம் அருமருந்தன்ன மகனைப் பெற்ற யாண்டு கி. மு. 563. வழியிலேயே வாய்த்த பேருகிய மகவுடன் மாயாதேவி மீண்டும் கபிலவஸ்துவுக்கே வந்தார். கௌதமியும் ஏனையோரும் கண்டு களித்தனர். சுத்தோ தனர் நனியுவந்து நற்பொருள் பலவற்றை நல்லோர்க்கு வழங்கினர். பிள்ளைக்கு சித்தார்த்தர் எனப் பெயர் சூட்டினுர். உலகிற்கோர் புதிய ஞாயிறு தோன்றிய தைப் போன்றது சித்தார்த்தர் பிறப்பு.

## தாயிழந்த பிள்ளை.

ஈன்று மகிழ்ந்த மாயாதேவியார், வளர்த்து மகி ழும் புண்ணியம் செய்யவில்லை. அவர் தமது இளங் குழவியைத் தனியே விட்டு ஏழாம் நாள் இறுதி யுற்றனர். தாயை இழந்து தனிப்பட்ட குழவியை வளர்க்கும் பேறு கௌதமிக்கு வாய்த்தது. மாற்ருந் தாய் என்னும் மாற்றம் மாறு மாறு அவள் அப்பிள்ளை-யை வளர்த்தாள். சாக்கியர், கௌதமர் மரபில் வந்தவர் களாதலால் இப்பிள்ளைக்கு சித்தார்த்த கௌதமன் என்னும் பெயர் வாய்த்தது. தாழ்வின்றி வளர்வ தாயிற்று தாயிழந்த பிள்ளை.

## கடவுட் பிறவி

ஒவ்வொருயாண்டிலும் ஆங்காங்கே இந்திர விழா நிகழ்த்துவது பண்டைய மரபு. அத்திருவிழா உழவு சம்பந்தமாகக் கொண்டாடப்படுவது. யாண்டுத் தொடக்கத்தில் மழை பெய்தவுடன் நிலம் உழப்படும்.

அப்படி உழுகிறவர்கள் மன்னன், மன்னனுக்கு அடுத்த வரிசையில் மாண்புற்றோர் ஆகியவர்களாயிருப்பார்கள். அவர்கள் உழுவதற்கான கலப்பை பொன்னால் அணி செய்யப்பட்டிருக்கும். அத்திருநாளைப் பொன்னேர் பூட்டு விழா என்பது வழக்கம். அவ்விழா கபில வஸ்துவிலும் நிகழ்ந்தது.

விழாக் காண நகரமக்கள் சிறக்க அணிந்தும் உடுத்தும் சென்றார்கள். ஆங்காங்கே சோலைகளிலும் சாலைகளிலும் மக்கள் தங்கியிருந்தனர். திரள் திரளாகக் கடைகளும் காட்சிகளும் நிறுவப்பட்டன. அவரவர் தகுதிக்கேற்ப கூடாரங்களும் பந்தர்களும் அமைத்துக் கொண்டார்கள். மரநிழலில் தங்கி மகிழ்ந்தனர் பலர்.

அவ்விழாவில் தாதியர் சிலர் சித்தார்த்தரை யழைத்து வந்தார்கள். அவர்க்கென்று அழகிய கூடாரம் ஒன்று அமைக்கப்பட்டது. அக்கூடாரம் ஒரு மரத்தின் கீழிருந்தது; மரம் செழித்துக் கிளைத்துத் தழைத்துத் தண்ணிழல் அளிப்பதாயிருந்தது. இளந் தளிர்கள் அசைந்து மெல்லிய காற்றை வீசி இன்பமூட்டிய அம்மர நிழலில் கூடாரத்தின் வெளியே குழந்தைப் பருவமுள்ள சித்தார்த்தர் விடப்பட்டிருந்தார்.

குழந்தையுடன் வந்திருந்த தாதியர் விழாக்காணச் சென்றார்கள். அங்கே மன்னன் பொன்னேர் உழுவதைப் பார்த்துக் காலங்கடத்தினர். திரும்புவதற்கு நெடுநேரமாயிற்று. ஆதலால், ஞாயிறு ஏறியது. கூடாரத்தின் வெளியே விடப்பட்டிருந்த குழந்தையை விட்டு நிழல் விலகியிருக்குமே! வெயில் குழந்தையை வருத்

துமே! என்னும் நினைவு தாதியருளத்தில் தோன்றியது. ஆதலால், அவர்கள் விரைந்து திரும்பினார்கள். வந்து பார்த்து வியந்தார்கள். மற்ற மரநிழல் பொழுதுக் கேற்ப ஒதுங்கியிருந்தது. அம்மரம் மாத்திரம் இயற்கைக்கு மாறாகக் குழந்தைக்கு நிழல்செய்து கொண்டிருந்தது. உடனே மன்னரும் அறிந்து வந்து மனமருண்டார். இவ்வகைகளினால் கொண்டாடப் பட்டது சித்தார்த்தருடைய கடவுட் பிறப்பு.

## நிமித்திகர் கூற்று

கௌதமர் நிறைபிறைபோல் வளர்வாரானார். அவருடைய இயற்கைப் பொலிவு எவரையும் கவர்வதாயிற்று. கௌதமியும் அரண்மனைத் தாதியரும் கௌதமரைக் கண்ணாகக் கருதினர். உணவு ஊட்டியும் நீராட்டியும் அணி பூட்டியும் காட்சிகள் காட்டியும் பாராட்டியும் வளர்த்தார்கள் அவர்கள். சித்தார்த்தருடைய நடையும் பிறவும் தனி மதிப்புடையனவா யமைந்திருந்திருந்தன. எவரிடமும் இளகிய மனத்தோடு இனிய சொல்லாடுவார் அவர். மகவு, அன்பின் பார்வையால் பலர் எப்பொழுதும் தன்னைச் சூழ்ந்திருக்கச் செய்து கொண்டது. அதனைக் கண்ட சுத்தோதனர் உள மகிழ்ந்தார்; உடல் பூரித்தார்.

உற்ற வயதில் சித்தார்த்தர் கற்கத் தொடங்கினார். வருந்தாமல் பல நூல்களைக் கற்றார். அறிவு நூல் பல கற்றுத் தேர்ந்து அரசர்க்குரிய வில், வேல், வாள் சிலம்பம் முதலியனவும் பயின்று தேர்ந்தார். யானை குதிரை, தேர் ஆகியவை ஏறவும் செலுத்தவும் பழகித்

தேறினர். மற்போர்ப் பயின்று மாண்புற்றார். உடற் கட்டும் முகவெட்டும் வாய்க்கப்பெற்றார் சித்தார்த்தர்.

"தம்மிற்றம் மக்கள் அறிவுடைமை மாநிலத்து
மன்னுயிர்க் கெல்லாம் இனிது" அல்லவா!

இக்காரணத்தால் சுத்தோதனர் கொண்ட பெருமை பெரிது.

ஒருநாள் சுத்தோதனர் அவைக்கு நிமித்த நூல் வல்லார் ஒருவர் வந்தார். வேந்தர் அவரை வரவேற்று வரிசை செய்தார். தமது மைந்தரைக் கூட்டிவரச் செய்து அப்பெரியாருக்குக் காட்டினர். கௌதமரைக் கண்ட நிமித்திகர் பெருவியப்புக் கொண்டார். மகிழ்ச் சிக் கடலில் மூழ்கினர். மைந்தனுடைய உறுப்புக்களை உற்று நோக்கினர். முகப் பொலிவையும் அகப்பொலி வையும் ஒத்திட்டார். தண் தாமரைப்பூப் போன்ற தாளடிச் சுவடுகளையும் கூர்ந்து பார்த்தார். "காலடி களில் பல கோடுகளையுடைய சக்கரவடிவம் அமைந் திருத்தலால் இப்பிள்ளை கடவுட் பண்புடையது; அரு ளின் தோற்றம்; ஞானவடிவம். எனவே அரசின்பம் துறந்து துறவின்பம் ஏற்கும். உலகம் போற்றும் ஆசிரி யர் ஆகி ஒப்புயர்வற்ற மேனிலை எய்தும்" என்றார். மன்னனைத் திடுக்கிடச் செய்தது நிமித்திகர் கூற்று.

## அருளுள்ளம்

அருட்செல்வம் செல்வத்துட் செல்வம் என்றார் நம் வள்ளுவனர். அருள் வடிவாகவே தோன்றினர் கௌதமனர். எவ்வுயிரையும் தம்முயிர்போல் எண்ணி னர் அவர். பிறவுயிர்களுற்ற இன்னல் கண்டு கண்ணீர்

பொழிவார்; பதைபதைத்து அவ்வின்னலகற்றுவார். துன்பந்துடைக்கும் தோன்றலெனக் கௌதமரை விளக்கியது அவரருள் உள்ளம்.

## மன்னன் மனம்

மைந்தனுடைய மாண்பைக் கண்டு சுத்தோதனர் மகிழ்ந்தாராயினும் அவர் மனத்தில் குறையும் இருந்தது. தமக்குப்பின் முடியணிந்து குடிபுரக்கும் கோமானுகச் சித்தார்த்தர் வாழவேண்டும் என்பதே தந்தையின் கருத்து. ஆனுல், சித்தார்த்தர் நிலை அதற்கு மாருயிருந்தது. மன்னர்க்குற்ற வனவேட்டையைச் சித்தார்த்தர் விரும்புவதில்லை.

அன்புள்ளமும் அருளநோக்கும் இன்சொல்லும் அமைந்த சித்தார்த்தர் அரசைத் துறப்பார்; தவக் கோலம் பூண்பார் என்பதைக் கண்டார் சுத்தோதனர். எப்படியும் மைந்தனை அரசு நிலையில் நிறுத்தக் கருதினுர். வருத்தத்தை உணராத வகையில் மைந்தரை வளர்த்தார். ஏவலிளைஞரையும் இதம்புரியும் தாதியரையும் காட்சிக்கினிய பொருள்களையும் அரசர்க்குரிய ஆடை அணிகளையும் அமைத்துத் தந்தார். அமரர் வாழ்மனையன்ன மாளிகையொன்றும் அதையடுத்துப் பூங்காவும் செய்குன்றும் சிறக்கச்செய்தார். செல்வ மகன் சிறந்த மன்னனுக வாழவேண்டுமென்று விரும்பிற்று மன்னன் மனம்.

## தோழர்கள்

சித்தார்த்தர் பிறந்த சின்னுட்களில் கோதமியும் கருவுற்ருள். அவளும் ஆண்மகவே பெற்ருள். அப்

பிள்ளைக்கு நந்தன் எனப் பெயரிட்டார் சுத்தோதனர். ஏறக்குறைய ஒத்த வயதினராகிய சித்தார்த்தரும் நந்தனும் இணையுற்றனர். சித்தார்த்தரைப் போலவே நந்தனும் சிறப்புடன் வளர்ந்தான். உற்ற பருவத்தே கல்வி கற்கத் தொடங்கினன். மகனறிவு தந்தையறிவு என்பது பொய்யாகாதவாறு கல்வி அறிவுகளிற் புகழ்பெற்றான். அரசர்க்கு உரிய போர்க்கலைகளிற் பயின்று தேர்ந்தான். தேரேறி யானையூர்ந்து பரியுகைத்துப் பயின்றான். சிற்றன்னையின் செல்வப்பிள்ளையாகிய நந்தனிடம் நனி யன்பு கொண்டிருந்தார் கௌதமர்.

சுத்தோதனர்க்கு உடன்பிறந்தவன் ஒருவன் இருந்தான். அவன் பெயர் சுக்கிலோதனன். அவனுக்கு ஆனந்தன், தேவதத்தன் என இரு ஆண்மக்களிருந்தனர். அவர்களுள் தேவதத்தன் விற்பயிற்சியில் வல்லவன். உடன்பிறந்த தம்பிபோலக்கருதி தேவதத்தனிடம் கௌதமர் பழகினர். அரண்மனையிலும் வெளியிலும் சித்தார்த்தருடன் கலந்து பழகினர்கள் ஆனந்தன் தேவதத்தன் ஆகிய இரு தோழர்கள்.

## பொறாமை

சித்தார்த்தர் இளவரசர்; மேலும் அருந்தவப் புதல்வர்; கல்வி அறிவுகளிலும் நற்பண்புகளிலும் தலை சிறந்தவர்; அன்பே உருவாய்ப் பிறந்தவர்; ஆதலால், சுத்தோதனரிடம் பெருமதிப்புப் பெற்றார். ஏனையோரும் சித்தார்த்தரைச் சிறப்புச் செய்தனர். எனவே சித்தார்த்தர் வெளியே செல்லும்போது ஆடை அணிகளால் அழகுப்படுத்துவார் பலர். ஊர்திகளைக்கொண்டு

நிறுத்துவார் சிலர். பாங்கராகச் சூழ்ந்து செல்வாரும் வெண்குடை தாங்கிச் செல்வாரும் பற்பலர்.

சித்தார்த்தர் பெற்ற சிறப்புக்கள் அனைத்தும் தனக் குற்றனவாகவே கருதிக் களித்தான் ஆனந்தன். அர சுரிமை யுடையவன்; தன் தாயின் அன்பினால் வளர்ந் தவன்; தனக்குமுன் பிறந்தவன்; பலராலும் நனி பாராட்டற் குரிய நல்லோன் என்னும் காரணம் பலவற் றையும் கருதி நந்தனும் சித்தார்த்தரைச் சிறப்புச் செய் தான். ஆனால், தேவதத்தன் கருத்து முற்றும்மாறுபட் டிருந்தது. அரண்மனைச்சிறுவர் நால்வருள்ளும் சித் தார்த்தன்மாத்திரம் ஏன் பெருமதிப் புறல்வேண்டும்? என்னும் வினா அடிக்கடி அவன் மனத்தில் தோன்றும். தக்கவிடை கிடைக்காமல் தானே மறையும். மீண்டும் மீண்டும் அடிக்கடி இக்கேள்வி அவனுளத்தில் தோன் றித் தோன்றி நிலைபெற்றது. அக்கேள்வியால் விளைந்த பயன் பொறாமையாக முடிந்தது. நாளடைவில் பொறா மையின் உருவம் வெறுப்பாக மாறியது. 'சீ, இவனுக் கென்ன சிறப்பு? இவன்மாத்திரம் எதனால் மிகுந்தவன்? எவர்க்கு மில்லாத்திறன் எதனை இவன் பெற்றுளான்' என எள்ளித் தூற்றினான். எனினும் அவன் ஏதும் செய்தற்கின்றி மனம் புழுங்கி யிருந்தான். தேவதத்தன் மனதை கலக்கிப் பதுங்கிக்கொண்டிருந்தது பொறாமை.

## பறவை

சித்தார்த்தர்க்கென அமைக்கப்பட்டது பெரு மாளிகை. அதையடுத்து அமைக்கப்பட்டது அழகிய பெரிய - இளமரக்கா. அக்காவில் பொழுதுபோக்குக்

காகச் சித்தார்த்தர் விளையாடுதலும் உலவுதலும் வழக்கம். இடை இடையே ஆங்குச் சென்று அழகிய காட்சிகளைக் கண்டு களி கூர்தலும் உண்டு. அங்ஙனமே அவர் ஒருநாள் மாலை அங்கே உலவிக்கொண்டிருந்தார். ஆருயிர்த் தம்பிமார்களும் அவருடனிருந்தார்கள்.

அவர்களுடன் சென்ற தேவதத்தன், தன் மனத்துக்கு உகந்த சிலருடன் சிறிது தொலைவில் உலவினான். அவன் வில்லும் கணையும் கையில் ஏந்தியிருந்தான். பறவை, விலங்கு ஆகிய ஏதோ ஒன்றை அடித்து வீழ்த்துவதில் தேவதத்தன் பெருமகிழ்ச்சி யுடையவன். ஆதலால், அவன் பார்வை, தன் கணைக்கொரு குறிக் கோளையே நாடியிருந்தது. அதற்கேற்ப வானத்தே பறவைத் தொகுதி ஒன்று பறந்தது. மாத்திரைப் போதில் தேவதத்தன் வில்லைக் குனித்துக் கணையைத் தொடுத்து விடுத்தான். கணை கடுகிச் சென்றது. பறவை ஒன்றின் உடலில் தைத்தது. பறவை வாய்விட்டலறி வந்து வீழ்ந்தது.

கணை ஏறுண்ட பறவை, சித்தார்த்தர் அருகில் எதிரில் விழுந்தது. அதைக்கண்டு, அவர் பதைத்தார்; துடித்தார்; கண்களில் நீர் துளித்தார். விரைந்தெடுத்து மார்போடணைத்தார்; கணையை யகற்றினார். அப்புண் ஆறுவதற்கான மருத்துவம் புரிந்தார். நோதலும் சாதலும் அற்றுப் பறவை பிழைக்குமாறு காக்க வழி யமைத்தார்.

தன் கணைக்குறியாகிய பறவை சித்தார்த்தரருகில் விழுந்ததைப் பார்த்திருந்தான் தேவதத்தன். பாங்கன் ஒருவனை ஏவினான்; 'பறவையை வாங்கிவா' எனப்

பணித்தான். சென்றவன் சித்தார்த்தரை அண்மிப் பறவையைக் கேட்டான். 'என் எதிரில் விழுந்தது பறவை. என் இரக்கத்திற்கு உரியதாயிற்று; காப் பாற்றப்பட்டது. இனி அது தேவதத்தனுக்குக் கிடைக் காது. நீ மீண்டுசெல்' என்றார் சித்தார்த்தர். அவன் திரும்பிச்சென்று செய்தி கூறினன். அச் சொற்கள் தேவதத்தன் மனத்தை வருத்தின. ஆயினும் ஏது செய் வான்! உட்பகைகொண்டு ஒன்றுபட்டிருந்தான். அகம் வேர்த்து புறம் நட்டு உறைந்த தேவதத்தனேடு முன் னிலும் பேரன்புடன் - உள்ளன்புடன் பழகினர் சித் தார்த்தர். சின்னுட்களில் கணைப்புண் ஆறி நலனுற்றது பறவை.

## பெருவெறுப்பு

ஆற்றங்கரை மரம்; உரோகிணி யாற்றின் கரையில் ஓங்கி வளர்ந்திருந்தது; அஃது ஆலமரம்; பெருங்காற்று வீசியதனல் வேரோடு பெயர்ந்து வீழ்ந்தது. செழித் தோங்கி, கிளைத்து, அடர்ந்து, படர்ந்திருந்த அம்மரம் ஆற்றின் குறுக்கே பட்டது. அதனல் நீரோட்டம் தடைப்பட்டது; தேக்கங்கொண்டு கரை புரண்டது; ஊர்க்குள் பாயத் தொடங்கியது. தெருக்களெல்லாம் நீர்வெள்ளம். வீடுகளெல்லாம் நீராழிமண்டபங்க ளாயின.

நகரமக்கள் அஞ்சி நடுங்கினர். மன்னன், மனம் மருண்டான். வீழ்ந்த மரத்தை விலக்குதற்கு வீரர் பலர் சென்று முயன்றனர்; வீண்பாடெனக் கைவிட்ட னர். வேறுவழியில்லை என வேந்தனும் வாளாவிருந்

தான். எவரும் கைவிட்ட இம்முயற்சியில் சித்தார்த்தர் ஈடுபட்டார். உள்ளத் திறமையையும் உடல் வன்மையையும் பயன்படுத்தி ஆலமரத்தை அகற்றிவிட்டார். தேங்கியநீரை யாறு வாங்கிச் செலுத்தியது. ஊருள் பாய்ந்த நீரும் வற்றியது. மக்கள், மருளற்றுத் தெருளுற்றனர்.

மைந்தன் மைந்தினைக் கண்டு சுத்தோதனர் ஈன்ற பொழுதிற் பெருதுவந்தார். நந்தன் நனி மகிழ்ந்தான். கௌதமி பெருமிதமுற்றாள். நாட்டு மக்கள் நாவார வாழ்த்தினர். வெள்ளத்தால் நேர்ந்ததொல்லையைப் போக்கி வாழ்வளித்த பிள்ளையைப் போற்றாதாரும் உளராவரோ! ஆயின் தேவதத்தன் ஒருவன்மாத்திரம் புறம் மகிழ்ந்து அகம் புழுங்கினான். தன்னோடொத்த சித்தார்த்தன் தனிப்பெருமை யடைவதை அவன் விரும்பவில்லை. ஆதலால், அவன் மனத்தே வளர்ந்தோங்கியது பெருவெறுப்பு.

## இளவரசுப் பட்டம்

கபிலவஸ்துவில் கல்வியிற் சிறந்த பெரியார் ஒருவர் இருந்தார். அவர் பெயர் விசுவாமித்திரர். அவரிடம் சித்தார்த்தர் கல்வி கற்றார்; கலைகளில் தேர்ந்தார். பதினைந்து வயது நிறையப் பெற்றார் சித்தார்த்தர். உருவும் திருவும் உற்று, உரிய பருவமும் உற்ற மூத்தபிள்ளைக்கு இளவரசுப்பட்டம் சூட்டச் சுத்தோதனர் கருதினார். தமது கருத்தைத் தக்காரிடம் கூறினார்; அமைச்சரனுசாவினார்.

எவ்வாற்ருனும் தகுதியுடைய சித்தார்த்தர் இளவரசுப்பட்டம் பெறுவதை எவர் தடுப்பர்! இனிதே இசைந்தனர் எல்லோரும். நந்தன் பெரிதும் உவந்தான்; சித்தார்த்தர் பெற இருக்கும் பட்டத்தைத் தன் வாழ்வாகக் கருதினன். நகரமெங்கும் நன்கு அலங்கரிக்கப் பட்டதால் கண்கள் விருந்துகொண்டன.

சிறப்பனைத்தும் ஒன்றுசேர, சித்தார்த்தர் பெற்ருர் இளவரசுப் பட்டம்.

## திருமணம்

இளவரசர் எல்லாத் துறையிலும் கருத்தைச் செலுத்தினர், தம் நாட்டுக் குடிகள் நல்வாழ்வு பெற நாடினர். உழவுத்தொழில் ஓங்கிவளர வழிதேடினர். காட்சிக்கு எளியராயிருந்து ஆட்சியில் ஈடுபட்டார். அந்நிலையில் அவர் பத்தொன்பது வயதடைந்தார், சித்தார்த்தர் மணப்பருவமுற்ருர் எனச் சுத்தோதனர் கருதினர்.

மகதநாட்டில் கோலியர் மரபிலேயே சித்தார்த்தர்க்கும் பெண்கொள்ளக் கருதினர். மாயாதேவியார் பிறந்த குடியில் சுப்பிரபுத்தன் என்பவனுக்கு ஒரு பெண்ணணங்கு அழகாலும் அறிவாலும் மேம்பட்டிருப்பதை அறிந்தார். அம்மாதர் மணியைச் சித்தார்த்தர்க்குத் துணைவியாக்கினர். குலம், நலம், குணம் ஆகியவற்ருல் அமைந்த மனையாளை மணந்த சித்தார்த்தர் மலிபேருவகை கொண்டார். மலரும் மணமும்போல் மனங் கலந்து வாழ்ந்தார்.

"அன்னை தயையும் அடியாள் பணியும் மலர்ப்
பொன்னின் அழகும் புவிப்பொறையும்—இன்னியல்சேர்
வேசி துயிலும் விறல்மந் திரிமதியும்
பேசில் இவையுடையாள் பெண்"

என்பதற்கிணங்க அவ்வம்மையார் சித்தார்த்தருக்கு வாய்த்தார். அவர் பெயர் யசோதரை. இணையற்ற இன்பத்தைச் சித்தார்த்தருக்குத் தருவதாயிற்று திருமணம்.

## இன்ப நுகர்ச்சி

துறவிக்குரிய உறுப்பிலக்கணம் கண்டு, 'அரசியலை வெறுத்துத் தவத்துறை ஏற்பார் சித்தார்த்தர்' என நிமித்திகன் கூறிய மாற்றம் மன்னர் மனத்தை மருட்டிக்கொண்டிருந்தது. அன்றியும் தம் மகன் பருவத்திற்கேற்பப் பல்லாற்றானும் இன்புறல் வேண்டும் என்னும் பெருவிருப்பும் சுத்தோதனர்க்கிருந்தது. எனவே இன்பப்பொழுது போக்கிற்குகந்த எல்லா வாய்ப்புக்களையும் ஆக்கியிருந்தார் சித்தார்த்தர்க்குத் தந்தையார். துயர்க்காட்சி காணின் சித்தார்த்தர் மனம் மாறித் துறவு பூண்பார் என்ற கருத்து சுத்தோதனர்க்கு உண்டு. ஆதலால், தம் புதல்வர் கண்ணெதிரில் துயர்ப்பாடு தோன்றாதவகையில் ஏற்பாடுகள் செய்திருந்தார்.

காதல் வயப்பட்ட இருவர், கருத்தால் ஒன்றுபட்டு ஆதரவு உடையவராய் அமைந்தால் அதனினும் பெற இருக்கும் இன்பப் பேறு ஏது? இஃது ஔவைப் பிராட்டியார் கருத்தும் ஆகும். இக்கருத்தோடு ஒத்திருந்தது சித்தார்த்தர் மணவாழ்க்கை.

பிரிவு ஒன்று உண்டென்னும் கருத்தின்றி இயைந் திருந்தனர் யசோதரையும் கௌதமரும். அவ்விருவரும் ஒருவரையொருவர் கருதுவதுஅன்றிப் பிறகருத்தின்றி உறைந்தனர். பொழில் விளையாட்டு, புனல் விளையாட்டு, இசை நுகர்ச்சி, கவின்காட்சி, கடற்காட்சி, மலைக்காட்சி, காவுலா, படகுலா, தென்றலின்பம், நிலவின்பம் ஆகிய வற்றில் ஒன்றும் குறைவின்றிக் கொண்டனர் இருவரும்.

நல்லிலக்கணமும் நயகுணமும் வாய்த்த யசோதரை யின் காதல் ஆட்சிக்கு உட்பட்ட சித்தார்த்தர் தமது அரசாட்சியை மறந்தார். ஆயினும் அதன் பொறுப் பைச் சுத்தோதனர் என்றும் போல் நன்குற்றினுர். எனினும் பிறர் சித்தார்த்தரை எள்ளினர். 'இளவரசர் இன்பப் பொழுது போக்கு ஏற்புடைத்தன்று' என்று மன்னரிடமும் கூறினர். அவர்களுக்கேற்றவாறு விடை யிறுத்தார் தந்தையார். இளவரசர் துறவு பூண்பாரோ என அடிக்கடி துணுக்குற்ற சுத்தோதனர், சித்தார்த்த ருடைய இன்ப நுகர்ச்சியால் கவலை யொழிந்திருந்தார். இடையில் பிறர் தூற்றும் பழியால் இருதலைக் கொள்ளி யானுர் மன்னர். எனினும் மன்னர்க்கு மனக்களிப் பையே ஊட்டிற்று சித்தார்த்தருடைய இன்ப நுகர்ச்சி.

## தகுதி

அரசியலை மறந்து அந்தப்புரம் அகலாது அல்லும் பகலும் இன்பப் பொழுது போக்குகிறுர் சித்தார்த்தர் என்னும் பேச்சு நகர மக்களிடையே காட்டுத் தீப் போல் பரவியது. அரசர்க்கும் பலர் பலவகையில் எடுத் துரைத்தார்கள்; இனியும் வாளாயிருத்தலாகாது என இயம்பினர். என் செய்வார் சுத்தோதனர். தம் மகனைக்

கண்டார். "இளவரசே, எவ்வகையிலும் இந்நாட்டு ஆட்சியில் நீ கருத்து செலுத்துவதில்லையே! யாது காரணம்? அதுபற்றிக் குடிகள் குறைகூறுகிறார்கள். இனிச் செய்வன செய்து குடிகள் குறையை நீக்குக" என்றனர்.

தந்தை சொல்கேட்ட மைந்தர் உணர்ச்சிபெற்றார்; "ஆம்; என் செய்கையினால் பிறர் என்னை இகழ்தல் பொருந்தும். எனினும் என் தகுதியை அவர்கள் தக்கவாறு உணரவில்லை. தாங்கள் என்மீது அருள்கூர்ந்து என் நிலையை அவர்கள் உணர ஒருவாய்ப்புத்தாருங்கள்" என வேண்டினார். 'சித்தார்த்தா, நீ உரைப்பது எனக்கு விளங்கவில்லை தெளியக் கூறு" என்றார் தந்தை "கூறுகின்றேன்; தந்தையீர், இந்நாட்டில் உள்ள வீரர்கள் அனைவரும் ஒருங்கு கூடவேண்டும். அவரவரும் பெற்றுள்ள திறனைக் காட்டவேண்டும். எல்லோரினும் மிக்கார் யாவரென உணர்தல் வேண்டும்" என்றார். சித்தார்த்தர் கூறியவாறு சுத்தோதனர் நாடு முழுதும் செய்தி போக்கினர்.

நாள் ஒன்று குறிப்பிடப்பட்டது. அந்நாளில் வீரர் பலர் கபிலவஸ்துவில் திரண்டனர். அவரவர்கள் வேல், வாள், வில், சிலம்பம் ஆகியவற்றில் தமக்குள்ள திறமையைக் காட்டத் தொடங்கினர். பின்னர் யானை, குதிரை, தேர் ஆகியவற்றின் ஏற்றங்களையும் புலப்படுத்தினர். அவர்களுடன் சித்தார்த்தரும் கலந்துகொண்டார். இப்பெரும் போட்டியில் முதல்வராக வெற்றி பெற்றவர் சித்தார்த்தரே. இவ்விளைவினால் சுத்தோதனரும் பிறரும் சித்தார்த்தரைப் பெரிதும் மதித்தனர். எல்லாவகையினும் சித்தார்த்தரிடம் அமைந்திருந்தது தகுதி.

# 2. அறிவியல்.

## தந்தையார் முயற்சி

நிமித்திகன் கூற்றை நினைத்துப் பெரிதும் பாடு பட்டார் தந்தை; துன்ப நிகழ்ச்சி என்பது ஒன்று உலகி லிருப்பதாகச் சித்தார்த்தர் அறியாதவாறு வைத்திருந் தார். எங்கிருந்தாலும் எங்குச் சென்றாலும் எது செய் தாலும் எது கண்டாலும் இன்ப நிகழ்ச்சியே சித்தார்த் தரால் அறியப்பட்டது. ஐம்புலன்களாலும் அளவு கடந்த இன்பங்களையே நுகர்ந்த சித்தார்த்தர் பிறர் துன்பங்கண்டவரல்லர். இங்ஙனம் அவர் இருபத் தொன்பது வயது நிறைந்தவராயினர், இளம்பருவத் தின்பம் பதினைந்து யாண்டுகளும் அரசியலின்பம் நான்கு யாண்டுகளும் மனைவியோடின்பம் பத்தாண்டு களுமாக இன்பமே கண்ட சித்தார்த்தர்க்குத் துன்ப மறியும் வகை ஏது! இத்துணையாண்டுகள் வரையில் சித்தார்த்தர் மனம், உலக வாழ்வு, இன்பமே நிறைந்த தெனக் கருதுமாறு காத்துவந்தது தந்தையார் முயற்சி.

## நான்கு காட்சிகள்

1. தோன்றிய நாள் தொட்டு இன்பவாழ்வே கொண்டிருந்த இளவரசர் ஒருநாள் தேரேறி ஊர்வலம் வந்தார். அப்போது அவர் கண்ணிற்பட்டது துன்பிய லான முதற்காட்சி. ஏழை மகன் ஒருவன்; இரந் துண்டு வாழ்பவன்; இல்லந்தோறும் சென்று, இருகை ஏந்தி ஏற்பதை அவர் கண்டார்; என்றும் காணுக்காட்சி அது; அவர் மனதைப் புண்படுத்தியது. உடனே அவ

னைப்பற்றிய செய்தியை அறிய விரும்பினார், தன் பாங்கன் உதாயி என்பவனை நோக்கி "என்னே, இம்மகன் செயல்? இதனை விளங்க விளம்புக" என்றார்.

"இளவரசே, இவ்வுலகில் வறுமையால் வாடும் மாந்தர் பலர்; அவர் பிறரிடம் பிச்சை ஏற்றே வாழ்கின்றனர். அவ்வறியாருள் இம்மனிதனும் ஒருவன்" என்றான் உதாயி.

"அந்தோ, பல்லெலாம் தெரிய, இருகை விரித்து இல்லெலாம் இரந்துண்ணும் இம்மகன் நிலை வருந்தத்தக்கது" என நினைத்தார். கண்களில் நீர் கசிந்து திரும்பினார். இதனால் வறுமை என்னும் துன்பத்தை உணர்ந்தார் சித்தார்த்தர்.

2. மற்றொரு நாள் சித்தார்த்தர் தேரேறித் தெருவழிச் சென்றுகொண்டிருந்தார். நோய்வாய்ப்பட்டானொருவன் அவர் கண்ணில் தோன்றினான். அவன் படுந்துயரம் அருளுருவாம் அண்ணல் சித்தார்த்தர் உள்ளத்தை வாட்டியது. பிறந்த நாள் தொட்டுப் பிறர் துயரம் காணாப் பெருமான் பெரிதும் வருந்தினார். அவனைப்பற்றியும் அவர், பாங்கனிடம் கேட்டார்.

"அருள் வடிவே, பிறந்த உயிரனைத்தினுக்கும் பிணி உண்டு. பிணியின்றி வாழும் உயிர் காணப்பெறல் அரிது; அரிதினும் அரிது" என்றான் உதாயி.

"ஆ! பிணியா! பிணியினால் உயிர்கள் வருந்தும்; பெரிதும் வருந்தும் என்பதை இப்பிணியாளனைக் காணும்போதே தெரிகின்றது; தெற்றெனத் தெரி

இன்றது" எனக் கசிந்துருகினர் சித்தார்த்தர். அவர் இரண்டாவதாக உணர்ந்தது பிணித்துயர் ஆகும்.

3. பிற ஒருநாள் சித்தாத்தர் வெளிச் சென்றார். நரைத்தும் திரைத்தும் மூப்புற்றவன் ஒருவன். தலையாட, உடல் நடுங்க, கால்தளர, தள்ளாடித் தள்ளாடித் தடி ஒன்று ஊன்றி எதிர்பட்டான். அவன், கண்கள் குருடாகிக் காது செவிடுபட்டுப் பற்களுதிர்ந்து காணப் பட்டான்.

அம்முதியவனைக் கண்ட சித்தார்த்தர் சித்தம் உருகினர்; சிந்தையழிந்தனர். "காணப்பொருத இந்நிலை யாது?" என வினவினர் பாங்கனை.

"இளங்கோவே, இதுதான் முதுமை. இதனை மூப்பென்பது மரபு. மக்கள் வயது ஏற ஏற மூப்படைகின்றனர். நரையும் திரையும்மூப்பின் அறிகுறிகளாகும். மூப்பு ஒன்றே மக்கள் வாழ்வை வீழ்த்துவது" என விளக்கினன் அவன்.

"ஐயோ! மாந்தர் மாண்பு இத்துணைத்தோ! எனக்கும் பின்னெரு நாள் இந்நிலை எய்துமன்றோ! என எண்ணி ஏங்கினர் இளவரசர். இரு கண்களிலும் நீர் வாரத் துன்புற்றார். தேரைத் திருப்புமாறு கட்டளையிட்டார். கடுகிச்சென்று மாளிகையடைந்தார். மனச் சோர்வுடன் இருந்தார். இம்மூப்புத்துயர் மூன்றாவதாகச் சித்தார்த்தர் கண்ட காட்சி.

4. வேறொரு பகல் சித்தார்த்தர் தேரிவர்ந்து வெளிச்சென்றார். எதிரில் பிணமொன்றைச் சுமந்து

மக்கள் திரண்டுவந்தனர். அவர்களுள் சிலர் அழ, சிலர் மனம் வருந்தி, முகம்வாடி, உடல் சோர்ந்து, தொடர்ந்து வந்தனர். அதிலும் அவர்க்கு வியப்பும் ஐயமும் தோன்றியது. பழையபடி அதைப்பற்றியும் அவர், யாங்கனைக் கேட்டார்.

“கருணைமூர்த்தியே இப்போது நம் எதிரில் வருவது பிணம். அது உயிரிழந்த உடல். அதைச் சுமந்து செல்கின்றனர் சுற்றத்தாரும் மற்றவரும். சுடுகாட்டில் எரித்தோ இடுகாட்டில் புதைத்தோ திரும்புவர்.

“ வாழ்வாவது மாயம் இது (உடலைச் சுட்டிக்காட்டி)
மண்ணாவது திண்ணம் ”

என்பதும்

“ முடிசார்ந்த மன்னரும் மற்றுமுள்ளோரும்
முடிவிலொரு பிடிசாம்பராவர் ’,

என்பதும் இதுபற்றித்தான். உலகில் பிறந்தவர் எவரும் ஒரு நாள் இறந்தே போவர் ” என விளக்கினான் யாங்கன். இச் சாக்காட்டுக் காட்சி நான்காவதாக அமைந்தது. இயல்பாகவே இரக்கம் மிக்க சித்தார்த்தரை மேலும் இரங்கி யுருகுமாறு செய்தன இந் நான்கு காட்சிகள்.

## சிந்தனை

வறுமை, பிணி, மூப்பு, சாக்காடு என்னும் இவை நான்கைப் பற்றியும் நன்கு கருதினார் கௌதமர். பொருளிலார்க் கிவ்வுலகமில்லையாதலால் வறுமையுடையவன் பெருந்துன்பம் எய்துவான். நோயற்ற வாழ்வு

குறைவற்ற செல்வமென்றதிலிருந்து நோயுற்ற வாழ்வு குறைவுற்ற செல்வம் என்பது தெரிகிறதல்லவா? ஆதலால், பிணியாளனுறுவதும் பெருந்துயரேதான். மூப்புடையார் எவரும் முன்னை நலன் ஏதும் எய்தாமல் ஏங்குவாரன்றோ! ஆகையினல் மூப்புடையவனும் மிகு துயருடையவனே. சாதலைப்பற்றிக் கூறவும் வேண்டுமோ! ஒருவற்கு உயிரினும் சிறந்த பொருள் ஏது. அப்பொருளை விடுகிறான் என்றால் அஃது எப்படிப்பட்ட துன்பமாயிருக்கும்! 'சாதலின் இன்னாததில்லை' என்பதை எண்ணிப் பார்த்தால் அது எத்துணை உண்மையான மொழி என்பது தெரியும். இவ்வாறு அமைந்த துயர்களிடையே வாழும் நமது வாழ்க்கை பெருமையுடையதாகுமா? பிறந்திறக்கும் பெருமையுடைய நமக்கு அரசு, ஆடம்பரம், இன்பம் முதலியன ஏன்? செத்தாரைப் போலத் திரிந்து காலம் கழிக்கலாமே, எனப் பலப்பலவும் எண்ணினார். அவர் நெடுநேரம் மெய்மறந்து, சிந்தித்துக்கொண்டிருந்தார்.

இடையே ஏவலர் வந்து சிந்தனையைக் கலைத்தனர். ஆதலால், அவர் அந்த இடம்விட்டு எழுந்தார். அந்தப்புரஞ் சேர்ந்து அளவளாவிக்கொண்டிருந்தார். இருப்பினும் அவர் மனம் அடிக்கடி வறுமை, பிணி, மூப்பு, சாக்காடு ஆகிய நான்கையும் எண்ணி எண்ணி இன்னலுற்றது. காட்டு விலங்கு கண்டு அஞ்சியவனுள்ளத்தையும் பேயறைந்தவன் மனத்தையும் ஒத்திருந்தது சித்தார்த்தருடைய சித்தநிலை. ஓய்வின்றி அவரை உறு துயர்க்கடலி லீர்த்துத் தள்ளுவதாயிருந்தது அவர் சிந்தனை.

### முனிவர் காட்சி

**எங்கும் தளிர் மரங்கள்;** இடையிடையே கண்ணைப் பறிக்கும் கவின் மலர்க் கொத்துக்கள். பிஞ்சுகளும் காய்களும் நிறைந்த குலைகள் குலுங்கி யசைய நின்ற மரங்கள். கனிகளைக் கொத்தித் தின்று களிப்புடன் கூடிக் குலாவும் பறவைகளின் பேரொலியால் மண இல் லம்போல் காட்சியளிக்கும் மரங்கள் சில. மானினங்கள் தாவ, மயிலினங்கள் ஆல, தத்தையினங்கள் மழலை மிழற்ற, குயில்கள் கூவ, நாகணவாய்ப்புட்கள் நவில, அருவி ஒலியோடு ஒலித்து சில்வண்டும் தேன்வண்டும் இசைக்க, இமையவர் வாழ் கற்பகச் சோலையோடு நிக ராகிய சோலை. அதில் ஒரு நீர்நிலை, அதன் எதிரில் அமைந்தது மணற் பரப்பு. அப்பரப்பினிடை அழகிய தெற்றியில் அமர்ந்திருந்தார் சித்தார்த்தர்.

தாமரை மலர்கள் இதழ்விரிந்து எழில் செய்தன. செந்தாமரையும் வெண்தாமரையும் எதிர் எதிர் அசைவதின் தோற்றம் ஒன்றுக்கொன்று நலன் கேட்டு உசாவுவதோடொத்திருந்தது. மலர்கடோறும் அமர்ந்துமீளும் வண்டின் செயல் செல்வர் மனைபுகுந்து உண்டுவந்து மீளும் விருந்தினர் நினைவை எழுப்பியது. மலர்களிடையுலவும் அன்னப்பறவைகளின் தோற்றம், நல்ல மனத்திடை பயிலும் நல்லெண்ணத்தோடொத்திருந்தது.

தன்னை மறந்து 'கண்மூடி' தாமரைத் தண்டுகளைச் சார்ந்துள்ள தவளைகளைப் பற்றுதற்கு உலவின பாம்பினங்கள். இன்பச் சோலையில் இனிதமர்ந்திருந்த சித்தார்த்தருள்ளத்தைக் கலைத்துத் தன்னுரிமைப் படுத்திக்

கொண்டது துயரம். உலகமும் உயிர்களும் உயிர்களைச் சார்ந்துள்ள துன்பங்களும் துன்பங்களால் வருந்தும் நிலைமையும் அவர் கண்முன் காட்சியளித்தன. அதனால் சித்தார்த்தர் கண்ட முடிவென்ன? உலகம், உயிர்கள், உடல், இளமை, செல்வம் ஆகியவை நிலையற்றவை என்பதுதான்.

அதே நேரத்தில் சற்று தொலைவில் ஒருவர் வந்து கொண்டிருந்தார். அவர் காவியுடை உடுத்தவர். கையில் கமண்டலம் கொண்டிருந்தார். தெளிந்த அறிவினால் மகிழ்ந்த மனமும் மலர்ந்த முகமும் உடைய அப்பெரியார் சித்தார்த்தரிருக்கும் இடத்தை அணுகினார். அவரைக் கண்டு சித்தார்த்தர் எழுந்து எதிர்கொண்டார்; இருக்கச் செய்தார். தாமும் அருகில் அமர்ந்தார். அன்புரைகளால் அளவளாவினார்.

வந்த பெரியார் துறவி என்றும் ஞானி என்றும் சித்தார்த்தர் உணர்ந்தார். வறுமை, பிணி, மூப்பு, சாக்காடு ஆகிய நான்கினைப்பற்றிய ஐயங்கள் பலவற்றை அவரிடம் கேட்டார் இளவரசர். கேள்விகளுக்கு உற்ற விடை கூறினார் துறவி. ஆதலால், சித்தார்த்தர் உலகியலை உள்ளவாறறிந்தார். தக்க சமயத்தில் சித்தார்த்தர்க்குத் தகுநெறிகாட்டும் துணையாயிற்று முனிவர் காட்சி.

## உள்ளத் தெளிவு

மனமயக்கத்தை அறியாமை என்றும் மனத் தெளிவை அறிவுடைமை என்றும் பெரியோர் கூறு

வர். அறியாமையே பிறவிக்குக் காரணம்; அப்பிறவியும் இழிபிறவியாயமையும்.

"பொருளல்லவற்றைப் பொருளென் றுணரும்
மருளானும் மாணுப் பிறப்பு".

என்பது செந்நாப்போதார் செப்பிய செம்மொழி.

உலகின்பங்களில் மூழ்கி இன்பமே உலகியல் எனக் கருதியிருந்தார் கௌதமர். பின்னர் வறுமை முதலிய துன்பியல்புகளையும் கண்ணால் கண்டார். காட்சியால் விளைந்த ஐயத்தை ஆராய்ந்தார். அதனோடு துறவியினிடமும் கேட்டுத் தெளிந்தார். இந்நிலையில் அவர் உள்ளம் உறுதி பெற்றது. மக்கட்பிறவி பல துன்பங்களையுடையது. அத்துன்பங்களை ஒழிப்பதற்கு வழி தேடவேண்டும். அவ்வழி இல்லறத்திலிருந்து அறிய முடியாதது. துறவறத்தில் தான் அவ்வழியை அறியமுடியும். எனவே யான் துறவுகொண்டு, இன்ப நெறி காண்பேன். என்னும் நிலையிலாக்கியது அவரது உள்ளத்தெளிவு.

## மகப் பேறு

பற்றற வழிகோலிக்கொண்டிருந்த சித்தார்த்தர் தனியிடத்தில் அமர்ந்திருந்தார். அவருள்ளத்தில் பல எண்ணங்கள் சூழ்ந்திருந்தன. அப்பொழுது அரண்மனைத்தோழி ஒருத்தி சித்தார்த்தர் இருக்குமிடம் நாடி வந்தாள். அவள் புன்முறுவல் பூப்ப, களிபார்வை பரப்பி, கடுநடை கொண்டு வந்தாள்.

இளவரசே, எம் தலைவி, யசோதரையம்மையார் மகவு ஈன்றனர். அம்மகவு ஆண் மகவு. எம் அரசியாருற்ற

இன்பம் பெருங்கடலினும் பெரிது. மாயாதேவியார்க் குரிய மகிழ்ச்சியையும் கூட்டிப்பெற்ருர் கௌதமியார். சுத்தோதனர் சொல்லொணு உவகையுற்ருர்'' என வழுத்தினன்.

"கடந்த பேர்களும் கடப்பரோ மக்கள் மேல் காதல்'' என்னும் மொழி பொய்யாயிற்று. சித்தார்த்த ரிடம் மாராயத்தைப் பெறவேண்டிய தோழி, வெறுப்பு மொழிகளைச் செவி ஏற்கப்பெற்ருள். அவள் திரும்பிச் சென்ருள். சுத்தோதனரைக் கண்டாள். "அரசே இளவரசர் மகப்பேற்றினுல் மகிழ்ச்சி கொள்ளவில்லை'' என் எண்ணங்களுக்கு இடையூருகவே இப்பிள்ளை பிறந்தது'' என மொழிந்தார்'' என்றியம்பினுள்.

சித்தார்த்தர் கூறிய இடையூறு என்னும் சொல் சுத்தோதனர் மனதிற் பதிந்து பசுமரத்தாணியாயிற்று. இடையூறு என்னும் பொருள்படும் சொல் இராகுலம் என்பது. ஆகவே இடையூருக வுள்ளவன் என்பது தோன்ற இராகுலன் என்னும் பெயரை அம் மகவுக்கு இட்டார் சுத்தோதனர். அரண்மனையில் பிள்ளை பிறந்த செய்தி கேட்டு நகரமாந்தர் நனி மகிழ்ந்தனர். அன்றியும் நாடு முற்றிலும் இச்செய்தி இன்பத்தையே விளைத்தது. ஆனுல், சித்தார்த்தருள்ளத்தில் மாத்திரம் பெருந்துன் பத்தையே பெருக்குவதாயிருந்தது பிள்ளைப்பேறு.

# 3. துறவியல்.

## செலவு

வறுமை, பிணி, மூப்பு, சாக்காடு, ஆகியவற்றிற்குரிய பிறப்பை ஒழிப்பதற்குத் தக்க நெறிகாண்பதே சித்தார்த்தருடைய நோக்கமாயிருந்தது. ஆகவே இனி இங்கிருந்து பயனில்லை துறவு பூண்டாலன்றி நம் கருத்து நிறைவுறாது எனத்தேர்ந்தார் சித்தார்த்தர்.

இரவு - நள்ளிரவு. அரண்மனையில் எங்கும் உறக்கம், யசோதரை தன்னை மறந்து இனிய கனவு உலகத்திலிருக்கிறாள். அவளருகில் இளங்குழவி படுத்திருக்கிறது. அங்நேரத்தில் சித்தார்த்தர் படுக்கையினின்று எழுந்தார். அரசின்பம், அரண்மனை வாழ்வு, இல்லாள் பற்றும், மகவின்மாட்டன்பு ஆகியவற்றை, உதறித் தள்ளினார். தனியே வெளிப்பட்டார். அரண்மனையைக் கடந்து புறத்தடைந்தார். தேர்ப்பாகன் சந்தகன் இருக்குமிடம் வந்தார். அவனை எழுப்பினார். காலமல்லாக் காலத்தில் இளவரசர் எழுப்புவதன் காரணத்தை அறிய அவன் விரும்பினான். எனினும்கேட்பது முறையன்றென வாளா ஒதுங்கி நின்றான். அவனைப் பார்த்து, "காலம் கடத்தாதே; நான் இவரும் பரி கண்டகம் உடனே வரட்டும்'' என்கிறார்.

மறுத்தொரு மாற்றமும் வழுத்தாமல் சந்தகன் சென்றான். அவன் மீள்வதற்குள் சித்தார்த்தர் அந்தப்புரம் சென்று இல்லாளையும் இளம்பிள்ளையையும் பார்த்து வர வேட்கை கொண்டார். ஆயினும் அவ் வேட்கையை அகற்றி வெளிப்போந்தார். அந்த நேர

எல்லைக்குள் கண்டகம் கொண்டுவரப்பட்டது. அரண்மனை வாயிலில் நின்றிருந்த அப்பரிமாவினைப் பார்த்தார். அதைத் தட்டிக் கொடுத்து "வாழ்க்கைத் துன்பினை ஒழிக்கும் நெறியறியச் செல்கிறேன். அதை அறிந்தாலன்றி மீளேன்" என அதனிடம் கூறுவார் போன்று கூர்ந்து நோக்கினார். தாவி அதன் மீதமர்ந்தார். சந்தகனும் அவரோடு சென்றான்.

கண்டகம் கடுகிச் செலுத்தப்பட்டது. அது காடு நோக்கிச் சென்றது. சந்தகன் பெரு வியப்புற்றான். பொழுது விடியும் நேரமாயிற்று. அந்த நேரத்தில் அவர்கள் கடந்த தொலைவு மூன்று யோசனை. கோலிய நாடு கடந்து அநோமநதிக்கரையைக் கண்டார் சித்தார்த்தர். குதிரையை நிறுத்திக் குதித்தார். அன்பு வழியும் பார்வையைச் சந்தகன் பால் செலுத்தினார். தமது கழுத்திலிருந்த சிறந்த மாலை ஒன்றைக் கழற்றி அவன் கழுத்திலிட்டார். தமது முடியை எடுத்து அவன் கையில் அளித்தார். "இம்முடியை என் தந்தையாரிடம் கொடு. இன்றுடன் என் உலக உறவு அற்றது. துன்பங்களும் பிறவியும் அற்று இன்பமெய்தும் நெறி காணும் உறுதி கொண்டு யான் துறக்கின்றேன். இதனை அவர்க்குக் கூறு. இக்குதிரைக்கும் உண்மையே உருவாகிய உனக்கும் நான் செலவு சொல்லிக் கொள்கிறேன். விரைந்து மீண்டு செல்க" என்றனர்.

சந்தகன் கொண்ட சஞ்சலம் அளவிலடங்குவதன்று. கண்களில் நீர் சோரத் தலை கவிழ்ந்து நின்றான். அவன் ஏதோ சொல்ல விரும்புகிறான் என்பதை உணர்ந்

தார் சித்தார்த்தர். "சந்தக. நீ என்பால் உண்மை தவருதவன். அந்த ஒரு காரணத்தாலேயே இன்று உன்னைக் கூட்டிவந்தேன். நீ வருந்துவது தகுதியன்று. என் துறவுக்கு நீ பெரிதும் மகிழ்ந்து விடை தருதல் நலம்" என்ருர்.

"இளவரசே, தங்கள் சொல்லைத் தட்டிப்பேசும் தகுதி எனக்கில்லை. எனினும் என் வேண்டுகோள் ஒன்றுளது. கட்டளையானல் கூறுகிறேன்" என வேண்டி நின்ருன். சந்தகன் வாய்மொழியைக் கேட்க விழைந்தார் சித்தார்த்தர். இசைவை முகக்குறிப்பாற் காட்டினர்.

"இளவரசரே, எண்ணிப்பாருங்கள். தங்கள் வயது முதிர்ந்த தந்தையார், இளம்பருவமுள்ள மகன், பெற்ற தாயினும் மிக்க அன்புகொண்டு வளர்த்த சிற்றன்னை யார், தங்களை மணந்த இளவரசியார் இவர்கள் நிலையை நினையுங்கள். இளவரசரே, இளவரசரே, எவற்றையும் துறப்பதற்குமுன் கருதுதல் நன்று. "எண்ணித் துணிக கருமம்" இணையற்ற அன்பு தங்கள்பால் கொண்டுள்ள என்னைப் பிரிக்காதீர்கள்; திரும்புக. செல்வோம் கபில வஸ்துவை நோக்கி. இது என் வேண்டுகோள்" என இருகை ஏந்தி எதிர் நின்ருன் சந்தகன்,

"அன்பனே, ஆம்; தந்தை, மகன், தாய், மனையாள், நீ ஆகிய அனைவரையும்பற்றி நினைத்தேன்; பல பகல் பல இரவு திரும்பத் திரும்பச் சிந்தித்தேன். தெளிந் தேன். என்ன உறவு? என்பால் ஈடற்ற அன்பு கொண் டிருந்த என் தாய் என்னைவிட்டுப் பிரியவில்லையா? உல

கில் நிலையானது ஏதும் இல்லை. நீ மீண்டுசென்று என் தந்தையிடம் இதைக் கூறு. உலக துன்பங்களை ஒழிக்க ஒருவழி காணுதமுன் திரும்புவதில்லை. இவ்வகையில் வெற்றி காணுவிடில் என் உடல் காட்டில் அழியும" என்றார் சித்தார்த்தர்.

சந்தகன் மீண்டும் பேசும்வன்மை யற்றான். இம் மொழிகளைக் கேட்டிருந்த குதிரை தலைவணங்கிற்று. பின்னர், தலைதூக்கிச் சித்தார்த்தருடைய பரந்த விழி களைப் பார்த்தது. அதன் நிலைமைக்குச் சித்தார்த்தர் மனம் உருகினார். "என்பரியே. பெருநோக்கும் நற் பிறவியுமுடைய பரியே, உனது நல்லியல்புகளுக்குப் பலன் உண்டு. நானறிவேன். துன்பங்களுக்குக் காரண மாகிய மறுபிறவி உனக்கில்லை. கவலையற்றிரு" என வாழ்த்தினர்.

பின்னர், சித்தார்த்தர் தமது உடைவாளை எடுத்தார். முடிந்து விடப்பட்டிருந்த சிகையை இடதுகையால் பற்றினார். அறுத்து எறிந்தார். அப்படியே ஆடை அணிகளையும் களைந்தார். அப்பொழுது எதிரில் ஒரு வேடன் போவதை அவர் கண்டார். அவ்வேடன் கை யில் வில்லும் அம்பும் தாங்கியிருந்தான்; மங்கலான நிறமுடைய ஆடை யொன்றைப் போர்த்திருந்தான். அவனைச் சித்தார்த்தர் அழைத்தார். "என் ஆடை அணிகளை நீ எடுத்துக்கொள். இவற்றிற்கீடாக உன் மஞ்சள் நிறத் துணியை எனக்குக்கொடு" எனக் கேட் டார். அவன் அருகில் வந்து அவ்வுடையை எடுத்துச் சித்தார்த்தர் கையில் தந்து திரும்பிச் சென்றான்.

அப்போது வேடனும் சித்தார்த்தரும் ஒருவரை ஒருவர் பொருந்த நோக்கினர்.

சந்தகன், இவற்றைப் பார்த்து வியப்படைந்தான். சித்தார்த்தர் களைந்த அணிமணிகளை எடுத்துச் சென்று தந்தையாரிடம் தருமாறு செப்பினர். அவன் தன் கருத்தை இழந்தான். கண்டகத்தைத் திருப்பினன். தானும் திரும்பியிவர்ந்து செலுத்தினன். நகரை யடைந்து நிகழ்ந்ததை சுத்தோதனரிடம் நவின்றான்.

சந்தகனைப் பிரிந்த சித்தார்த்தர், வேடனுலளிக்கப் பட்ட மஞ்சளாடையை உடுத்தினர். மேலும் காட்டுக் குள் தவம்புரிவாரை நாடி நடந்தார். தடையற்று நிகழ்ந்தது சித்தார்த்தர் செலவு.

## வைசாலி

சந்தகனைப் பிரிந்து, சிகையையும் நகைவகைகளையும் களைந்தெறிந்து, எளிய உடையுடன் நடந்தார் சித்தார்த் தர். காட்டில் நுழைந்து, நெடுகச் சென்றார். உயர்ந் தோங்கிய மரங்களில் செழித்தடர்ந்த கிளைகளில் தளிர்த் துத் தழைத்த இலைகளையும் காய்கனிகளையும் கண்டார். அழகு நிறைந்த அவ்வனக் காட்சியால் அவர் அடைந்த இன்பத்துக்கு இணையில்லை. பறவைகள் காலை இசை பாடின, வண்டுகள் இனிய கீதங்களை இசைத்தன. பசும் புற்களும் பசுங்கொடிகளும் பச்சிலைகளும் சித் தார்த்தருளத்தில் துன்பங்களைப் போக்கின. இன் பத்தை ஆக்கின.

அதே நிலையில் அவர்கண்ட காட்சிகளில் இளவரசியின் இன்ப உருவங்கள் தோன்றி, அவருளத்தில் உணர்ச்சியை எழுப்பின. அதனால் அவர் ஒரு சிறிது மருண்டார். கபிலவஸ்துவில் ரோகிணி நதிக்கரையில் தாம்பயின்ற சோலைகளையும் நினைத்தார். யசோதரையும் மகவும் ஏவலரும் தொடர்ந்து அவர்கண்முன் காட்சியளித்தனர். அவர்களோடுறைந்த அந்நாள் நிகழ்ச்சிகள் அவர் மனக்கண்களுக்குத் தோன்றின. அவற்றைக் கருதிய சித்தார்த்தர் உள்ளத்தில் மீண்டும் ஓர் ஆற்றல் கிளைத்தது. மருட்சியை மாய்த்துத் தெருட்டியது அவ்வாற்றல். பின்னர் அவர் அவ்விடத்தினின்று நடந்தார்.

சித்தார்த்தர் சிறிது தூரம் கடந்தார். கண்ணெதிரில் ஒருமலை தோன்றிற்று. அது மகததேசத்து பாண்டரமலை. அங்கு உறைந்த அராள ராமரை அடைந்தார். அவ்வந்தணர் நன்னூல் பலகற்றவர்; நல்லறிவு வாய்க்கப் பெற்றவர். பலர்க்கு நல்லறிவுபுகட்டும் நற்பணியாற்றும் நல்லார். அவரிடம் சித்தார்த்தர் கற்கத் தொடங்கினர். தமக்கிருந்த ஐயங்கள் பலவற்றை அவரிடம் கேட்டுத் தெளிந்தார். அதன் பின்னர் அவர் சென்றடைந்த முனிவரின் பெயர் உருத்திரகர். இங்ஙனம் இருவரிடமும் சில உண்மை தேர்ந்து, பின்னர் அடைந்த நகரின் பெயர் வைசாலி.

## அருந்தவத் தொண்டு

வைசாலியில் அந்தணரிடம் ஐயம் தெளிந்த சித்தார்த்தர், மேலும் உண்மை நெறிகாண விழைந்தார். ஆதலால், அங்கிருந்து சென்று வனத்தையடைந்தார். அவ்வடவியில் பல குகைகளுண்டு. குகைகளில் அருந்

தவர் பலர் உறைந்திருந்தனர். அவர்களைச் சித்தார்த்தர் காணவும் ஐயங்களைக் கேட்டுத் தெளியவும் கருதினார். உண்மை காணும் வேட்கை சித்தார்த்தருள்ளத்தில் நாளுக்கு நாள் கிளைத்தெழுந்தது.

ஆசைத் துன்பத்தை அறுத்தெறியும் துறவு பூண்ட சித்தார்த்தருளத்தில் பிறவியறிக்கும் நெறிகாணும் ஆசை ஓங்கி வளர்ந்தது. ஆதலால், அவர் காடென்றும் மலையென்றும் வெயிலென்றும் பகலென்றும் இரவென்றும் நினைப்பதை ஒழித்தார்.

களைப்பாயினும் கடும் பசியாயினும் கருதாமல் நடந்தே பல குகைகளையும் கண்டார். ஆங்காங்கிருந்தவர்களுடன் தங்கினார். அவர்கட்குரிய தொண்டு பல புரிந்தார். நேரம் வாய்த்தபோது ஐயம் வினவுவார். இங்ஙனம் பலநாட்கள் வரையில் நிகழ்ந்தது அருந்தவத் தொண்டு.

## இராஜக் கிருகம்

வைசாலியிலும் வனத்திலும் மனந்தெளிந்த சித்தார்த்தர் தாம் அறிந்த உண்மைகளை ஆராயத் தொடங்கினார். அதன் பொருட்டு மகதநாடு நோக்கிச் சென்றார். மகதநாடு இயற்கையழகிற் சிறந்தது. விந்திய மலையின் தொகுதிகளால் சூழப்பட்டது. மகதநாட்டில் தாழ்ந்த குன்றுகள் ஐந்து உண்டு. அவை விந்தியமலைக் குன்றுகளே. அக் குன்றுகளின் அழகு கண்களைப் பறிக்கும். கடவுள் படைப்பினாலான கவின் மிக்க இடங்கள் பலவற்றுள் மகதநாடு தலைசிறந்தது.

மகதநாட்டின் தலைநகரம் இராஜக்கிர்ஹம். அந்நகரத்திலிருந்து மகதத்தை ஆட்சிபுரிந்தவன் பிம்பிசாரன்.

சித்தார்த்தர் இராஜக்கிரஹத்தையடுத்த காட்டிலிருந்தார். நாள்தோறும் நகரத்தில் நுழைந்து பிச்சை ஏற்று வந்தார். அங்ஙிலையில் ஒருநாள் சித்தார்த்தர் கையில் ஓடு ஒன்று பிடித்து, காவியுடுத்து தெருவழிச் சென்றார். அவர் முகத்தில் அருளொளியும் அறிவொளியும் கலந்து விளங்கின. விழிகளிரண்டு பரந்தொளி புரிந்தன. புன்முறுவலரும்பும் அவர் தோற்றம் பொலிவு மிக்கதாயிருந்தது. கண்டவர் மனத்தைக் கவரும் சித்தார்த்தர் ஆழ்ந்த கருத்தும் தாழ்ந்த நடையும் உடையவராய் ஐயமேற்று வருவதைக் கண்டு வியந்தவர் பலர்; புகழ்ந்தவர் பற்பலர்.

மெலிந்த உடல், தெளிந்த முகம், ஓடேந்திய கை ஆகியவற்றேடு இளந்துறவி தெரு வழியே வருவதை மன்னன் பிம்பிசாரன் கண்டான். அவ்வரசன் அரண்மனை மேல்மாடியில் உலவிக்கொண்டிருந்தான். அவன் கண்களுக்கு விருந்து செய்தது சித்தார்த்தருடைய துறவுக்கோலம். அதனால், அளவுகடந்த மகிழ்ச்சியுற்றான்; ஏவலரை அனுப்பி அவரிருக்குமிடம் அறிந்துவரச்செய்தான். அவர்கள் அவரைக் கேட்டறிந்து வந்து கூறினர்.

பிம்பிசாரன் சில பகல் கடந்து சித்தார்த்தரிருக்குமிடத்தை யடைந்தான். அவரிடம் உசாவினன். நகர்க்குள்ளே தக்க இடம் அமைத்துத் தருவதாகவும் அங்கிருந்து நற்பொருள் காணலாகும் என்றும் இசைத்தான். சித்தார்த்தர் அதை மறுத்தார். ஆனால், அவன் தன் ஐயங்கள் பலவற்றைச் சித்தார்த்தரிடம் கேட்டான். "வேந்தே, யானும் இவ்வுண்மைகளைக் கண்டறிந்து பிறவித் துன்பங்களை நீக்கும் நெறிபற்றவே

முயல்கின்றேன். அதன் பொருட்டு அரசின்பம் விட்டுத் துறவுகொண்டேன்" என்றார்.

அது கேட்ட பிம்பிசாரன் "ஐயனே ஐயந்தெளிய அரும்பாடுபடும் தங்களை யான் பாராட்டுகின்றேன். தாங்கள் கண்டறியும் உண்மைகளை யானும் அறிந்து கொள்ள அருள்புரியுங்கள்" என வேண்டிக்கொண்டு மீண்டு சென்றான். சித்தார்த்தர் கருதியவாறு உண்மையறிவதற்கான வாய்ப்பினை யுடையதாயில்லை இராஜக்கிரஹம்.

## உருவேலா

சித்தார்த்தர் தமது முயற்சிகள் பயனற்றமைக்காகச் சிறிது வருந்தினார். எனினும் சளைக்கவில்லை. கருமமே கண்ணாயினார்க்குரிய தகுதிகள் அனைத்தும் அவரிடம் சுடர்விட்டு விளங்கின. எனவே ஞானரணியும் என்னும் உருவேலா காட்டைச் சேர்ந்தார். அவ்வனம், பல பகுதிகளாயுளது. அங்கே மெய்ச்சோர்வு, பசி, கண்ணுறக்கம், காலநிலை, இழிவு ஆகிய எதையும் கருதாது சித்தார்த்தர் தவம்புரிந்தார். பலநாள் பட்டினிகிடந்து தவம்புரிந்தார். தனியே இருந்தும் பிறருடன் கலந்துறைந்தும் காலங் கழித்தார். எப்படியும் தாம் கருதிய உண்மை நெறி காண்பதையே அவர் குறிக்கோளாகக் கொண்டார்.

சித்தார்த்தருடைய சீரிய முயற்சியையும் செவ்விய தவத்தையும் நேரிய நோக்கத்தையும் கண்ட பிற தவசிகள் அவரோடு உறவு கொண்டனர். அவர்களுள் ஓர் ஐவர் சித்தார்த்தருடன் நெருங்கிப் பழகினர். இப்படிச் சித்தார்த்தர் கழிபெருமுயற்சியுடன் உருவேலாக் காடு

களில் கடுந்தவம் புரிந்ததனால், அவர் எலும்புக்கூடா யினார்; உருத்தெரியாமல் தேய்ந்தார். இந்நிலையில் சித்தார்த்தர் ஒருநாள் சோர்ந்து வீழ்ந்தார். அப்பொழுது தான் அவர் தமது தளர்நிலையை உணர்ந்து வருந்தினார். இனி பட்டினியிருத்தலால் பயனில்லை எனத் தேர்ந்தார். பட்டினி நோன்புகளைத் தவிர்த்தார். "உடலார் அழியின் உயிரார் அழிவர்" என்னும் உண்மையைக் கருதி உடலைப்போற்றி, அதனோடு உண்மையும் காணலாம் என னும் உறுதிகொண்டார்.

பிறரைப்போல் பசித்தால் புசிக்கும் ஒருவன் தவசியாகான்; அவன் பேரின்பநிலை காணும் தகுதியற்றவன். என்னும் கருத்தினால் பிற தவசிகள் சித்தார்த்தரோடு சேராமல் ஒதுங்கினர். அவர்களோடு கலந்து சித்தார்த்தரைவிட்டுப் பிரிந்தனர் ஓர் ஐவரும். எதற்கும் கலங்காது கானகத்திலுறைந்தார் சித்தார்த்தர். அவரைத் தனித்துறையச் செய்தது உருவேலா.

**சுஜாதை**

தம்மோடிருந்த துறவிகள் சென்ற பின்பு சித்தார்த்தர் உருவேலா வனங்களைவிட்டுச் செல்லக் கருதினார். ஆனால், அவர் நெடுந்தொலைவு செல்லவில்லை. அடுத்த சிறிது தூரத்திலிருந்த ஓரிடத்தை அடைந்தார். இப்பொழுது பல்குனி என வழங்கும் நைரஞ்சரை யாற்றைக் கண்டார். அதன் கரையில் அழகிய அரச மரம் ஒன்றிருந்தது. செழித்துத் தழைத்திருந்த ஐந்து கிளைகளையுடைய அம்மரத்தின் அடியில் அமர்ந்தார். உணவையும் உறக்கத்தையும் மறந்தார். இப்படி இருபத்தெட்டு நாட்கள் கடுந்தவமியற்றினார்.

நைரஞ்சரையாற்றின் பாங்கரில் சிற்றூர் ஒன்றிருந்தது. அதன் பெயர் சேனனி. அவ்வூரிலுள்ள பாலன் என்னும் இடையனுக்கு மகள் ஒருத்தி இருந்தாள். அவள் பெயர் சுஜாதை. அவள் தன் இளமையிலேயே கடவுளிடம் பெரும்பற்று கொண்டிருந்தாள். அவள் தன் வழிபடு தெய்வத்தை நோக்கி "இறைவனே, நான் நல்வாழ்வுற்றுச் சிறக்க வாழ்தல்வேண்டும்" என வேண்டிக் கொண்டிருந்தாள். அவள் விருப்பம்போல் தக்க பருவத்தில் செல்வத்திற் சிறந்த பெருவாழ்வுற்றுப் பிள்ளையும் பெற்று மகிழ்ந்தாள். ஆதலினால் தன் வழிபடு கடவுளுக்குப் பூசனை செய்யக் கருதினாள். வைகறைப் போதில் ஆவின்பாலைக் காய்ச்சிச் சீனியிட்டுக் கையில் தாங்கிவந்தாள், வந்த சுஜாதை சித்தார்த்தர் வீற்றிருக்கும் மரத்தினருகில் வந்தாள். அவரைக் கண்டாள். தன் கருத்துக்கிசைந்த கடவுளே அங்கு எழுந்தருளியுள்ளார் என நம்பினாள். கொண்டுவந்த பாலை அவர்க்கு ஊட்டினாள். இன்சுவைப் பாலையுண்ட சித்தார்த்தர் முகத்தில் தெய்விகப் பொலிவு தோன்றியது. உள்ளம் தெளிந்தது. அவர் பன்னெடு நாட்களாக அறிய விரும்பியிருந்த உண்மைப் பொருள் மனத்தில் தோன்றியது. அவ்வுண்மைப் பொருள் 'உயிர்க்கருணையுடையவர் இன்புற்று வாழ்வர்' என்பதே. அன்று தொடங்கி சித்தார்த்தர் புத்தர் ஆயினார். சித்தார்த்தர்க்கு போதம் விளைத்த காரணத்தால் அந்த அரசமரம் மகாபோதி எனப் பெயர் பெற்றது. அவ்விடத்தினின்றும் மீண்டு வீடடைந்தாள் சுஜாதை.

# 4. போத இயல்

**சங்கம்**

தாம் அரும்பாடுபட்டுக் கண்டறிந்த எட்டு உண்மைகளாகிய நற்காட்சி, நல்லூற்றம், நல்வாய்மை, நற்செய்கை, நல்வாழ்க்கை, நன்முயற்சி, நற்கடைப்பிடி, நல்லோர் தலைப்பாடு என்னும் எட்டு நல்வழிகளையும் மக்களுக்கு உணர்த்த உளம் கொண்டார் புத்தர். ஆதலால் அவ்விடத்தை விட்டகன்றார். இராஜக்கிருகத்தில் இருந்த அராளராமர், உருத்திரகர் ஆகிய இருவர்க்கும் தெளிபொருள் கூற விழைந்தார். அவர்களிருந்த விடத்தை அடைந்தபோது அவ்விருவரும் முடிந்தனர் என்றறிந்து திரும்பினார். அங்கே உபகன் என்னும் அந்தணனை நட்புகொண்டார். பின்னர் உருவேலாவில் தம்மோடு நெருங்கியுறைந்த ஐவரைக் காணச் சென்றார். அவர்கள் புத்தரைக் கண்டுவியந்தனர். ஆனால், அவர் கூறிய உண்மைகளை ஏற்காது எள்ளினர். ஆயினும் புத்தர் அவர்களைப் புறக்கணிக்கவில்லை. மகிழ் மனமும் மலர் முகமும் நயமொழியும் கொண்டு நற்பொருள்களை ஊட்டினர். ஆதலால், அவர்கள் பெரு விருப்புடன் ஏற்றார்கள். தம் அறியாமைக்கு வருந்தித் திருந்தினார்கள்.

அதன்பின் தம்மை நாடித் தொடர்ந்து வந்தவர்களுக்கெல்லாம் இன்ப நிலையை உணர்த்தினார் புத்தர். அவர்களைத் துறவிகளாக்கினார். இப்படி ஐந்து திங்களுக்குள் அறுபது துறவிகளைப் புத்தர் ஒன்று சேர்த்தார். அக்குழு புத்தசங்கம் என்னும் பெயர் பெற்றது. அந்நிலையில் புத்தர் காசிக்குச் சென்றார். அங்கே மிருக

தாவம் என்னும் மான் வனத்தைக்கண்டார். அதைத் தம் உறைவிடமாகக் கொண்டார். அவ்விடத்திலிருக்கும் போது குசிநகரத்து யசன் என்பவனைச் சங்கத்திற் சேர்த்தார். யசன் துறவுகொண்டு தன் பெற்றோரைச் சங்கத்திற்சேர்த்து தமது சொத்துக்களைப் புத்தர் விருப்பப்படி நல்வழியிற் செலவிட்டார். பின்னர், புத்தர் பலவிடங்கள் சென்று தாம் கண்ட உண்மைகளை உரைக்கத் தொடங்கினர். அப்பொழுது உருவேலா பகுதியைச் சேர்ந்த அக்கினிகாசியபர், நதிகாசியபர், கயாகாசியபர் என்னும் மூவரை நல்வழியில் திருப்பித் தம் சங்கத்தில் சேர்த்தார். காசியபர்களுடன் துறவு பெற்றவர்கள் ஐந்நூறு பேர்.

அதிற் சேர்ந்த துறவிகள் பலவிடங்கட்கும் சென்று நன்னெறிகளை விளக்கினர். நாளடைவில் பலவிடங்களிலும் அமைவதாயிற்று மும்மணிகளுள் ஒன்றாகிய பௌத்த சங்கம்.

## உயிர்க்கருணை

இராஜக்கிருகத்தில் பிம்பிசாரன் வேண்டிக்கொண்டதைச் சித்தார்த்தர் நினைத்தார். அங்கே செல்லப் புறப்பட்டார். போகும்வழியில் சிலர் ஆடுகளை மந்தையாக ஓட்டிச் சென்றார்கள். அவற்றுள் ஒன்று முடம். அது நடக்கமுடியாமல் வருந்தியது. அதனைப் புத்தர் கண்டார். ஐயோ! இஃதெப்படி நடக்கும்! என மனமிரங்கினர். அதைத் தூக்கித் தோளிலிட்டு நடந்தார், அவ்விடையர்களை நோக்கி இம்மந்தை எங்கே செல்கிறது? எனக் கேட்டார்.

'மகதநாட்டில் பிம்பிசாரன் இயற்றப்போகும் வேள்வியின் பொருட்டு இவை கொண்டுபோகப்படு கின்றன' என அவர்கள் கூறினார்கள். இத்துணை உயிர் களைக் கொன்று ஒரு வேள்வியா! என மனம் பதைத் தார். அம்மந்தையைத் தொடர்ந்து உடன் சென்றார். மகதநாட்டில் இராஜக்கிருஹம் சேர்ந்து பிந்துசாரனைக் கண்டார்.

முன்னர் ஒருநாள் காட்சிதந்த துறவி இவர்; சித் தார்த்தர் என்னும் பெயருடையவர். என நினைவு கொண்ட பிம்பிசாரன், அவரை நன்கு வரவேற்றான். தன் வேண்டுகோளுக்கிணங்கியே வந்துளார் என எண் ணினான். அதைப் புத்தரும் ஒப்புக்கொண்டார். தாம் கண்டறிந்த உண்மை நெறிகளை எடுத்துரைத்தார். அன்றியும் உயிர்க் கருணையே தமது கொள்கையின் உயிர் நாடி எனக் கற்பித்தார். உயிர்களைக் கொன்று வேள்வி புரிவதைத் தடுத்தார்.

"அவிசொரிந் தாயிரம் வேட்டலின் ஒன்றன்
உயிர்செகுத் துண்ணாமை நன்று"

என்னும் கருத்தைப் புத்தர் நனி விளக்கினார். சித்தார்த் தர் ஞானம் பெற்று புத்தர் ஆயினதையும் அவருடைய தெளிவுரைகளையும் அவ்வுரைகளின் உண்மைகளையும் கேட்டு பிம்பிசாரன் உள்ளம் தெளிந்தான். தான் செய்யவிருந்த வேள்வியை விட்டான். புத்தர் கொள் கையைப் பின்பற்றித் துறவு பூண்டான். புத்தர் இருப் பதற்கென பெரிய மூங்கிற் சோலை ஒன்றைக் கொடுத் தான். அச்சோலை புத்தசங்கத்துப் பொருளாயிற்று, வேந்தனைப் பின்பற்றி மகதநாட்டுக் குடிகளும் புத்த

மதத்தைத் தழுவினூர்கள், இப்படி மகதநாடு முற்றி லும் பரவியது உயிர்க்கருணை.

## மீட்சி

இரவுப் போதில் எவரும் அறியாமல் வெளிப்பட்ட சித்தார்த்தரைப் பற்றிச் சந்தகன் சுத்தோதனர்க்குக் கூறினன். அவர் மணியிழந்த நாகம்போலும் உயிரிழந்த உடல்போலும் உளம் வருந்தியிருந்தார். யசோதரை ஆவியிழந்தவளேயானள். இங்ஙனம் இன்னலுற்றும் சுத்தோதனர் தமது முயற்சியைவிடவில்லை. பல முறை பல பெரியோர்களை அனுப்பிச் சித்தார்த்தரைக் கூட்டிவரப் பாடுபட்டார்; பயன் காணுது கைவிட்டார்.

முடிவாக சுத்தோதனர் ஒரு முயற்சியைக் கருதினர். சித்தார்த்தருடன் இளமைப்போதில் பழகிய தோழன் கால உதயன். அவனிடம் பேரன்புடையவர் சித்தார்த் தர். ஆதலால், அவனையனுப்பிப் பார்ப்போம் என்னும் கருத்துத் தோன்றிற்று சுத்தோதனர்க்கு. தோன்றவே அவர்கால உதயனை விளித்தார்; மகதநாடு சென்று, சித் தார்த்தரைக் கண்டு இன்னுரை கூறிக் கூட்டிவருமாறு வேண்டினர். அவனும் அதற்கிசைவுகொண்டு ஏகினன். சித்தார்த்தரைத் துறவு நிலையில் இராஜக் கிருகத்தில் கண்டான் கால உதயன். அன்றியும் கபிலவஸ்துவி லிருந்து முன்னரே வந்திருந்த வேறு சிலரும் துறவு கொண்டு சித்தார்த்தரைச் சூழ்ந்திருந்தனர். அவன் கொண்ட வியப்பிற்கு எல்லை இல்லை. மற்றவர்களைப் போலவே கால உதயனும் காவியுடுத்துத் துறவியா னன். காலம்பார்த்து புத்தரிடம் தான் வந்த செய்தி யைத் தெரிவித்தான். தந்தையின் துயர் நிலை கேட்ட

புத்தர் மனம் இளகினர். மீண்டும் கபிலவஸ்து செல்வ தெனக் கருத்திசைந்தனர்.

புத்தர் கூறிய இசைவைக் கேட்ட கால உதயன் களிப்பு மிகக்கொண்டான். உடனே மன்னர்க் கறிவித் தான. அவர் அதுகேட்டு அளப்பிலா உவகை கொண் டனர். நகர மக்களுக் கறிவித்தனர். சித்தார்த்தர் வரும் நாளை மகிழ்வோடு எதிர்பார்த்தனர் எல்லோரும். நகர் முழுதும் அலங்கரிக்கப்பட்டது. சித்தார்த்தரும் மற்று முள்ள துறவிகளும் தங்குவதற்கென நிக்ரோதவனம் என்னும் ஒருசோலையில் கூடாரங்கள் அமைக்கப்பட் டன. புத்தர் கபிலவஸ்து வந்துசேர்ந்தார். தமக்கென அமைந்த கூடாரத்தில் தங்கினர். புத்தர் நிலைமை சுத் தோதனரை வியப்பித்தது. அவர் தம்மை மறந்து புத்த ரைப்பணிந்தார். தன் மானமுடைய சாக்கியரும் மன்ன ரைப் பின்பற்றிப் புத்தரைத் தொழுதார்கள்.

சிலபகல் பலதுறவிகளுடன் புத்தர் கபில வஸ்து வில் தங்கியிருந்தார். அப்போது பிறர்க்குப் புகட்டும் நல்லுரைகளைச் சுத்தோதனரும் இருந்து கேட்பார். அவருடன் வேறு சிலரும் இருப்பர். ஆனல், உலகப் பற்றே உருவாயிருந்த அவர்கள் புத்தர் கூறிய ஞானப் பொருளை நாடவில்லை. அன்றியும் அதனை இகழவும் தலைப்பட்டார்கள். இதனிடையே சுத்தோதனர் தம் புதல்வரைத் தனியே கண்டு சில கூறினர். தம் நாடு தக்க தலைவரின்றித் தவிக்கின்றதென்றும் அதனைத் தனி யரசு புரிதல் சித்தார்த்தருடைய கடமை யென்றும் கடமை தவறித துறவு பூண்பது தகுதியன்றென்றும் அவர் புத்தர்க்குக் கூறினர்.

அவர் மொழியைச் சித்தார்த்தர் ஏற்கவில்லை. 'தலையிலிருந்து விடுபட்ட யான் மீண்டும் தளைபூண்டு மூல இசையேன்' என மறுத்தார். ஆதலால், தந்தை சித்தார்த்தரை வெறுத்தார். அவ் வெறுப்பின் காரணமாக சித்தார்த்தருக்கும் அவரைச் சேர்ந்த சங்கத் துறவிகளுக்கும் ஆதரவுபுரியாமல் புறக்கணித்தார் மன்னர். துறவிக்கு வேந்தன் துறும்பு என்பது பொய்க்குமோ? புத்தர் கபிலவஸ்து நகரத் தெருக்களில் பிச்சை யேற்றுண்ணத் தொடங்கினர். அதைக்கண்ட சுத்தோதனர் தம் குற்றமுணர்ந்து மீண்டும் புத்தரையும் சங்கத்தையும் பெருமைப்படுத்தினர். கபிலவஸ்து நகரமக்களை மகிழ்வித்தது புத்தரின் மீட்சி.

## விடை

சுத்தோதனர் தமது முயற்சியைக் கைவிட்டார். இதை யறிந்த உறவினர் பலர் புத்தரைப் பணிந்து போதம் பெற்றனர். அவர்களுள் நந்தனும் ஒருவன். சித்தார்த்தருடன் இளமையில் பழகியவர்களாகிய ஆனந்தன், தேவதத்தன் ஆகிய இருவரை துறவிகளாக்கித் தமது சங்கத்தில் சேர்த்தார் புத்தர். சித்தார்த்தரைக் காணவும் பேசவும் யசோதரை விழைந்தார். எனினும் புத்தர் அதனை மறுத்தனர். மீண்டும் யசோதரை வருந்தி வேண்டுவதைப் புத்தர் அறிந்தார். சில துறவிகளுடன் அந்தப்புரம் சென்றார். அவர் வரவைக்கண்டு யசோதரை அவர் பாதங்களில் வீழ்ந்து பணிந்தாள். அவள் ஏதும் உரையாடாமல் வாய்விட்டுக் கதறிக் கண்ணீர் வடித்தாள். அவள் துன்பநிலை மாறுவதற்கான சில நல்லுரைகளைப் புத்தர் கூறித் திரும்பினர். ஆயி

னும் மீண்டும் ஒருநாள் யசோதரை தன்கவின விளங்க ஆடை அணிகளால் அழகுபடுத்திக்கொண்டு அவ ரிருக்குமிடம் சென்ருள். அதனுலும் அவர்மனம் திரும்ப வில்லை. பின்னும இராகுலனை அனுப்பினுள். தம் புதல் வன் இராகுலன் தம்மை யடைந்தமைக்குப் புத்தர் மிக மகிழ்ந்தார். இனிய மொழிகளால் பாராட்டினுர். புத் தர் தாம் கண்ட உண்மை நெறியை இராகுலனுக்குப் புகட்டினுர். அவ்வறிவுரைக்கு "மகா ராகுல சூத்திரம்" என்று பெயர். இதனைக் கேட்டறிந்த இராகுலன் புத்த சங்கத்தில் சேர்ந்து துறவியானுன். அதன்பொருட்டும் மன்னர் மனம் வருந்தினுர். இதனிடையே கழிந்தகால அளவு திங்கள்கள் இரண்டு. பின்னர் தந்தை முதலியவர் களிடம் சொல்லிக்கொண்டு மீளப் பெற்ருர் விடை.

## சாவித்திரி

கபிலவஸ்துவிலிருந்து திரும்பிய புத்தர் மகத நாடடைந்து இராஜக் கிருகத்தில் தமக்கென பிந்து சாரனுலளிக்கப்பட்ட வேணுச் சோலையில் தங்கினுர். என்றும்போல் பலர்க்கும் நல்லறிவு புகட்டினுர். அப் பொழுது இராஜக்கிருஹத்தின் வழியே வணிகன் ஒரு வன் வந்தான். அவன் பெயர் அநாத பிண்டகன். அவன் பலநூறு வண்டிகளில் பண்டங்களை ஏற்றி நடத்தி வந் தான். வந்தவன் புத்தரைப்பற்றிக் கேட்டறிந்து அவ ரிடத்தை அடைந்தான். அவர் பொருளுரைகளைக் கேட் டான். ஆசையே துன்பங்களுக்கும் மறுபிறவிக்கும் காரணம் என்ற புத்தர் கொள்கையைக் கேட்டு மன மாசு அற்ருன். தன் செல்வமனைத்தையும் புத்தசங்கத் திற்கு உதவினுன். ஜேதன் என்னும் அரசனுடைய

இளமரச்சோலை ஒன்றினைப் பெருவிலை கொடுத்து வாங்கிச் சங்கத்துக்கென விடுத்தான். அத்தோட்டத்திலிருந்து சாவித்திரி நகர் வரையில் புத்த மடங்கள் பலவற்றை யமைத்து, அவற்றையடுத்துச் சோலைகள் பல ஆக்கி உதவினான். அநாத பிண்டகன் செய்த தொண்டினால் புத்தத் துறவிகள் பலர் அவ்விடத்திலிருந்து புத்தருடைய கருத்துக்களைப் பரப்பினர். இங்ஙனம் பல்லாற்றானும் புத்தமதம் மகதநாட்டில் வளர்ந்தது. இக்காரணத்தால் இன்றும் புகழ்பெற்றுத் திகழ்கிறது சாவித்திரி.

## சுத்தோதனர் இறப்பு

மகதநாட்டில் தமது மதத்தைப் பரப்பிக்கொண்டிருந்த போதில் ஒரு நாள் தூதுவன் ஒருவன் கபிலவஸ்துவிலிருந்து ராஜக்கிருஹத்துக்கு வந்தான். அவன் புத்தரைக் கண்டு வணங்கினான். வாடிய முகத்துடனும் தழுதழுத்த குரலுடனும் துன்பச் செய்தி ஒன்றை அறிவித்தான். அதாவது 'சுத்தோதனர் பிணிவாய்ப்பட்டார். சாக்காட்டு நிலையைச் சார்ந்துள்ளார்' என்பதே அச் செய்தி. அதைக் கேட்டு விரைந்து புறப்பட்டார் புத்தர்; காலந்தாழ்த்தாது கபில வஸ்துவை அடைந்தார். அதுபோழ்து தந்தையார் மூப்பு மிகுந்து பிணியும் கொண்டிருந்தார். மகன் வந்ததனால் மட்டற்ற மகிழ்வுற்றார் சுத்தோதனர்.

சித்தார்த்தரது சித்தத்தைத் திருப்பி ஆட்சியில் அமரச் செய்ய அரும்பாடுபட்ட சுத்தோதனர் அம்முயற்சி கைகூடாதெனு முடிவு கண்டார். ஆதலால்,

இராகுலன் துறவியாயின பின்னர் தாமும் புத்தர் கொள்கைகளையே கைக்கொண்டார். அவர் துறவியாக வில்லையாயினும் துறவிக்குரிய நற்பண்புகளுடனே வாழ்ந்தார். எவ்வுயிரிடத்தும் இரக்கங்காட்டி இதம் புரிந்தே அவர் தொண்ணூற்றேழாவது வயதில் இறுதி யுற்றார். ஆதலால், பிறப்பறுக்கு நிலையையே பெற்றிருந் தது சுத்தோதனர் இறப்பு.

## பெண்கள் துறவு

புத்தர், தந்தைக்குரிய கடமையை ஆற்றி மகதநாடு திரும்பினார். அவர் சென்ற சிலநாட்கள் கடந்து கௌதமியும் யசோதரையும் அவரைக் காணப் புறப் பட்டனர். இராஜக்கிருஹத்தில் புத்தரைக் கண்டனர். தங்கட்கும் துறவு நிலையருளுமாறு வேண்டினர். இதற்குமுன் புத்த சங்கத்தில் பெண்கள் சேர்க்கப்பட்ட தில்லை. ஆதலால், புத்தர் அவர்கள் விருப்பத்தை மறுத் தார். பின்னும் கௌதமி பன்முறையும் வேண்டிநின் றாள். ஆகையால் சிற்றன்னையின் சொல்லைத் தடுக்க மன மின்றி அவ்விருவரையும் புத்த சங்கத்தில் சேர்த்துக் கொண்டார் புத்தர். அது முதற்கொண்டே புத்த சங் கத்தில் தொடங்கியது பெண்கள் துறவு.

## பலர்க்கும் அருள்

1. புத்த சங்கத்தில் குல வேறுபாடு இல்லை. புத்த மதத்தில் அன்பு ஒன்றே தலை சிறந்தது. ஒருநாள் அந் தணச் சிறுவன் ஒருவன் புத்தரை அணுகினான். தன் பிறப்புரிமையைப் பற்றிப் பெருமையாகப் பேசினான். அதனைக் கேட்ட புத்தர் அவனுக்கு அறிவு புகட்டினார். அதனால் பிறப்பு நலந்தரும் எனக் கருதுதல் பேதைமை

என அவன் உணர்ந்து திருந்தினன். மற்றொரு நாள் பரத்துவாசர் என்னும் அந்தணர் ஒருவர் புத்தரை யண்மினர். தாம் உழவுத் தொழிலைப் புரிந்து உலகிற்கு நலம் புரிவதாகப் பெருமை பாராட்டினர். தாங்கள் துறவு பூண்டு உலகிற்கு எந்தவகையிலும் உதவியின்றிக் காலம் கழிக்கின்றீரே என எள்ளினர். அதைக் கேட்ட புத்தர் "அன்பரே. ஆம். நான் வாளா உறைகின்றேன். எனினும் இனிய சொற்களை விளைபுலன்களாகவும் அறிவை விதையாகவும் கொண்டு பயிர் செய்கின்றேன். அப் பயிர் விளைவில் கடுஞ் சொற்களாகிய களைகளைப்போக்கி உண்மையாகிய எரு இடுகின்றேன். பின்னர், அன்புநீர்ப் பாய்ச்சுகின்றேன். அதனால், அறமாகிய கதிர் விளைகிறது. இதுதான் என் முயற்சி" என இதம்பெற வுரைத்து அவ்வந்தணரைத் திருத்தினர்.

2. எவ்வுயிரையும் தம்முயிர்போல் கருதி அருள் புரியும் புத்தர்பெருமான், வழி நடக்குங்கால் மான் ஒன்று வலையிற் சிக்கி வருந்துவதைக் கண்டார், அவ் வலையை அறுத்து மானைக் காத்தார். அச் செயலைக் கண்ட வேடன் சினம் பெருகி மறைந்திருந்தான். சற்று தூரம் நடந்து புத்தர் ஒரு மரத்தடியில் தங்கிக் கண் மூடிக் கடவுளைக் கருதியிருந்தார். அதுதான் தக்க நேரம் என்று கருதித் தன்கையிலிருந்த தடியால் தாக்கக் கருதி ஓங்கிக்கொண்டு அருகில் வந்தான் வேடன். வந்தவன் அவர் முகப் பொலிவைக் கண்டு தடியைக் கீழே எறிந்து தாள்களில் பணிந்தான்; தன் குற்றத்தைக் கூறி மன்னிப்பு வேண்டினன். அவனுக்கும் நல்லறிவு கூறித் தம் சங்கத்தில் சேர்த்துக் கொண்டார் புத்தர்.

**3.** அங்குலிமாலன் என்னும் கள்வன் மகதநாட்டுக் காட்டில் சாலியை என்னும் ஊரில் இருந்தான். அவனால் அலைக்கழிக்கப்பட்ட மக்கள் அளவிலடங்கார். ஒரு பொழுது அவனிருக்கும் காட்டுவழிச் சென்றார் புத்தர். அவரைப் பலர் தடுத்தனர். அங்குலிமாலனைப் பற்றி அறிவித்தனர். ஆனால், புத்தர் அவன் பொருட்டு அஞ்சாமல் சென்றார். நடுக்காடு சென்றபோது அவன், புத்தரைத் தாக்கத் தொடர்ந்தான். சிறிது தூரம் சென்ற பின்னர் அவன் தன்னடக்கமுடையவனாக மாறினான், புத்தரை எதிர்ப்பட்டு வணங்கித் தன் குற்றத்தை விளக்கினான். அவர் அவனையும் துறவியாக்கித் தன்னுடன் கூட்டிச் சென்றார்.

4. அப்பொழுது விசாகை என்னும் பெண் ஒருத்தி புத்தபெருமானுடைய சிறப்புக்களைக் கேட்டாள். அவள், எல்லா வரிசைகளுடனும் மற்றும் பலருடன் வந்து புத்தரையடைந்தாள். அவரை வணங்கி “கருணை வள்ளலே, தங்கள் அறிவுரை கேட்டுஉய்யக் கருதினேன். அவ்வேட்கையால் வந்துற்றேன். இவர்கள் என்னைச் சேர்ந்தவர்கள். இவர்களையும் இனிய நெறிப்படுத்துங்கள்” என வேண்டினாள். புத்தர் தமது அருளால் அவர்களுக்கு அறிவுரை கூறி அற நெறிப் படுத்தினார். அதுமுதல் விசாகை துறவுநிலை எய்திப் புத்த சங்கத்திற் சேர்ந்தாள். அன்றியும் அச் சங்கத்தார், தங்கித் தருமத்தை ஆராய்வதன் பொருட்டுப் பூர்வாராமம் என்னும் பெயருடைய சோலையைத் தந்தாள். அச்சோலையில் அழகிய மாளிகை ஒன்று மிகப் பெரியதாகக் கட்டப்பட்டிருந்தது. அம்மாளிகையில் புத்த சங்கம் ஒன்றிருந்து தொண்டியற்றியது.

இங்ஙனம் புத்தர் தாம் கண்ட உண்மை ஞானத்திற்கு ஏற்பப் புரிந்தார் பலர்க்கும் அருள்.

## இறந்த பிள்ளை

புத்தரால் துறவுபெற்ற பெண்டிர் பலர். அவர்களுள் கிசகோதமி என்பவள் ஒருத்தி. அவள் தன் இல்லத்தில் செல்வ வாழ்விலிருந்தவள். அவளுக்கு ஒரே மகன். அப்பிள்ளை அழகில் சிறந்தது. ஒருநாள் அக்குழவி தனியே ஆடிக்கொண்டிருந்தது. இல்லத்தையடுத்துள்ள செடிகளின் அருகில் ஆடிய பிள்ளை அங்கிருந்த நாகமொன்றைக் கண்டது, அந்நாகத்தை விளையாட்டுப் பொருளாகக் கருதிவிட்டது மகவு. ஆதலால், தவழ்ந்து சென்று கையால் பற்றியது.

பற்றப்பட்ட நாகம் பயங்கொண்டது. தற்காப்புக்காகக் குழந்தையின் கையில் பொற்காப்புபோல் சுற்றிக்கொண்டது பாம்பு. பற்றுக் குறையாகப் பல்லழுந்தக் கடித்தது. விட அரவு தீண்டியதால் துணுக்குற்ற மகவு பாம்பைவிட்டது. பாம்பும் சுருள் நீக்கிச் சென்று மறைந்தது. சிறிது பொழுதில் சிரத்தைப் பற்றியது நஞ்சு. கண்ணொளி மழுங்க, பல்கிட்ட, நாக்குழற, மதி மயங்கிச் சோர்வுற்றுச் சாய்ந்தது குழவி. தனித்திருந்த தன் மகவைக் கருதினள் தாய். சாய்ந்திருந்ததைத் தூக்கினள். தலை வீழ்ந்தது ; உடல் மறுத்தது. வெம்பினள் ; விதிர்த்தாள் ; கலங்கினள் ; கதறினள் ; கையில் மகனை ஏந்தினள். மனதில் நினைத்தாள் புத்தபெருமானை. அவரை நாடிக் காடும் மலையும் நடந்தாள். சோணை நதிக்கரையில் புத்தரைக் கண்டாள். அவர்

காலடியில் இறந்த மகவை இட்டாள். நிகழ்ந்ததைக் கூறினாள். எப்படியும் என் மகனை எழுப்பித் தருதல் வேண்டும் என வேண்டினாள்.

"நல்லது ; அப்படியே செய்வேன் ; நான் எழுப்பித் தருவேன். நீ சென்று ஒரு பிடி கடுகு வாங்கிவா" என்றார். கிசகௌதமி அடைந்த களிப்பு கடலினும் பெரிது. அவள் கால்வாங்கி நடந்தாள். ஓரடி செலுத்திய அவளைப் புத்த பெருமான் விளித்தார். "அம்மா எவரும் சாகாத இல்லிலிருந்து நீ கடுகு பெற்றுவா." என்றார். களித்திருந்ததால் அச்சொற் பொருளை அவள் உணராமல் விரைந்து சென்றாள். பல வீடுகள் நுழைந்தாள் ; கடுகு இரந்தாள் ; கடுகு கிடைப்பதாயிருந்தது. ஆனால், எவரும் இறவாத வீடு ஏதும் இல்லை. ஆதலால், கடுகு கிடைத்தும் கவைக்குதவாதெனத் திரும்பினாள் ; புத்தரிடம் புகன்றாள். அவர், ஓதாமல் உணர்த்தினதையும் உணர்ந்தாள். "பெருமானே, இறப்பென்பது இயற்கை. இறந்தாரை எழுப்புதல் இயலாது என்பதையுணர்ந்தேன். இனி எனக்கு இவ்வுலகில் பற்றில்லை. தங்கள் அறிவுரைகளைப் பற்றித் துறவடைவேன்" எனத் தொழுதாள். புத்தர், அவளையும் சங்கத்தில் அணைத்து நல்வழியருளினார். கைவிடப்பட்டது இறந்தபிள்ளை.

**பகை**

துறவுகொண்டு மெய்ஞ்ஞானச் செல்வராய்த் திகழ்ந்த புத்தர் பலவிடங்கட்குச் சென்றார். பல மக்களைத் திருத்தி நல்வழிப்படுத்தினார். அதுபோன்று

யசோதரையின் தந்தை யுறையும் நகர்க்கும் சென்றார். அம்மன்னன் புத்தர்மீது பெரும்பகை கொண்டிருந்தான். தன் மகளுடைய வாழ்வைக் கெடுத்தவனை வஞ்சம் தீர்க்க வேண்டுமென்று காலத்தை நோக்கியிருந்தான். தேடிய முள் காலில் தைத்ததுபோன்று புத்தர் அங்குச் சென்றார். தமது மனதுக்குற்ற இடமொன்றில் சங்கத்துடன் தங்கினார். அவர் வரவையறிந்து பலர் திரள் திரளாக வந்து அறிவுரை கேட்டுத் தெளிந்து துறவிகளாகிச் சங்கத்தோடு இணைந்தனர்.

தன் நகரிலேயே புத்தர் வந்திருத்தலால், நினைத்த போது நினைத்தவாறு பழி தீர்த்துக் கொள்ளலாமென்று நினைத்தான் கோலியர் வேந்தன். தக்க வாய்ப்பு கிடைத்ததை அவன் தவறவிட விரும்புவானா? காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்ள முந்தினான். விரைந்து சென்று புத்தசங்கமிருந்த இடத்தை யடைந்தான். அங்கு வீற்றிருந்த புத்தரைக்கண்டு எள்ளி நகையாடினான். பலரறியுமாறு பல பழிச்சொற்களைத் தூற்றினான். தன்னைத் தடுப்பாரும் எதிர்ப்பாருமில்லாமையினால் விருப்பம்போல் பேசி மீண்டான். இவ்வளவையும் புத்தர் பொருட்படுத்தவே இல்லை. "கையறியா மாக்கள் இழிப்பும் எடுத்தேத்தும் வையார் வடித்த நூலார்" என்பதற்கு அவர் எடுத்துக்காட்டாயினார். அங்கிருந்தாரனைவரும் செயலற்று ஒதுங்கினர். இந்நிகழ்ச்சியினால் புத்தர், எள்ளளவும் தம் நோக்கத்தில் திகைப்புறவில்லை. பின்னும் சில பகல் அந்நகரிலேயே இருந்தார். பலருக்கறிவு புகட்டித் துறவிகளாக்கிச் சங்கத்திற் சேர்த்தார்.

கபிலவஸ்துவில் இளமைப்போதில் புத்தருடன் இருந்தவர்களுள் ஆனந்தன், தேவதத்தன் ஆகிய இருவரும் புத்தரை நாடிவந்து துறவிகளாயினபின்பு அவர்களைப் பேரன்புடன் சங்கத்திற் சேர்த்தார் புத்தர். ஆயினும், காக்கை கழுவிக் கழுவிக் குளித்தாலும் கருமையேதான் என்பதுபோல தேவதத்தன் உட்பகையோடே இருந்தான். ஆனால், ஆனந்தன் மாத்திரம் புத்தரிடம் உண்மையன்பு கொண்டொழுகினான். ஆகவே புத்தரும் ஆனந்தனையே உயிர்த்துணை எனக் கொண்டார். இக்காரணத்தால் மேலும் வெதும்பினான் தேவதத்தன். பழைய உட்பகையோடு புதிய வெம்பகையும் கூடிற்று; பெரும்பகையாயிற்று. ஆதலால், தேவதத்தன் புத்தர்பெருமான் மீது சில குற்றங்களைக் கற்பித்தான். அக் கற்பனையைக் கருத்திற் கொண்டு புத்தரிடம் மாறி ஒழுகியவர் சிலர். உண்மைத் துறவும் மெய்ஞ்ஞானமும் சொல்லும் நெறியிலேயே ஒழுகும் மேம்பாடும் அமைந்த புத்தரை உள்ளவாறறிந்து வழிபட்டவர் பலர்.

மகதநாட்டு மன்னன் பிம்பிசாரனுக்கு வாசவி என்பவள் ஒரு மனைவி. அவள் வேசாலி நகரத்து நீதிபதியின் மகள். அவள் மகன் அஜாதசத்ரு. அவன் நற்குணம் ஒரு சிறிதும் அமையாத் தீயன். அத்தீயனைத் தன் வழிப்படுத்திக்கொண்டான் தேவதத்தன். இருவரும் நெருங்கிப் பழகினர். அவர் நட்பு தீமை விளைவிக்குமெனக் கண்டான் பிம்பிசாரன். ஆதலால், அவன் தன் மகனை விளித்தான். "தேவதத்தன் நட்பு உனக்குப் பொருந்துவதன்று. அதனை விடுதல் மிக நன்று" எனக்

கூறினன். அதனைக் கேட்ட மகன் மனங்கொதித்தான். தந்தையைச் சிறைப்படுத்தினன். உணவு தருவதையும் தடுத்தான். அரசியரால் தரப்படும் மறை உணவையும் மறுத்தான். இங்ஙனம் உணவு பெருச் சிறையிலிருந்து பிம்பிசாரன் இறந்துபட்டான். அதன்பின்பு தான் மகத நாட்டு அரசைக் கைப்பற்றித் தருக்கி வாழ்ந்தான்.

அஜாதசத்துரு பட்டங்கொண்டதுமுதல் தேவதத்தனுக்குச் செல்வாக்கு பெருகிற்று. அதனல், அவன் எப்படியாவது புத்தருயிரைப் போக்கத் துணிந்தான். சில பணியாளரைத் தன் வழிப்படுத்திக்கொண்டான். புத்தர் தலைமீது கல்லையுருட்டிக் கொல்லச்செய்தான். அவர்களால் அச்செயல் விரைவில் நிறைவேருததனல் தானே அதைச் செய்தான். ஆனல் அவன் தீய செயல் தவருக முடிந்தது. ஆயினும் அவனல் மாடியிலிருந்து உருட்டப்பட்ட கல், புத்தபெருமான் தலைமீது படாமல் உடலின் ஒரு புரத்தில் ஊறு செய்தது. அதனல் ஏற்பட்டது புண்.

பிம்பிசாரனுக்கு மற்றொரு மகன் இருந்தான். அவன் அஜாதசத்துருவின் மாற்றன்னையின் மகன். அவன் பெயர் ஜீவகன். புத்தருக்கேற்பட்ட துன்பத்தை ஜீவகன் நீக்கினன். சிறந்த மருத்துவர்கள் விரைந்து புண்ணை ஆற்றிவிட்டார்கள். மற்றும் தேவதத்தன், பட்டத்து யானையைக் கட்டவிழ்த்துப் புத்தர்மீது ஏவுமாறு மாவுத்தனைத் தூண்டினன். அவனும் அறியாமையினல் அவ்வாறே செய்தான். ஆனல் அவ்யானை இராஜகிருகத்துத் தெருக்களைக் கலக்கித் துன்புறுத்தியது. அதன் எதிரில் வந்துகொண்டிருந்த புத்தர்

கையமர்த்தினர். அது கண்டு மெத்த அடங்கியது யானை.

இவ்வளவும் முயன்று இளைத்தான் தேவதத்தன். இச்செய்திகளை ஜீவகனிடம் கேட்டறிந்தான் அஜாதசத்துரு. ஆதலால் அவன் குற்றத்திற்காக மிக வருந்தினன். தன் குற்றம் தீருமாறு புத்தரை அடைந்து பணிந்தான். அவனுடன் சென்றிருந்த ஜீவகனும் அஜாதசத்ருவின் அறியாமையைக் கூறினன். அதுபற்றி புத்தர் ஏதும் கூறுமலே சிறந்த நீதிகளை ஓதினர். அன்று தொடங்கி அஜாதசத்ரு புத்தர் மனத்துக்குற்றவாறு ஒழுகினன். இங்ஙனம் அற்ருெழிந்தது பகை.

**பாதபங்கய மலை**

புத்தர் பெருமான் மகா போதியின் கீழ் ஞானம் பெற்றதன் பின்னர் பலவிடங்கள் சென்று இவ்வகைத் தொண்டியற்றினர். இதனிடையிற் சென்ற யாண்டுகள் இருபது.

அதன் பிறகு, புத்தர் கிருத்திர கூடமலையை அடைந்தார். அதன் உச்சியில் ஏறி நின்ருர். அறவுரை கூறத் தொடங்கினர். இப்பெருமான் தேனினும் இனிக்கப் பேசுவார்; பொருள் விளங்கப் பேசுவதில் மிக வல்லவர். கேட்டவர் மனதிற் பதியுமாறு காலத்துக்கும் இடத்துக்கும் அமைய உரைக்கும் ஆற்றல் அவரிடம் பெருகியிருந்தது. இவையன்றியும் அவர் முகப்பொலிவு கண்டவருள்ளத்தைக் கவர்ந்து ஒன்றுபடச் செய்யும். ஆகவே அவர் கிருத்திர கூடத்தில் கூறிய அறமொழிகளைப் பலர் கேட்டனர். கேட்டவர்களனைவரும் துறவு பெற்றுச் சங்கத்தைச் சார்ந்தனர்.

அப்பொழுது புத்தருடைய திருவடிகள் அம்மலைப் பாறையில் அழுந்தின. அப்பதிவில் ஆயிர ஆரத்து ஆழியும் அமைந்திருந்தது. அம்மலையே பாதபங்கய மலை.

## இடைவிடா முயற்சி

பாதபங்கய மலையை விட்டுப் புத்தர் புறப்பட்டார். கங்கையாற்றைத் தொடர்ந்து சென்றார். கண்டகி நதி கலக்குமிடத்துள்ள வைசாலி நகரமடைந்தார். அங்கே ஆம்ரவனம் என்னும் மாஞ்சோலையைக் கண்டார். அச்சோலை புத்த சங்கம் தங்குதற்கு ஏற்றதாயிருந்தது. ஆதலால், அவ்விடத்தில் சில நாட்கள் தங்கித் தம் ஞான விதையைத் தெளித்தார்.

பின்னர், அங்கிருந்து பாடலிபுத்திர நகரைச் சேர்ந்து கங்கையைக் கடந்தார். ஆதலால், அத்துறைக்குக் "கௌதம கட்டம்" எனப் பெயர் வழங்கலாயிற்று. இங்ஙனம் புத்தர் பெருமான் எங்கெங்கே சென்றாலும் மழைக்காலத்தில் திரும்பிவந்து மூங்கிற் சோலையில் தங்குவார். இவ்வளவும் நிகழ்த்திய புத்தர் ஜேதவனத்திலுள்ள மாளிகையில் வந்து தங்கினர். அக்காலம் அவர் ஞானம் பெற்ற நாற்பத்து நான்காம் யாண்டின் மாரிக்காலம்.

அந்த யாண்டில் மாரி ஓய்ந்தபின், புத்தர் வைசாலி நகர் சென்றார். அங்கே ஆம்பிரபாலி என்னும் கணிகைக்குத் துறவு தந்து சங்கத்திற் சேர்த்தார். அடுத்த யாண்டு மழைக்கால முற்றும் பேலுவம் என்னும் ஊரில் தங்கியிருந்தார். புத்தர் கொண்டது இடைவிடா முயற்சி.

## முதுமையும் முடிவும்

பெலுவம் என்னும் ஊரில் புத்தர்க்கு உடல்நிலை கெட்டது. ஆதலால், அங்கே ஒரு சோலையில் தங்கினார். அச்சோலை கபிலரைச் சார்ந்திருந்தது. மிகக் குளிர்ந்து அமைதிக்குரியதாக இருந்த அச்சோலையைப் புத்தர் விரும்பினார். ஆகையால் சில மாதங்கள் ஒரு மரத்தின் கீழ் கடவுளடி கருதி வீற்றிருந்தார். அப்போது அவர் உடல் நிலை மிகத் தளர்வெய்தியது. எய்தவே புத்தர் ஓரே இடத்திலிருந்து அறம் கூறினார். அவர் நிலை அறிந்த ஆனந்தன் மனம் கலங்கி நோக்கினான். அவனைப் புத்தர் அருகில் அழைத்து உண்மை கூறினார். "நான் இவ்வுலகை விட்டுச் செல்லும் நிலையை எய்தினேன்" என்றார். அதே நேரத்தில் நிலம் நடுங்கியது. மேலும் மிகவருந்தினான் ஆனந்தன். அவனுக்கு நிலையாமையை அறிவித்தார் புத்தர். அதுகேட்டு ஆனந்தன் அறிவு தெளிந்தான்.

புத்தர், வைசாலி நகரத்தில் தமது ஆயுள் முடிவதை விரும்பவில்லை. விரைவில் அவ்விடத்தை விட்டார். இளைப்பினால் உடல் அலுக்க நடந்துசென்று, போகநகரத்தை யடைந்தார். அவ்விடத்தில் ஆனந்த சைத்தியம் என்பது சிறந்த சோலை. அச்சோலையில் சாலமரங்கள் செறிந்திருந்தன. மன ஒய்வு கருதுகிறவர்களுக்குப் பெரிதும் துணைபுரியத்தக்க அந்நெடுஞ்சோலை அவர் உடல் நிலைக்கு ஏற்றதாயிருந்தது. எனவே தம்முடன் வந்திருந்த பலர்க்கு அவர் அறநெறிகளைக் கூறிக்கொண்டு அங்கிருந்தார்.

பின்னர் புத்தபெருமான், அவ்விடத்தையும் விட்டு அகலக் கருதினர். காசிக்கு வடகிழக்கில் பன்னிரண்டு காத தூரத்தில் கபிலவஸ்துவுக்கு நேர் கிழக்கிலுள்ள குசிநகரமடையக் கருதினர். போகநகரத்திற்கும் குசி நகரத்திற்கும் இடையே உள்ள பாவா நகரத்தில் ஒரு பொழுது தங்கினர். பாவா நகரில் மல்லர் என்னும் மரபினர், புத்த பெருமானுக்குப் பெரிதும் பெருமைசெய்து பௌத்த சங்கத்தையும் பாராட்டினர்கள்.

பாவா நகரில் சந்தன் என்னும் தட்டான் ஒருவன் சிறப்புடன் வாழ்ந்திருந்தான். அவன், புத்தரையும் சங்கத்தையும் ஒருவேளை உண்பிக்க விரும்பினன். பெருமானிடம் சென்று வேண்டினன். அவரும் இசைந்து சங்கத்துறவிகளுடன் இருந்து புசித்தார். சந்தனில்லத்தில் உண்ட உணவுடன் ஏதோ தீயபொருள் கலந்திருந்தது. அது புத்தருடைய உடல் நலத்தைக் கெடுத்தது. அந்நலியே அவர் முடிவுக்குக் காரணமாயிற்று. அன்றியும் பாவா நகரத்துச் சந்தனில்லில் உட்கொண்டதே கடைசி உணவாயிற்று.

அன்று தமது உடல் நலியுடன் 'நிலையாமை' என்பதுபற்றி அனைவர்க்கும் எடுத்துரைத்தார். பின்னர் அவ்விடத்தைவிட்டுப் புறப்பட்டார். ஆனல், அவரால் நடக்கவியலாமற் போயிற்று. எனினும் இடையில் மர நிழல்களில் தங்கித் தங்கிக்கடந்து சென்றார். இடைவழியில் புத்தர் நீர்வேட்கையினல் துன்புற்றார். அவ்வேளையில் மிக விரைந்துசென்று நீர்கொண்டு வந்து உதவியவர் ஆனந்தர். இப்படிச் சென்றுகொண்டிருந்த

புத்தர் 'குகுஷ்டை' யாற்றையடைந்தார். அதில் நீராடினார். அது புத்தர்க்குக் கடைமுழுக்காய் முடிந்தது.

பாவாநகரில் சந்தனளித்த உணவால் விளைந்த உடல்நலி புத்தர்க்குத் தீர்வதாயில்லை. நாளுக்கு நாள் மிகுந்து வருத்துவதாயிற்று. ஆதலால் சங்கத்துறவிகளிற் சிலர் சந்தனைப்பற்றி வெறுத்துப் பேசினார்கள். அச்செய்தியைப் புத்தர் அறிந்தார். "சந்தன் இட்ட உணவைப்பற்றி எவரும் குறைகூறலாகாது. என் பேரின்பச் செலவிற்குக் காரணமாயிற்று அவ்வுணவு. என் வாழ்நாளிலேயே இருவர் எனக்குச் சிறந்த உணவைத் தந்து உதவியிருக்கிறார்கள். அவர்களுள் நைரஞ்சரை யாற்றின் கரையில் மகாபோதியின்கீழ் இருந்த போது பாலூட்டிய சுஜாதை ஒருத்தி. அவள் அளித்த அப்பால் எனக்கு ஞானத்தையளித்தது. இரண்டாவதாக சிறந்த உணவு ஈந்து உதவியவன் சந்தன். இவனளித்த இவ்வுணவு இவ்வுலகைவிட்டு நீங்கிப் பேரின்பமடையும் தகுதியையளித்தது. ஆகையால் இவ்விருவரே எனக்கு வாழ்வு அளித்தவர்கள்" எனப் பாராட்டினார்.

புத்தர்பெருமான் மேலும் சென்று குசிநகரையடைந்தார். அந்நகரை யடுத்துள்ளது இரணியவதி யாறு. அக்கரையைச் சேர்ந்து புத்தர் இளைப்பாறினார். அப்பொழுது அவர் ஆனந்தரைப் பார்த்து "களைப்புத் தெளிவதற்காகப் படுக்கையமைக்க" எனப் பணித்தார்.

சிறிது நேரத்திற்குள் ஆனந்தர் படுக்கையிட்டு, விரைந்து வந்து புத்தருக்குத் தெரிவித்தார். புத்தர் தாமிருந்த இடத்தை விட்டெழுந்து சென்றார். இரட்

டைச் சாலமரத்திடையே சிறப்பாக இடப்பட்டுள்ள படுக்கையைக் கண்டார். படுக்கையில் வடக்கே தலை வைத்துத் தெற்கே காலிருக்கப் படுத்தார்; தமது வலக்கையைத் தலைக்கு அணையாக்கினார்; வலப்புறமாக ஒருக்கணித்தார்; கால்மேல் காலிட்டார், ஆண் அரி போன்று பெருந்தோற்றத்தோடு படுத்திருந்தார். அருகிலிருந்தவர் ஆனந்தர். அவரைப் புத்தர் அன்புகனிந்த பார்வையோடு மனம் கலந்து நோக்கினார். அவர் நோக்கத்தில் என்றுமில்லாத உருக்கம் ததும்பிவழிந்தது. அதனால், ஆனந்தர் மிக நெருங்கி நின்றார். "ஆனந்தரே, நான் இன்று இரவு நடுயாமத்தில் உங்களை விட்டுப் பிரிவேன்" என்றுரைத்தார். இச்சொற்கள் ஆனந்தர் உள்ளத்தை திடுக்கிடச் செய்தது. அவர்மனம் கலங்கி மெய்சோர்ந்து வருந்தினார், புத்தர்பெருமான் மறுபடி ஆனந்தரைப் பார்த்து,

"வருந்துவது ஏதுக்கு! பொள்ளற் குடத்தில் நீர் ஒழுகுதல் இயல்பன்றோ! ஒன்பது வழிகளையுடைய உடலில் உயிர் பல துன்பங்களுடன் உறைதல் எத்துணை வியப்பு! என்றைக்கிருப்பினும் வாழ்வு மாயம். கூட்டில் வாழும் பறவைபோல உடலில் தங்கியுள்ள உயிர் ஏதோ ஒரு நேரத்தில் விட்டொழியும். இதுபற்றித் துயர் கொள்ளுதல் தகுதியன்று. அதிலும் அறிவு தெளிந்த உம்போன்றோர் ஒருபோதும் வருந்தார். என் மீது கொண்டுள்ள பற்றினைவிடுக. என்னால் தொடங்கப்பட்ட தொண்டு சிறக்குமாறு இடை விடாது முயன்றுசெய்க. அப்படிச் செய்வதே என்னிடம் கொண்டுள்ள பற்றின் பயன்" என இயம்பினார்.

பின்னர், சூழவிருந்த துறவியர் பலரையும் நோக்கி ஞர். "இனி நம் தொடர்பு அற்றது. சங்கத்தை வளர்த்து அறிவுரைகளை எங்கும் எடுத்தோதி உயிர்க் கருணையைப் பரப்புங்கள். என்னைப்போல் ஆனந்தரைக் கொள்ளுங்கள். ஆனந்தர் ஐயமற்ற அறிவுடையவர். அவரிடத்தில் நீங்கள் அறிவு பெறுங்கள்" என உறுதி கூறினர்; களைத்துக் கண்ணயர்ந்தார்.

புத்தர் கண்ணயர்ந்தபோது அவருடைய மாணுக்கர்கள் மனம் வருந்தினர். எங்கும் அறிவொளி பரப்பிய ஐயன் அகல்கின்ருரே! இனி இருள் சூழுமே! என இரங்கினர். சற்றுநேரத்தில் கண்விழித்தார் கௌதம புத்தர். மனம் மகிழ முகம்மலர பரந்த விழிகளால் பரிவுடன் பார்த்தார். "வருத்தத்தை விட்டொழியுங்கள். பல நாட்களாக யான் பெறக்கருதி முயன்றதன் பயனுகப் பேரின்பப் பேறு அடையும் நேரம் நெருங்கியுளது. துன்பமற்றுத் தூயநிலை யடையும் நிலையிலுள்ள என் பொருட்டு நீங்கள் வருந்துவது பொருந்துவதன்று" என இன்னுரையியம்பித் தேற்றினுர். அதனுல் அவர்கள் தம் ஆசிரியருடைய அறிவுரைகளால் ஆறுதலடைந்தார்கள்.

குசிநகரில் சுபத்திரர் என்னும் அந்தணர் ஒருவர் புத்தருடைய சிறப்பைக் கேட்டார். அவரைப்பார்க்க விழைந்தார். அதே நேரத்தில் அப்பெருமான் கொண்டுள்ள சாக்காட்டு நிலையையும் அறிந்து மிக விரைந்து வந்தார். அவரைக் கண்ட ஆனந்தர் மறுத்தார். இப்பொழுது புத்தர் பெருமான் வாதம்புரியும் நிலையில் இல்லை என்ருர். அப்போது சுபத்திரர் தாம் வாதுக்கு

வரவில்லை எனக் கூறி நல்லுரைகேட்டு நல்வழி காண வந்தேன் என்றார். ஆதலால், சுபத்திரரும் புத்தரும் பேசும் வாய்ப்பு உண்டாயிற்று. சுபத்திரர் பல பொருள்களைக் கேட்டு மகிழ்ந்தார். ஆனால், புத்தர்பெருமானுடைய இறப்பு காணப் பொறாமல் வருந்தி அகன்றார்.

குசிநகரடைந்தபோது புத்தர்பெருமானுக்கு வயது எண்பது அவர் தமது ஞான விதைப்பாட்டுத் தொண்டைத் தொடர்ந்து நாற்பத்தைந்து யாண்டுகள் செய்திருக்கிறார். முதுமையைக் கண்டு அஞ்சி, அம்முதுமை நீங்கும் நெறியைக் காண விழைந்த பெருமான் துன்பங்களைத் தொலைக்கும் வழிகண்டார். பிணி மூப்புச் சாக்காடுகளுக்குக் காரணமாகிய ஆசையை அறுக்கும் போதம் புகட்டினார். உயிர்க்கருணை உலகெங்கும் பரவப் பாடுபட்டார். அவைகளை நடைமுறையில் ஒழுகிக் காட்டின பெருமான் பிறப்பற்றுப் பேரின்பமெய்தினார். உலகமக்களனைவரையும் ஒருங்கே திடுக்கிடச் செய்தது புத்தருடைய முதுமையும் முடிவும்.

### சைத்தியங்கள்

புத்தர் பெரும் புவிவாழ்வை நீத்தார் என்பது காட்டுத் தீப்போல் கடிதில் எங்கும் பரவிற்று. குசிநகரிலிருந்த மல்லர் இச்செய்திகேட்டு விரைவில் வந்தனர். வீழ்ந்துபட்ட அவ்வுடலைக்கண்டு விண்மாரி என இரு கண்மாரி பெய்தனர். அவ்வுடலை நறுமணம் ஊட்டி, அழகுபடுத்திப் பல்லக்கில் அமர்த்தினர். இன்னிசை பலவும் இயம்ப எடுத்துச் சென்று ஹிரண்யவதி நதி

கடந்தனர். முன்னரே மரித்த துறவியர் பலர்க்காகக் கட்டப்பட்ட சைத்தியங்களுள்ள இடத்தை யடைந்தனர். அங்கு சந்தனம் அகில் முதலிய மணமிக்க கட்டைகளை யடுக்கி, அதன்மீது பெருமானுடலைக் கிடத்தித் தீ மூட்டினார்கள். உடல் எரிந்து சாம்பராயிற்று. என்புகள் அனைத்தையும் எடுத்துப் பொற்குடத்திலிட்டனர். அக்குடத்தை குசிநகரின் இடையே யுள்ள கோபுரம் ஒன்றின்மீது வைத்து நாளும் பூசை புரிந்தனர்.

புத்த பெருமானது உடலெலும்புகளில் தங்கட்கும் உரிமை யுண்டென ஏழு நாட்டு மன்னர் வந்து கேட்டனர். அவர்களுள் மகதநாட்டு மன்னனும் ஒருவன். ஆனால் மல்லர்கள் தருதற்கு இணங்கவில்லை. ஆதலால் ஏழுவேந்தரும் படைதிரட்டி மல்லரோடு போர்புரிய எழுந்தனர். குசிநகரைப் படை வீரர் சூழ்ந்தனர். போரினால் நகர்க்கு விளையும் தீங்கினை யுணர்ந்த பெரியோர் பலர் போரை நிறுத்த முயன்றனர். அப் பெரியாருள் ஆன்றவிந்த அந்தணராகிய சுபத்திரர் முற்பட்டுச் சென்றார். மல்லரையும் மன்னரையும் ஒருங்கிருத்தி உற்ற நீதிகளை விளக்கினார். அதன் பின்னர், புத்தருடைய எலும்பு அனைவர்க்கும் பங்காதற் குரியதெனக் கொள்ளப்பட்டது. அவ்வாறே அவ்வெலும்புகள் எட்டுப் பங்காக்கி யளிக்கப்பட்டது, பங்கு பெற்றவர் அதனைத் தத்தம் நகரங்களில் சைத்தியங்கள் அமைத்து அதில் வைத்துப் பூசனை புரியலாயினர். (சைத்தியம் - கோபுரம்)

சுபத்திரர், மல்லரை யணுகிப் புத்தருடைய எலும்பிருந்த பொற்குடத்தைக் கேட்டுப் பெற்றார். மற்ற

ஏழு மன்னரிடமும் சென்று, ஒவ்வோரெலும்பு பெற்று, அக் குடத்திலிட்டு, அதனை அடக்கம் செய்து, ஒரு சைத்தியம் கட்டிப் பூசித்தார். மற்றும் குசிநகர மாந்தர் புத்தருடற் சாம்பரைக் கூட்டி அதற்கொரு சைத்தியம் கட்டித் தொழுதனர். இங்ஙனம் இப் பரதக் கண்டத்தில் பத்து சைத்தியங்கள் அமைந்தன. இவற்றிற்குத் தாதுகோபங்கள் எனப்பெயர் வழங்கினர். (தாது - எலும்பு, கோபம் - மறைவிடம்; எலும்புகளைப் பாதுகாத்து வைக்கப்பட்ட இடம் என்பது பொருள்) இவற்றுள் சுபத்திரர் அமைத்த சைத்தியத்திற்கு சுவர்ணகரக தாது கோபம் (சுவர்ண கரகம் - தங்கக்குடம்) என்றும் குசி நகர மாந்தர் அமைத்த சைத்தியத்திற்கு பஸ்மதாது கோபம் (பஸ்மம் - சாம்பர்) என்றும் பெயர். இவ்வகையில் மிகச்சிறப்புடன் போற்றப்பட்டன பத்து சைத்தியங்கள்.

## புத்தர் பாதபீடிகை

1. காவிரிப்பூம் பட்டினத்தில் உவவனம் என்னும் சோலை ஒன்றுண்டு. அவ்வுபவனத்தில் புத்த தேவருடைய பாதவடிவங்கள் அமைக்கப்பட்டிருந்தன. மற்றும் இலங்கைத் தீவு எனப்படும் இரத்தினத்தீவிலுள்ள சமந்தம் என்னும் மலைச் சிகரத்தின் மீதும் புத்த தேவருடைய அடிச்சுவடுகளுண்டு. அப்பாத பங்கய உருவங்களைப் புத்த தேவராகவே அம்மதத் தலைவர்கள் போற்றிப் பாராட்டினர்.

2. காவிரிப்பூம் பட்டினத்தின் தென்றிசையில் மணிபல்லவத்தீவு உளது. அது கடலின் நடுவே யிருக்

இன்றது. காவிரிப்பூம் பட்டினத்திற்கும் மணிபல்லவத் தீவிற்கும் முப்பதுயோசனை தொலைவு உளது. அச்சிறிய தீவு பாதபீடிகையினால் மிகப் பெரிய சிறப்புற்றது. அத் தீவில் புத்ததேவர் அமர்வதற்கென ஓர் இருக்கை அமைக்கப்பட்டுள்ளது. அந்த இருக்கை இந்திரனால் இடப்பட்டது. அப்பீடிகையை ஒரு தெய்வமாது காவல் செய்தாள். அவள் பெயர் தீவதிலகை. அத்தீவி லுள்ள புத்தபாத பீடிகையைக் கண்டு வணங்கியவர் கள் பழம் பிறப்பை அறிவார்கள். ஆதலால், அக்கா லத்து பலநாட்டு மக்களும் சென்று கண்டு வணங்கும் கனம் பெற்றிருந்தது புத்தர் பாதபீடிகை.

## பிற்காலம்

புத்தர் பெருமான், மகா போதி (அரசு) மரத் தின் கீழ் போதம் பெற்ற பின்னர் அவர் வாழ்வு உயர் நிலையும் உண்மைத் தொண்டும் உடையதாயிற்று. ஆனால், அவர்க்குப் பின்னர் இவை இரண்டும் விண்ணை யும் கடக்கும் நிலையில் பரவியோங்கின. ஆகையினாற் றான் அவருடற் சாம்பரும் எலும்புகளும் பன்னாட்டு மன்னர்களாலும் பங்கீடாகக் கொள்ளப்பட்டன. அவற்றை நினைவுக் குறிகளாகக் கொண்டு கோயில் களும் கோபுரங்களும் கட்டப்பட்டன. அன்றியும் அசோகன் காலத்தில் புத்தபெருமானது அறவுரைகள் மிகச் சிறப்பாகக் கொள்ளப்பட்டன. அசோகனால் நிறுத்தப்பட்ட கற்றூண்களில் புத்தருடைய அறி வுரைகளும் அறவுரைகளும் எங்கும் பரவப் பல வாய்ப் புக்களையுடையதாயிற்று அவருடைய பிற்காலம்,

**காலம்**

புத்தர்பெருமான் கி. மு. 563-இல் தோன்றினர். கி. மு. 483-இல் மறைந்தார். அவர் வாழ்க்கையின் யாண்டளவு எண்பது. அதில் 29-யாண்டுகள் இளமை யின்பம், அரசியலின்பம், மண வாழ்க்கையின்பம் என்னும் துறைகளில் துன்பம் தெரியாமல் வாழ்ந்தார். பின்னர் உலகில் உள்ள வறுமை, பிணி, மூப்பு, சாக்காடு என்னும் துன்பங்களை அறிந்து அவற்றினின்று விலகும் நெறி காணவேண்டி நெடுவழி நடந்தும் காடு, மலைகள் கடந்தும் பட்டினிகிடந்தும் பல பாடுபட்டார். தமது முயற்சியால் யாண்டுகள் ஆறுகடந்த பின்னரே நைரஞ்சரை யாற்றின் கரையில் மகாபோதி என்னும் பேரரசு மரத்தின்கீழ் ஞானம் பெற்றார். அவர் ஞானம் பெற்ற வயது 35-என்றும் அவ்யாண்டு கி. மு. 528-என்றும் தெரிகின்றது. எனவே புத்தருடைய 39-ஆவது வயதில் அதாவது கி. மு. 524-இல் தமது 97-ஆவது வயதில் சுத்தோதனர் இறந்தார் என்றும் அறிகின்றோம். அவ்யாண்டு ஈசான சகாத்தம் நூற்றேழாவது யாண்டு என்பர். ஈசான சகாத்தம் அறுபத்தெட்டாம் யாண்டு கி. மு. 563-க்குச் சரியானது. அந்த யாண்டில் வைகாசித் திங்கள் நிறைமதியில் விசாகம் கூடிய வெள்ளிக்கிழமை புத்த ஞாயிறு தோன்றியது என்று அறிஞர் உரைத்துள்ளனர். புத்தர் தமக்கு ஞானம் தோன்றிய நாற்பத்தைந்தாம் யாண்டு தமது எண்பதாவது வயதில் அதாவது கி. மு. 483-இல் மண்ணுலக வாழ்வைத் துறந்து மறைந்தார் என்பது தெரிகின்றது என்றால் இற்றைக்குச் சற்றேறக்குறைய 2500-யாண்டுகட்கு முற்பட்டது புத்தர் காலம்,

## புத்தர் பெற்ற ஞானம்

புத்தர்பெருமான் போதியின்கீழ் இருந்த காலத்தில் இருபத்தொன்பதாம் நாள் நல்லறிவு பெற்ருர். அவர் தமது தெளியறிவாகிய ஞானத்தால் முற்பிறவியில் தீவினை செய்தவர்கள் இப்பிறவியில் துன்ப வாழ்வுறுவர்; அன்றி உயிர்க்கருணையாகிய நல்வினை செய்தோர் இப்பிறவியில் இன்ப வாழ்வெய்துவர் என்பதை அறிந்தார். பின்னர் பற்று, சினம், அறியாமை ஆகிய மூன்றிஞல் துன்பம் விளைகிறது; துன்பமே நோய்க்கும் மூப்புக்கும் சாக்காட்டுக்கும் காரணம் என்று தெளிந்தார். தெளிந்த புத்தர், துன்பம், துன்பந்தோன்றும் காரணம், துன்பத்தை ஒழிக்கும் முறை என்னும் மூன்று உண்மைகளை அறிந்தார். அதிலிருந்து நற்காட்சி, நல்லூற்றம், நல்வாய்மை, நற்செய்கை, நல்வாழ்க்கை, நன்முயற்சி, நற்கடைப்பிடி, நல்லோர்நட்பு என்னும் நன்னெறி எட்டையும் கண்டு ஒழுகிஞர். இந்நன்னெறி எட்டும் நான்காவது உண்மை எனப்படும்.

நைரஞ்சரை யாற்றின் கரையில் பேரரசின்கீழ் இருந்தபோது ஒரு நாள் புத்தர் நீராடச்சென்ருர். அவ்வேளையில் நீரில் மிதந்துவந்த தூண் ஒன்றைக் கண்டார். அதில் "தோன்றுவன அனைத்தும் அழிவன. அவை மீண்டும் மீண்டும் தோன்றியழியும். இப்படிப்பட்ட பிறப்பும் இறப்பும் நீங்கிஞல்தான் இன்பம் விளையும்" என்னும் பொருளைத் தரும் உரைகள் எழுதப்பட்டிருந்தன. அதைக் கண்டதஞல் புத்தர் ஞானம் பெற்ருர் என ஜப்பான்நாட்டு நூல்களில் காணப்படுகின்றன.

எவ்வகையிலும் உலகிற்கோர் நல்வழி காட்டுவதா யிற்று புத்தர் பெற்ற ஞானம்.

## வாழ்த்து

புத்தர்பெருமான் உயிர்களின் துயர்கண்டு, துயரை ஒழிக்கப் பாடுபட்டு, விடாமுயற்சியால் நல்வழி கண்டு, மக்களுக்கு அந்நன்னெறியை விளக்கி, அதில் ஒழுகச் செய்து, தாமும் உடனிருந்து ஒழுகி, பிறவித் துயர் ஒழிந்து பேரின்ப வாழ்வு பெற்றுர். அவர் கண்ட உண் மையறிவு நீடு நிலைத்துப் பரவவேண்டி நாம் கூறுவோம் வாழ்த்து.

வாழ்க அருள்.

# மகாத்மா காந்தியடிகள்

## 1. பிறப்பியல்

### அருள்

கடவுள் படைப்பினுல் ஆகிய உயிர்கள் பல. அவை இயங்கும் உயிர்கள், இயங்கா உயிர்கள் என இருவகைப்படும். இவற்றுள் இயங்கும் உயிர்கள் மக்கள், விலங்கு, பறவை, நீர்வாழ்வன, என்பனவும் இவைபோன்ற பலவுமாம்.

மரம், செடி, கொடி, புல், பூண்டு என்னும் பலவும் இயங்கா வுயிர்களாம்.

உயிர்களை இயங்கும் உயிர்கள் இயங்கா வுயிர்கள் என இருவகையாகப் பிரித்தாலும் பயன் அளவில் ஒன்றுக்கொன்று இன்றியமையாததாய் உள்ளது. இவ்வின்றியறியாமையே தொடர்பு அல்லது பற்று எனப்படும். தொடர்பு என்பது உயிர்கள் தமக்குத் தெரிந்தோ தெரியாமலோ, கருதியோ கருதாமலோ ஒன்றற்கொன்று சார்பாயிருப்பதும் பயன்படுதலும் ஆகும். பற்று என்பது ஒருயிர் மற்றும் ஒருயிரை மனத்தால் விரும்பித் தொடர்பு கொள்வது. இதனைப் பற்றுள்ளம் எனக் குறிப்பதும் உண்டு. இப்பற்றுள்ளம் தனியே ஓரிடத்தில் காரணம்பற்றி அமையும்போது அன்பு எனப்படும். காரணம் கருதாமல் எல்லாவுயிர்கள் பொருட்டும் கொள்ளப்படும் இரக்கம் அருள் எனப்படும்.

அன்பெனப்படுவது இயல்பினுல் மிகமேம்பட்டது. அதனினும் மேம்பட்டது அருள். அருளைக் கருணை என்றும் சொல்வதுண்டு. அன்பு எவரிடத்தும் இயற்கையாக ஓரளவு அமைந்திருத்தல் இயல்பு. ஆனுல் அருள் ஒருவருளத்தில் அமையப்பெறுதல் அரிது; அரிதினும் அரிது. எனவே அருள் என்னும் பண்பைத் தெய்வத் தன்மை என்பர் அறிஞர். இத் தெய்வப்பண்பு உடையாரே உலகத்தில் உயர்நிலையெய்துவர்.

இன்னர் இனியர் எமர்பிறர் என்னும் சொல்
என்னும் இலராம் இயல்பினுல்—துன்னும்
தொலேமக்கள் துன்பம் தீர்ப்பாரே யார்மாட்டும்
தலேமக்கள் ஆகற்பா லார்

என்னும் நாலடியார் செய்யுள் இதனை நன்கு விளக்கும்.

உயிர்களிடத்துக் கருணையாகிய அருளுள்ளமுடையவர்கள் தமக்கென வாழாப் பிறர்க்குரியாளர் எனப் பாராட்டப்படுகின்றனர்.

"அன்பிலார் எல்லாம் தமக்குரியர் அன்புடையார்
என்பும் உரியர் பிறர்க்கு"

எனத் திருக்குறள் கூறுகிறது. ஆயினும் இங்கே அன்பெனக் குறிக்கப்படுவது அன்பின் முதிர்ச்சியாகிய அருள்தான். மேலும் அருள் என்பது வருந்தும் உயிர்கள் பொருட்டு விளைவதாகிய மனக்கசிவு. இதனையுடையவரே பெருஞ்செல்வர் எனத் திருவள்ளுவர் பாராட்டிக் கூறுகிருர்.

"அருட்செல்வம் செல்வத்துட் செல்வம் பொருட்செல்வம்
பூரியார் கண்ணும் உள"

என்னும் குறளிலிருந்து அருளே செல்வங்களுள் சிறந்த செல்வம் என்பதை அறியலாம். இதுபற்றியே அருளுடையவர்கள் மகாத்மாக்கள் எனப் போற்றப்படுகிருர்கள். அவர்கட்கு அமைந்துள்ள சிறந்த பண்புகளுள் உயிர்க்குயிராயுள்ளது அருள்.

## காந்தி மரபு

இந்தியா ஆகிய நம் நாடு வட இந்தியா தென் இந்தியா என இரு பகுதியாகச் சொல்லப்படும். அவற்றுள் வட இந்தியாவில் கத்தியவார் என்னும் நிலப்பகுதியிருக்கிறது. அதைச் சேர்ந்தது போர்பந்தர் என்னும் சமஸ்தானம். சமஸ்தானம் எனப்படுவது ஒருசிறு நிலப்பகுதியை உரிமையாகக்கொண்டு மன்னனேடு ஒப்பான நிலைபெற்று வாழ்வது. இதனைக் குறுநில உரிமையாட்சி என்னலாம்.

போர்பந்தரில் ஒருகாலத்தில் முதல் மந்திரியாயிருந்தவர் உத்தம சந்திரகாந்தி. இவர் பனியா சாதியைச் சேர்ந்தவர். வைசியர் மரபைச் சேர்ந்தவர்களே பனியா எனப்படுவார்கள். னியா என்னும் வடநாட்டு வைசியர்கள் காந்தி என்னும் குலப்பெயர் கொண்டிருந்தார்கள். இவர்கள் பழங்காலத்தில் பல பண்டம் விற்கும் மளிகைக்கடை வாணிபம் புரிந்தார்கள். அவர்களுள் உத்தமசந்திரகாந்தி கல்வி, அறிவு, ஒழுக்கம், நடுநிலை, ஆண்மை ஆகியவற்ருல் மேனிலையுற்றிருந்தார். ஆதலால், போர்பந்தர் சமஸ்தானத்தில் திவான் பதவியில் இருந்தார். (திவான் - அமைச்சர்)

போர் பந்தரில் அமைச்சராயிருந்த உத்தமசந்திர காந்தி நேர்மை மாருதவராதலால் சிலருடைய பகையைப் பெற்ருர். அப்பகைவர் செய்த சூழ்ச்சிக்குத் தப்பி, உத்தமசந்திரகாந்தி ஜுனுகாத் சமஸ்தானத்தை அடைந்தார். அங்கேயும் அவர் அமைச்சர் பதவியைப் பெற்றுச் சிறக்க வாழ்ந்தார். உத்தமசந்திர காந்தி கால்முதல் அமைச்சுப் பதவியிலேயே சிறக்க வாழ்ந்தது காந்தி மரபு.

## காபா காந்தி

உத்தமசந்திரகாந்திக்கு ஆறுபிள்ளைகள். அவர்கள் அனைவரும் மிக ஒற்றுமையாக வாழ்ந்தார்கள். அவர்கள் ஒற்றுமையில் ஒரு வியப்பு உண்டு. அதாவது அப்பிள்ளைகள் அறுவரும் ஒரு தாய் வயிற்றிற் பிறந்தவர்களல்லர். முதல் நான்கு பிள்ளைகள் ஒரு தாய் வயிற்றிலும் பின் இரு மைந்தர் மற்ெருரு தாயின் வயிற்றிலும் பிறந்தவர்கள். ஆயினும் மாற்ருந்தாய் மக்கள் என்னும் மாறுபாடு அவர்களிடம் சிறிதும் தோன்றியதே இல்லை. இப்பிள்ளைகளுள் ஐந்தாம் பிள்ளையாகத் தோன்றியவர் கரம்சந்திர காந்தி. இவர் கல்விப்பயிற்சி மிக்கவரல்லர்; சிறிதளவே படித்தவர்; இளமையில் ஐந்தாம் வகுப்பு வரையில் படித்தவர். சிறிதளவே படித்த உத்தமசந்திர காந்தி, உலகியலறிவு சிறக்கப் பெற்றிருந்தார். பழக்கத்தாலான பேரறிவுத் திறமையே அவரை மேனிலைப்படுத்தியது. மிகப் பெரிய சிக்கல்களையும் மிக எளிதில் தீர்க்கும் வன்மை உத்தமசந்திர காந்திக்கு உண்டு. அன்றியும் பலரைக் கீழடக்கி நடத்தும் திறமையும் அவர்க்குண்டு. சமயக்

கல்வி பயிலாதவராயிருந்தும் இவர் கோயில் சென்றும் சொற்பொழிவுகளைக் கேட்டும் சமய ஞானத்தில் தேர்ந்தார். இவர் காபா காந்தி என்றே அனைவராலும் அழைக்கப்பட்டார். காபா காந்தியும் போர்பந்தர் திவானாக இருந்தார். மற்றும் அக்காலத்தில் இராஜஸ்தானில் ஒரு நீதிமன்றம் இருந்தது. அதில் காபா காந்தி ஓர் உறுப்பினராய் இருந்தார். மற்றும் அவர் இராஜகோட்டை திவானாகச் சிறிது காலமும் பின்பு, வங்கநேரு திவானாகச் சிலகாலமும் வேலைப்பார்த்துச் சிறப்புற்றார்.

காபா காந்திக்கு மனைவியர் நால்வர். அவர்களுள் நான்காவது மனைவியார் புத்லிபாய் அம்மையார். புத்லிபாய்க்கு மூன்று ஆண் குழவிகளும் ஒரு பெண்மகவும் பிறந்தன. அவ்வம்மையார் நல்லொழுக்கமுடையவர்; இயல்பாகவே கடவுட்பற்று அமைந்தவர். எப்பொழுதும் நோன்பு கையாளுவதில் புத்லிபாய்க்கு மிக விருப்பம். நோன்பிலும் பட்டினி நோன்பு, ஒருவேளை யுணவு நோன்பு என அவ்வம்மையார் என்றும் இருப்பார். புத்லிபாய்க்கு அரண்மனை மாதர் பெருமதிப்பு தருவதுண்டு. இவ்வம்மையாருடன் அன்பு நிறைந்த இல்லறம் நடத்தினார் காபா காந்தி.

## பிறப்பு

போர்பந்தர்க்கு சுதாமபுரி என மற்றும் ஒரு பெயர் உண்டு. அந்நகரின் மன்னரிடம் காபாகாந்தி திவானாக இருந்தபோது அவர்க்குப் பிறந்தது கடைசி மகவு. அம்மகவு 1869-ஆம் யாண்டு அக்டோபர் திங்கள் 2-ஆம் நாள் பிறந்தது. அப்பிள்ளைக்கு மோகனதாஸ்

என்னும் பெயர் சூட்டப்பட்டது. கடைக்குட்டி பிள்ளையாதலால் மிகச் செல்வமாக போற்றி வளர்க்கப் பட்டது. மோகனதாஸ் ஏழு வயது அடைந்தபோது காபா காந்தி போர்பந்தரை விட்டார். இராஜகோட்டையில் திவானாக அமர்ந்தார். அங்கே காபா காந்தி பெருஞ் செல்வாக்குடன் வாழ்ந்தார். மோகனதாஸ் இளமையில் மற்றவர்களுடன் மிக இணக்கமாக இருப்பார். ஆனால், அவர் மிகச் சுறுசுறுப்பின்றி மந்தமாகவே காணப்பட்டார். எனினும் எவ்வகையிலும் அவர் மற்ற சிறுவர்களை விடத் தாழ்ந்தவராயில்லை.

இளமையில் மோகனதாஸ் மிக அமைதியாயிருந்ததனால் மற்றவர்களுடைய பாராட்டைப் பெற்றார். அதனோடு எதையும் கூர்ந்து நோக்குவார். இவருள்ளம் இயற்கையிலேயே மிக இரக்கமுடையதாயிருந்தது. எந்த இடத்தில் எப்படிப்பட்ட வருத்தத்தை இவர் கண்டாலும் கசிந்துருகிக் கண்ணீர் விடுவார். இவர் எதைப்பற்றியும் எவரிடமும் அளவு கடந்து பேசமாட்டார். சொல்லிழுக்குக்கு அஞ்சி நாவடக்கத்தைக் கைக்கொண்டார் மோகனதாஸ். என்றும் இவர் உண்மையே பேசுவார். குற்றத்தை மறைக்கும் குணம் இவரிடம் சிறிதும் இல்லை. எனவே மோகனதாஸ் குணவான் எனக் கொண்டாடப்பட்டார். "குணவான் தன் குற்றம் உணர்வான்" அன்றோ! மோகனதாஸ் குற்றம் உணர்வது மாத்திரமின்றி மன்னிப்பும் கேட்பார். இத்துணையும் நற்பண்புகளையுடைய தமது பிள்ளையைப் பிறர் பாராட்டக் கேட்ட பெற்றோர் ஈன்ற பொழுதினைக் காட்டிலும் பெரிது உவந்தனர். இம்மகவின் தோற்றமே இந்தியாவின் விடுதலைப் பிறப்பு.

# 2. படிப்பியல்

## இளமைக் கல்வி

மோகனதாஸ் இராஜகோட்டை பள்ளியில் சேர்க்கப்பட்டார். தொடக்கப் பள்ளிப் படிப்பை அவர் மிக எளிதில் முடித்தார்; விரைவிலும் முடித்தார். போர் பந்தரிலேயே அவருடைய கல்வி தொடங்கப்பட்டது என்றாலும் அவர் இராஜகோட்டை பள்ளியில் தான் நிலைத்துப் படித்தார். அப்போது அப்பள்ளியில் இருந்த ஆசிரியர்கள் அனைவருடனும் மோகனதாஸ் பழகினார்; ஒவ்வொரு ஆசிரியரும் அவரை நன்கு அறிந்திருந்தார்கள். அறிந்தது மாத்திரமே யன்றி அவருடைய குண ஒழுக்கங்களையும் எடுத்துக் கூறுவார்கள். இப்படி இவர் ஐந்து யாண்டுகள் படித்தார்.

தமது பன்னிரண்டாவது வயதில் மோகனதாஸ் உயர்நிலைப் பள்ளியில் சேர்ந்தார். அங்கேயும் இவர் அனைவர்க்கும் அன்பராகவே இருந்தார். எவரோடும் கலந்து தாராளமாகப் பேசமாட்டார் என்னும் குற்றம் மோகனதாஸ்மீது சிலர் கூறுவர். ஆயினும் மனக் கூச்சத்தால் அவர் அப்படி இருக்கிறார் என்னும் காரணம் அக் குற்றத்தை விலக்கியது. அவர் எப்போதும் நூலேந்திப் பாடம் பாடமாகவும் பக்கம் பக்கமாகவும் படித்துக்கொண்டிருப்பார். ஆகையால் பள்ளிக்கு உரிய நேரத்தில் சென்று பள்ளி முடிந்தவுடன் திரும்பிவிடுவார். "பிறருடன் பேசாதிருப்பதன் பொருட்டு நான் பள்ளியிலிருந்து வீடு திரும்பும் நேரத்தில் விரைவாக ஓடுவேன். அதைப் பார்த்து எவரேனும் கேலிசெய்

வார்களோ! என நான் கருதுவதும் உண்டு'' என்று தம் வரலாற்று நூலில் எழுதியிருக்கிறார் காந்தி. இதனால் என்ன தெரிகிறது? மோகனதாஸ் இளமையிலேயே காலத்தைப் பொன்போல் போற்றி வீணாக்காமல் பயன் படுத்தினார் எனத் தெரிகின்றதல்லவா? எவ்வகையிலும் இடையூறின்றி மோகனதாஸ் கல்வியில் முன்னேறினார். அவருடைய எதிர்கால ஏற்றத்திற்கு எடுத்துக்காட்டா யமைந்தது இளமைக் கல்வி.

## ஒரு நிகழ்ச்சி

மோகனதாஸ் உயர்நிலைப் பள்ளியில் சேர்ந்த முதல் யாண்டில் பள்ளிப் பார்வையாளர் (Inspector) வந்தார். அவர் பெயர் 'மிஸ்டர் - கைல்ஸ்' என்பது. அவர் வகுப்பில் நுழைந்து கல்வித் தேர்ச்சியை நோக்கத் தொடங்கினார். அதற்காக அவர் ஐந்து சொற்களைச் சொல்லி எழுதச் செய்தார். எல்லோரும் எல்லாச் சொற்களையும் பிழையின்றி வரைந்தார்கள். ஆனால், மோகனதாஸ் மாத்திரம் 'கெட்டில்' (Kettle) என்னும் சொல்லைப் பிழையாக வரைந்தார். ஆசிரியர் அப்பிழையைப் பார்த்தார். ஆதலால், பார்வையாளர்க்குத் தெரியாமல் ஆசிரியர், மோகனதாஸ் கால் விரல் நுனியை மிதித்தார். ஆனால், அதன் குறிப்பை மோகனதாஸ் அறியவில்லை. ஆதலால், ஆசிரியருடைய முயற்சி வீணாயிற்று. மோகனதாஸ் எழுதியதில் பிழை ஏற்பட்டுத் தாழ்வுற்றார். பின்னரும் ஆசிரியர் பலமுறை முயன்று காட்டிக் கொடுத்தாராயினும் மோகனதாஸ் காபி அடிக்கும் வழக்கத்தைப் பற்றவே இல்லை. அதற்குக் காரணம் அவருடைய உயர் நோக்கமே. அன்றியும் இச்சிறுமைக்காக மோகன

தாஸ், தம் ஆசிரியரை எள்ளளவும் தாழ்வாகக் கருதியவரல்லர். பெரியோரிடம் குற்றம் காணுதிருக்கும் உயர்குணம் மோகனதாஸ் இடம் குடிகொண்டிருந்தது. மோகனதாஸ் கொண்டிருந்த நற்பண்பை ஆராய முதலாயமைந்தது இந்த ஒரு நிகழ்ச்சி.

## மனப்பதிவு

1. மோகனதாஸ் பாடநூல்களையன்றிப் பிறநூல்களை விரும்பிப் படிக்கமாட்டார். ஆனுல், ஒருமுறை அவர் ஒரு நூலைத் தந்தையாரிடம் கண்டார். அதை வாங்கிப் பார்த்தார். சிரவணன், பெற்ருேரிடம் கொண்டிருந்த பேரன்பை விளக்கும் கதைநூல் அது. அக்கதையை மோகனதாஸ் படித்தார். அதே காலத்தில் அவர் படக்காட்சி ஒன்றைப் பார்த்தார். அஃது அக்கதைப் படமே. சிரவணன், கண்ணிழந்த பெற்ருேரைக் காவடியில் சுமந்து செல்லும் காட்சி அவருள்ளத்தைக் கவர்ந்தது, அக்காட்சியைத் தமக்கு வழிகாட்டியாகக் கொண்டார். மற்றும் சிரவணன் இறந்தது பற்றிப் பெற்ருேர் புலம்பிய நிலை, அவருடைய மனதை உருக்கியது. அப்பாடலை மோகனதாஸ் அடிக்கடி பாடுவார்; இசைக் கருவியில் பாடுவார்.

2. மோகனதாஸ் ஒருமுறை நாடகம் பார்த்தார். அது அரிச்சந்திரன் கதை நாடகம். அக்கதை, அவருடைய உள்ளத்தில் ஊன்றிவிட்டது. அரிச்சந்திரனுடைய உண்மையுள்ளத்தை மோகனதாஸ் மிகமிகப் பாராட்டுவார். உண்மையைக் கடைப்பிடித்து அரிச்

சந்திரன்பட்ட துன்பத்தை எண்ணி எண்ணி மோகன தாஸ் இரங்குவார். கண்ணீர் விட்டழுவார்.

சிரவணன் கதை, அரிச்சந்திரன் கதை ஆகிய இரண்டில் பெற்றோரிடத்தன்பு, உண்மையில் உறுதி என்னும் இரண்டு காட்சிகளும் மோகனதாஸ் மனத்தில் பதிந்து பற்றின. இந்நிலையை புத்தர் கண்ட நான்கு காட்சிகளால் உற்ற மன நிலையோடு ஒத்திட்டுப் பார்ப்போம். அருள் அமைந்த நெஞ்சின் பண்பு, பிறர் துயரம் கண்டாலும் கேட்டாலும் கசிந்துருகுவது. அன்றியும் அவர் துயரை அரும்பாடு பட்டேனும் அகற்றுவது. இவ்விருவரருது உள்ளங்களை ஒப்பிட்டுப் பார்க்குங்கால் வறுமை, பிணி, மூப்பு, சாக்காடு என்னும் நான்கு துயரங்களைக் கண்டு கசிந்துருகினர் கௌதம புத்தர். பெற்றோர் மாட்டன்பும் மகன் மாட்டன்பும் உண்மையில் உறுதியும் கதையில் படித்தும் நடிக்கக் கண்டும் கசிந்துருகினர் மோகனதாஸ். என்றால் அருள் நிலையில் புத்தரைக்காட்டிலும் மோகனதாஸ் ஒருபடி மேம்பட்டவராகின்றாரன்றோ! இவ்வகையில் அவருடைய அருள்திறத்தை வெளிப்படுத்தியது மனப்பதிவு.

**மணம்**

உயர்நிலைக் கல்வி தொடங்கியவுடனே மோகன தாஸ் காந்திக்கு திருமணம் ஏற்பாடாயிற்று. ஆனால், மோகனதாஸ் ஏழு வயது அடைந்தபோதே ஒரு பெண் உறுதி செய்யப்பட்டது. பெண் உறுதிப்படுத்துவதை நிச்சயதாரம் அல்லது நிச்சயதார்த்தம் என்பது இந்தியர் வழக்கம். (தாரம் - மனைவி, நிச்சயம் - உறுதி

எனவே நிச்சயதார்த்தம் என்பதற்கு - மனைவியாதற்கு உரியவளை உறுதிப்படுத்துவது என்று இதற்குப் பொருள்.) முதன்முதல் மோகனதாஸ் காந்திக்கு உறுதிப்படுத்திய பெண் இறந்துவிட்டது. மீண்டும் ஒரு பெண் அவர்க்கென உறுதி செய்யப்பட்டது. அப் பெண்ணும் இளமையில் இறந்தது. ஆதலால் மூன்ருவதாக ஒரு பெண்ணை உறுதி செய்தார்கள்.

காபா காந்தி வயது முதிர்ந்தவர். அவர் கடைசியாகச் செய்யவேண்டிய திருமணம் இதுதான். ஆகையால் பெருஞ்செலவில் மிகு சிறப்பாக அத்திருமணம் நிறைவேறிற்று. ஆயினும் அதில் ஒரு குறை. திருமணம் போர்பந்தரில் நடந்தது. காபா காந்தி இராஜகோட்டையிலிருந்து கலியாணத்திற்கு வந்தார். அவர் வந்துகொண்டிருந்த குதிரைவண்டி கவிழ்ந்து விழுந்தது. அதனுல் அவர்க்கு உடல் முழுதிலும் காயங்களாயின. வழியில் ஒரு மருத்துவச்சாலையில் காயங்களுக்குக் கட்டு கட்டிக்கொண்டு வந்து சேர்ந்தார். அப்படி யிருந்தும் அவர் மணத்தில் செய்யவேண்டியவற்றை உடனிருந்து செய்தார்.

மோகனதாஸ் தமது மணத்தைப் பற்றிய குறிக்கோள் ஒன்றையும் அறியாத முன்னரே மணமகனுகிவிட்டார். அவர் மனைவியின் பெயர் கஸ்தூரிபாய். அவ்வம்மையார் தூயமனதுடையவர்; தம் விருப்பப்படி நடக்கும் மன உறுதியுடையவர்; விடாமுயற்சியுடையவர். ஆயினும் நாணமுடையவர். பெண்களுக்குறிய நற்குணங்கள் அனைத்தும் அமையப்பெற்ற கஸ்தூரிபாய்க்குப் படிப்பு தெரியாது. தமக்குக் கல்வி தெரியாது

என அவர் ஒருபொழுதும் கவலைப்பட்டதே இல்லை. தமது மனைவிக்குக் கல்வியூட்ட வேண்டுமென்னும் விருப்பமும் முயற்சியும் மோகனதாஸ் மனத்தில் அளவு கடந்திருந்தது. ஆயினும் அவை சிறிதும் பயனளிக்க வில்லை.

மணம் புரிந்ததன் பயனாக மோகனதாஸ் கல்வி, இடையில் ஓர் யாண்டு தடைப்பட்டது. எது எப்படி யாயினும் மோகனதாஸ் மனத்துக்குப் பெருமகிழ் வையே ஊட்டியது மணம்.

**மறக்கக் கூடாதவை**

மோகனதாஸ் உயர்நிலைப் படிப்பு தொடங்கிய பின்னர் தமது மந்த நிலையிலிருந்து விடுபட்டார். விடா முயற்சியும் சுறுசுறுப்பும் கொண்டார், அவற்றின் பய னாக அவர் ஐந்தாம் வகுப்பிலும் ஆறாம் வகுப்பிலும் பரிசுகள், உதவிச் சம்பளங்கள் எனப் பலவும் பெற்றார். அவர் கல்வியில் எவ்வளவுக் கெவ்வளவு விருப்பம் கொண்டிருந்தாரோ அவ்வளவுக் கவ்வளவு உடற்பயிற் சியில் வெறுப்புக் கொண்டிருந்தார். கல்வியோடு உடற் பயிற்சிக்கு ஒரு சம்பந்தமும் இல்லை என்பதே அவ ருடைய இளமைக் கருத்து. ஆனால் அவர் உற்ற வய தடைந்தபோது மனப்பயிற்சி வலுப்படுவதற்கு உடற் பயிற்சி துணைசெய்யும் என்பதை அறிந்து வெளியிட் டுள்ளார்.

மோகனதாஸ் உடற்பயிற்சி வகுப்புக்குப் போவதே இல்லை. இதற்குக் காரணம் வெறுப்பு மாத்திரமன்று. அந்த நேரத்தைத் தமது தந்தைக்குத் தொண்டு புரிவதில்

கழிக்கவேண்டும் என்கிற எண்ணமும் காரணமாயிருந்தது. இவர் உடற்பயிற்சி வகுப்புக்குக் குறித்தகாலத்தில் செல்லாத குற்றத்தினால் ஒருமுறை ஓரணு தண்டம் கட்டவும் நேர்ந்தது. என்றாலும் காபா காந்தி அப்பள்ளித் தலைமையாசிரியர்க்கு எழுதி, உடற்பயிற்சி வகுப்புக்கு மோகனதாஸ் போகாதிருக்க விடைபெற்றுத் தந்தார்.

மோகனதாஸ் கல்வியில் விருப்பமும் முயற்சியும் உடையவர் என்பதை ஆசிரியர்கள் நன்கு உணர்ந்திருந்தார்கள். ஆதலால், அவர் மணத்தினால் யாண்டு ஒன்று வீணாயினதைப் பற்றி அவர்கள் கவலை கொண்டார்கள். அதை ஈடுபடுத்துவதற்காக யாண்டின் இடையில் மேல் வகுப்புக்கு மாற்றப்பட்டார். அதனால் அவர் சில பாடங்களைக் கற்க வருந்தினார். எனினும் அவர் அறிவைத் தூண்டிப் பெரிதும் முயன்று படித்துக் கொண்டார்.

மோகனதாஸ் உடற்பயிற்சியில் பொறுப்பின்றி நடந்து கொண்டதைப் போலவே வடமொழி கற்பதிலும் கருத்தூன்றாதிருந்தார். அம்மொழியை விட்டுப் பாரசிக மொழி வகுப்பிற் சேர்ந்தார். அப்போது வடமொழி ஆசிரியர், அவரை அழைத்து, அன்பு கலந்த மொழிகளால் அறிவு புகட்டி, மீண்டும் வடமொழி கற்கச் செய்தார். மோகனதாஸ் உயர்நிலைப் படிப்பில் இக் குறிப்புக்கள் மறக்கக் கூடாதவை.

### தீய நட்பு

மோகனதாஸ் எவருடனும் வாய்விட்டுப் பேசமாட்டார். ஆதலால், அவருடன் பழகும் நண்பர் மிகச்

சிலரே. அச்சிலரும் தொடர்ந்து பழகியதில்லை. இந்நிலையில் அவர்க்கு உயர்நிலைப் பள்ளியில் ஒருவர் நண்பரானார். அவர் சீர்திருத்த உணர்ச்சி மிக்கவர். சீர்திருத்தத்தில் மோகனதாஸ் மிகப் பற்றுள்ளவர். ஆதலால், இருவரிடையே நட்பு ஏற்பட்டது. இவ்விருவர்க்கும் அமைந்த நட்பைப் புத்லிபாய் அம்மையார் அறிந்தார். அந்நட்பு, தீமை விளைக்கும் என அறிவித்தார். அதைக் கேட்ட மோகனதாஸ் தமது தாயார்க்குத் தக்க காரணங்களைக் கூறினார். பின்னும் நட்பு கொண்டிருந்தார்.

உண்மை நட்பென்பது மூன்றினால் அமையும். அவை மரியாதை, அன்பு, உண்மை என்பன. மன ஒற்றுமையே நட்பின் உயிர்நாடி. மன ஒற்றுமையுள்ள இருவர் ஒருவரை யொருவர் மரியாதை குறைவுபடுத்த மாட்டார்கள். எல்லாவகையிலும் இருவரையும் இணைப்பது அன்பே. ஆதலால், ஒருவர்க்குற்ற நன்மை தீமைகளைத் தமக்குற்றதாக மற்றொருவர் கருதுவதே நட்பிலக்கணமாகும். மூன்றாவதாகச் சொல்லப்பட்டது உண்மை. நண்பர் எந்தக் காரணம்பற்றியும் விளையாட்டுக்காகவும் ஒருவர்க் கொருவர் பொய்யுரைத்தல் கூடாது. அதிலும் தன்னிடத்தில் பேரன்புகொண்டு உரிமைபூண்டு பழகும் நண்பரிடத்தில் பொய் பேசுவதுபோன்ற கொடுந்தொழிலும் ஈனத்தொழிலும் வேறில்லை. இவற்றை மோகனதாஸ் நன்கு அறிந்தவர். தமது நண்பரை இவ்வகைகளில் திருத்திக் கொள்ளலாமென்பதே அவர் துணிபு.

நாளடைவில் இருவர்க்கும் நட்பு பெருகியது. அப்போது மோகனதாஸ் மனதை நண்பர் மிகக் கவர்ந்தார். தமது விருப்பப்படி திருப்பிக் கொள்ளலாமென நினைத்

தார். அந்த நண்பர் புலால் ஊண் விழைவுடையவர். காந்திமரபினர் உயிர்க்கருணை மிக்கவர்கள். அவர்கள் திருமாலடியவர்கள். அன்றியும் குஜராத்து நிலப்பகுதியில் தலை சிறந்தது ஜைனமதம். இச்சிறந்த குடிப் பிறப்புடைய மோகனதாஸ் தமது நண்பர் சொல்லுக்கிணங்கிப் புலால் உணவை ஏற்ருர். புலாலுணவினுல் உடல் உரம்பெறும் ; மனம் உறுதி பெறும் ; இவையிரண்டும் பெறவே பயம்கொள்ளித்தனம் முற்றும் அகலும் என்னும் நம்பிக்கை மோகனதாஸ் மனதுக்குப் புகட்டப்பட்டது. இக் காரணங்களால் புலாலுணவை அவர் ஏற்ருர் ; ஆயினும் பெற்ரேர்க்கும் இல்லாளுக்கும் பொய் கூறவேண்டுமே என்னும் வருத்தம் அவரை மிக வாட்டி வருத்தியது. என்ருலும் பெற்ரேரும் மற்ரேரும் அறியாதவாறு மறைத்துவைக்கலாம்; அப்போது பொய் சொல்லாமலே இருக்கக் கூடும் என அவர் நினைத்தார்.

## அருளுள்ளம்

புலாலுண்பதன் பொருட்டு மோகனதாஸ் ஆற்றின் கரைக்குத் தமது நண்பருடன் சென்ருர். முதன் முதல் அவரால் உண்ணப்பட்டது ஆட்டின் இறைச்சி. அதனேடு சிறிது ரொட்டியும் வைக்கப்பட்டிருந்தது. மோகனதாஸ் அதை மனக் கலக்கத்துடன் உண்டார். அன்றியும் அதன் சுவை அவர்க்கு வெறுப்பைத்தந்தது. அவ்விறைச்சி தோல் போலும் உறுதியாயிருந்ததால் மென்று தின்ன இயலாமல் விட்டுவிட்டார்.

மோகனதாஸ் விரைந்து வீடு சென்ருர் ; படுக்கையிற் படுத்தார். அவருள்ளம் அளவுகடந்த அச்சங்

கொண்டிருந்தது. கண்ணயரும்போதெல்லாம் அவருள்ளம் திடுக்கிடும்; அதனுல் எழுந்து உட்காருவார்; மீண்டும் படுப்பார்; படுத்து உறங்கும்போது வயிற்றில் ஓர் ஆடு கத்துவதேபோல் கருதுவார். இப்படி இரவில் பாதிநேரம் பரிவும் அச்சமும் கொண்டு கழித்தார். செய்த குற்றத்தினைச் சிந்தித்தார்.

நாட்டின் விடுதலைக்காகப் பாடுபடும் ஆண்மை, புலாலுணவால் தான் அமையும் என்னும் எண்ணம் அவர் அச்சத்தையும் இரக்கத்தையும் அகற்றியது. அடுத்த நாள் தொடங்கி நண்பர், நற்சுவையுடன் புலாலுணவு நல்குவதில் நாட்டங்கொண்டார். சிறந்த விருந்துகளுக்குக் கூட்டிச் சென்று, ஊனுணவை ஊட்டுவார் நண்பர். ஆதலால், மோகனதாஸ் புலாலுணவை மிக விருப்பத்துடன் உட்கொண்டார். இப்படிக் கழித்த காலம் யாண்டு ஒன்று.

ஆயினும் வெளியிடத்தில் புலாலுண்டு வரும் நாட்களில் வீட்டில் உணவு கொள்ள முடியாதல்லவா! அப்பொழுது தாயிடத்திலும் மனைவியிடத்திலும் ஏதாவது காரணம் கூறத்தானே வேண்டும். அதன் பொருட்டு மோகனதாஸ் முற்றும் வருந்தினுர். இப்பொய்யை ஒழிப்பதற்குப் புலாலை ஒழித்தார். பெற்ரேருள்ளமட்டில் ஊனுணவை ஒழித்து உண்மையாக நடப்பேன் என உறுதி கொண்டார். ஆனுல், அதன்பின் அவர் ஊனுணவை உண்டதில்லை.

இந்நிலையில் இவரைப் புத்தரோடு ஒப்பு நோக்குவோம். சோலையில் தேவதத்தனுல் அடிக்கப்பட்ட பற

வையைக் காத்த சித்தார்த்தர் மனநிலையோடும் முடமான செம்மறியைக் கண்டு இளகித் தோள்மீது சுமந்து சென்ற புத்தர் மனநிலையோடும் வேள்விக்காகக்கொண்டு சென்ற ஆடுகளின் பொருட்டு மனமுருகிய அவர் மனநிலையோடும் மோகனதாஸ் மனநிலையை ஈடுபடுத்தலாமல்லவா? மோகனதாஸ் பிற்கால மகாத்மா ஆவாரென்பதை எடுத்துக் காட்டியது அருளுள்ளம்.

## தன் குற்றமுணர்தல்

மோகனதாஸ், காந்தி மரபில் பிறந்தவராதலால் மோகனதாஸ் காந்தி எனப்பட்டார். அவர் கரம் சந்திர காந்தியின் மகனாதலால் மோகனதாஸ் கரம்சந்திரகாந்தி என்னும் முழுப் பெயரைப் பெற்றார். இனி இவரை நாம் குறிக்கும்போது காந்தி என்றே கூறுவோம்.

காந்தி பள்ளிக்கூடம் பயிலும் காலத்தில் பலமுறை பலவகைக் குற்றங்கள் செய்ததுண்டு, அக்குற்றங்கள் தீய வழக்கம், திருடு, பொய், கடமை தவறுதல் ஆகிய வகைகளாயிருந்தன. ஆனால் அக்குற்றங்களைக் காந்தி ஏதோ ஒருவேளை தம் மனதைக் கட்டுப்படுத்தமாட்டாமல் செய்திருந்தாலும் நிகழ்ந்த பின்னர் நெடுக நினைந்து வருந்துவார். ஒரு முறை தாம் செய்த குற்றத்திற்காகத் தற்கொலை செய்துகொள்ள முயன்றதாகவும் அவர் தாம் எழுதிய சத்திய சோதனையில் குறிப்பிட்டிருக்கின்றார்.

அவர் ஒருமுறை தம் குற்ற மன்னிப்புக்காக ராமர் கோவில் சென்று வணங்கி மன அமைதி கொண்டார்

எனத் தெரிகின்றது. அந்த நேரம் தொடங்கி அவர் மிகத் திருந்திவிட்டார் என்பதும் தெரிகின்றது. அன்றியும் காந்தி, தாம் செய்த குற்றங்களை ஒரு கடிதத்தில் எழுதித் தந்தையிடம் கொடுத்தார். அக்கடிதத்தில் தம்மை மன்னிக்கவேண்டுமென்று பெரிதும் வேண்டிக் கேட்டிருந்தார். அக் கடிதத்தைக் கண்ட காபாகாந்தி மனமுருகிக் கண்ணீர்விட்டார். தந்தையிடம் மன்னிப்புத் தன்மையைக் கண்ட காந்தி, தந்தையாரின் அன்புக்கு உள்ளம் உருகினர்.

மற்றும் காந்தி, தாம்செய்த பெருங்குற்றம் ஒன்றை மிக வருத்தத்துடன் எடுத்துரைக்கின்றார். அதாவது தம் தந்தையின் மரண காலத்தில் தாம் பக்கலில் இருக்கத் தவறியதுபற்றிப் பெரிதும் வருந்துகிறார்.

"எற்றென் றிரங்குவ செய்யற்க செய்வானேல்
மற்றன்ன செய்யாமை நன்று"

என்னும் திருக்குறளுக்கு எடுத்துக் காட்டாகக் காந்தியைக் கொள்வதுமிகப் பொருந்தும். தக்கவர் செயல் தன்குற்ற முணர்தல்.

## அரம்பை

காந்திக்குச் செவிலித்தாய் ஒருத்தி இருந்தாள். அவள் அவரிடம் பேரன்பு கொண்டிருந்தாள். காந்திக்கு இளம்பருவத்தில் பேயச்சம் பெரிதுண்டு. அதை நீக்குவதற்கு அவள் இராம நாமத்தைக் கற்பித்தாள். இராம நாமத்தைச் சொல்வதனுல் அச்சம் அகலும் என்பதைப் பெரிதும் நம்பினர் காந்தி. அவ்வளவு நம்பிக்கை அச் செவிலியின் சொல்லில் அவர் வைத்திருந்

தார். அவள் சொல்லித் தந்த இராமநாமம் காந்தியின் வாழ்நாள் முழுதும் துணை செய்வதாயிருந்தது. இப் படிப்பட்ட சிறந்த நெறிகற்பித்த செவிலியின் பெயர் அரம்பை.

### லதா மகராஜ்

இவர் பிலேசுவரத்தைச் சேர்ந்தவர். இவர்க்குப் பெருநோய் பிடித்திருந்தது. ஆதலால், அவர் மனம் வருந்தித் தனித்து வாழக் கருதினார். பிலேசுவரத்தி லுள்ள ஆலயத்தில் தங்கியிருந்தார். அக்கோயிலி லிருந்த வில்வமரத்தின தளிர்களைக் கொய்து அரைத் துப் புண்களுக்கு வைத்துக் கட்டினார். அன்றியும் நாளும் அக்கோயிலை வலம்வந்து, அதில் எழுந்தருளி யுள்ள கடவுளைப் பணிந்து போற்றினார். இப்படிக் கடவுளிடத்து நம்பிக்கை கொண்டதனால் அவருடைய பெருநோய் நீங்கியது. அதன் பின்னர், அவர் இராமா யண கீதங்களைப் பாடியும் அவற்றின் பொருளைச் சொல்லியும் காலம் கழித்தார். அவர் பாடுவதை காந்தி இளமையில் அடிக்கடி கேட்டார். அதனாலும் காந்தி அளவு கடந்த இராமப்பற்று பெற்றார். அரம்பை யூட் டிய இராம மந்திரத்தின் பெருமையைக் காந்தியின் உள் ளத்தில் உறுதி படுத்தியவர் லதாமகராஜ்.

### கொள்கைகள்

காந்தி தமது இளம் பருவத்தில் ஒரு குசராத்திப் பாடலைக்கற்றார் அப்பாடல் ஷாமல்பட்டர் என்பவரால் பாடப்பட்டது. அதிலுள்ள கருத்துக்கள் அவர் மனத்தைஉருக்கின. அவை அவருளத்தில் ஆழப் பதிந்

தன. அக்கருத்துக்களே காந்தியின் வாழ்க்கைக்கு வழி காட்டிகளா யமைந்தன. அவ்வுண்மைகளை இங்கே கூறுவோம்.

1. பிறர், உனக்குத் தந்த ஒருகுவளை நீர்க்கு ஈடாக நீ ஒருவேளை விருந்து (சிறந்த உணவு) கொடு.

2. பிறர், அன்புடன் கூறும் பாராட்டு மொழிக்கு ஆர்வத்தோடு தலை தாழ்ந்து வணங்கு.

3. ஒரு செப்புக்காசு கொடுத்து உதவிய ஒருவனுக்கு நீ பொன்கொடுத்துப் பெருமகிழ்வுகொள்.

4. உன் உயிரைக் காத்தவனுக்கு உற்றபொழுதில் உன் உயிரைக்கொடுக்கத் தயங்காதே.

5. பெரியோர் கூறும் சொற்களையும் நடைமுறைகளையும் மதித்து ஒழுகு.

6. நீ செய்யும் சிறுதொண்டு ஒவ்வொன்றுக்கும் பதின் மடங்கு பயன் பெறுவாய்.

7. உண்மைப் பெரியோர் உயிர்களிடத்தில் வேற்றுமை கருதார்.

8. பெரியோர் தீமைக்கு ஈடாக நன்மைபுரிவர்.

புத்தர்பெருமான் போதியின்கீழ் ஞானம் பெற்று கண்ட எட்டு நற்காட்சிகளுடன் இவை எட்டுக் கொள்கைகளை ஒப்பிட்டுப் பார்ப்போமாயின் ஒற்றுமை புலப்படும். காந்தியினால் மிகவும் ஆராயப்பட்டன இக் கோள்கைகள்.

## ஆமதாபாத் செலவு

காந்தி 1887-ஆம் யாண்டு மெட்ரிக்குலேஷன் தேர்வுக்குச் செல்லவேண்டியிருந்தது. அத்தேர்வு இரண்டிடங்களில் நிகழ்வதுண்டு. அவ்விடங்கள் கத்தியவார், ஆதமாபாத் என்பன. அப்பொழுது கத்தியவார் மிக்க பஞ்சநிலையிலிருந்ததால் அங்குச் செல்கிறவர்கட்கு மிகுந்த செலவு ஏற்படும். ஆகையால், ஆமதாபாத் செல்வதே நலம் எனக்கருதி எல்லோரும் சென்றனர். அதை ஒட்டி, காந்தியும் ஆமதாபாத்துக்குப் போவதாக முடிவு செய்தார். இராஜகோட்டையிலிருந்து ஆமதாபாத்துக்குக் காந்தி முதல்தடவையாகச் செல்லப் புறப்பட்டார்; அன்றியும் துணையின்றிச் சென்றார். முதன் முறையாகக் காந்திக்கு அமைந்தது ஆமதாபாத் செலவு.

## பவநகர்க் கல்வி

மெட்ரிக்குலேஷன் தேர்வில் தேறினர் காந்தி. மேற்படிப்புக்குக் கலாசாலை செல்லவேண்டும். அதற்குரிய கலாசாலைகள் பவநகரில் ஒன்றும் பம்பாயில் ஒன்றும் உண்டு. பம்பாய் செல்வமிக்க நகரமாதலால் அங்குச் செலவுமிகும். பவநகரில் குறைந்த செலவே பிடிக்கும். மிகுந்த செலவில் படிக்க காந்தியின் குடும்பம் செல்வ மிக்கதாயில்லை. ஆதலால், காந்தி பவநகர் சென்றார். அங்கே ஸமால்தாஸ் கலாசாலையில் சேர்ந்தார். அக் கலாசாலை காந்திக்கு வாய்ப்புடையதாயில்லை. நடக்கும் பாடங்களும் எளிதில் விளங்குவனவாயில்லை. அதற்குக் காரணம் காந்தி, கலாசாலைப் படிப்பு உணரும் நிலைக்குப் பண்படவில்லை என்பதே. எல்லாவகையி

லும் இன்னல்களிருந்தும் எப்படியோ காந்திக்கு ஆறு மாதம் பவநகரில் கழிந்தது. அப்பொழுது ஒருவிடு முறையில் காந்தி இராஜகோட்டைக்கு வந்தார். அவர் மீண்டும் பவநகர் செல்லவேயில்லை. பாடப்புத்தகங் களை யன்றி வேறு புத்தகங்கள் ஏதும் படித்தறியாத காந்திக்குக் கலாசாலைப் படிப்பு விளங்காதது வியப் பன்றே! ஆதலால் நிறுத்தப்பட்டது பவநகர்க் கல்வி.

## மேனாட்டுச் செலவு.

காபா காந்திக்கு உயிர்த்தோழர் ஒருவர் இருந்தார். அவர் அந்தணர். அவர் பெயர் மாவ்ஜிதவே. காபா காந்தி இறந்த பின்பும் அக்குடும்பத்தின் நட்பு அவர்க் குத் தொடர்ந்திருந்தது. அடிக்கடி அவ்வீட்டுக்கு மாவ்ஜிதவே வருவதுண்டு; வாழ்க்கை நலன்களைக் கேட்டறிந்து, வேண்டும் உதவிபுரிவதும் உண்டு. அதே நிலையில் அவ்வந்தணர் காந்தியில்லத்துக்கு வந்தார். அப்போது விடுமுறையில் வந்திருந்த காந்தியைப் பார்த் தார், "பவநகர்க் கல்வி எப்படி" எனக்கேட்டார். காந்தி தமது குறையைக் கூறினர். ஆதலால் அந்தணர், காந்திக்குத் தமது கருத்தை எடுத்துரைத்தார்.

"மோகன், நீ, விரைவில் படித்து நல்ல பட்டம் பெற்று வந்தாலன்றி இராஜகோட்டையில் திவானுக முடியாது. பழைய நிலைவேறு, இக்காலநிலை வேறு. எத்தனையோ பேர் சட்டக் கல்வி படித்து பாரிஸ்டர் ஆகித் திவான் வேலைக்கு முயல்வார்கள். ஆதலால், நீ விரைந்து முந்திக் கொள்வது நல்லது. என்மகன் கேவல்ராமுவுக்குப் பல நண்பர்கள் இங்கிலாந்திலிருக்

கிறுர்கள். அவர்களுதவி உனக்குக் கிடைக்குமாறு அவன் செய்வான் ” எனக் கூறினுர்.

மாவ்ஜிதவே இப்படிக் கூறியவுடன் காந்தி பெற்ற மகிழ்வுக்கு மட்டில்லை. காந்தியின் மகிழ்வையுள்ளவாறு அறிந்து தாமும் மகிழ்ந்தார் அந்தணர். அவரைக் காந்திக் குடும்பத்தார் ஜோஷிஜி எனக் கூப்பிடுவது வழக்கம். அவர் கூறிய கருத்து புத்லி பாய்க்கும் பொருந்துவதாயிற்று. ஆனுல், சுற்றத்தாருடைய விருப்பத்தை அவர் எதிர்பார்த்தார்.

எதற்கும் எதிர்மறுப்பதும் ஈடேற்றுவதும் பணமே அன்றே! ஆதலால், போர்பந்தர் மன்னரிடம் பண உதவியை எதிர்பார்த்தார்கள். அதற்காகக் காந்தி, போர்பந்தர் சென்ருர். அங்கே அப்போது காரியக்காரரா யிருந்த மிஸ்டர்-லேலி, காந்தியிடம் முகம் கொடுத்தும் பேசவில்லை. உதவி செய்வதற்கும் இசையவில்லை. ஏக்கத்துடன் திரும்பினுர் காந்தி.

பணக்குறை ஒருபக்கமிருக்க மதக் கட்டுப்பாடு ஒரு பக்கம் காந்தியைத் தடுத்தது. அதன்பொருட்டு அவரிடம் உறுதி மொழி வாங்கிக்கொண்டு அனுப்பலாமென எடுத்துச் சொன்னவர் பேசார்ஜி என்னும் ஜைனமதச் சாமியார். அவர் விருப்பப்படி காந்தியிடம் கள், புலால், பெண் என்னும் மூன்றிலும் தவறுதிருக்க உறுதி மொழி வாங்கினுர் அன்னையார். அடுத்த நாள், தாம் படித்த உயர்பள்ளியில் ஒரு பிரிவுப் பாராட்டு விருந்து காந்திக்கு நடந்தது. பின்னர், காந்தி இராஜகோட்டையை விட்டுப் பம்பாய்க்குப் புறப்பட்டார். தொடங்கியது காந்திக்கு மேனுட்டுச் செலவு.

**தடையும் விடையும்.**

அன்னையிடம் விடை பெற்ற காந்தி, பம்பாய் நகரடைந்தார். அப்பொழுது கடல்மிகக் கொந்தளிப்பாயிருந்தது. நவம்பர் மாதம் வரையில் அக்கொந்தளிப்பு அடங்காது என்றும் அஃதடங்கிய பின்னரே செல்லல் வேண்டும் எமன்றும் சில தோழர்கள் தடுத்தார்கள். அதைக்கேட்ட காந்தியின் அண்ணனும் அச்சம் கொண்டுவிட்டார்; காந்தியைப் பம்பாயில் விட்டார். அவர் இராஜகோட்டைக்குத் திரும்பினர்.

பனியா மக்கள், கடல் கடந்து செல்லலாகாது: அதிலும் எவரும் இது வரையில் இங்கிலாந்து சென்றதில்லை. இப்படி மோகனதாஸ் சென்ருல் அக்குடும்பத்தாரை குலவிலக்கம் செய்யவேண்டும் என ஒரு கட்டுப்பாட்டுக் கூட்டம் நிகழ்த்தினர். அக்கட்டுப் பாட்டைக் காந்தியோ, அவர் குடும்பத்தாரோ பொருட் படுத்தவில்லை. அப்பொழுது ஜுனகாத் வக்கீல் ஸ்ரீ திரியம்பகராவ் மஜும்தார் என்னும் பெரியார் இங்கிலாந்து செல்வது பற்றித் தம் அண்ணனுக்கு காந்தி எழுதினர். இராஜகோட்டை யிலிருந்த அவர், தம்பிக்கு உடனே விடைகொடுத்தார். அதனல் மகிழ்ந்த காந்தி 1888-ஆம் யாண்டு செப்டெம்பர்த் திங்கள் நான்காம் நாள் கப்பல் ஏறினர். இங்கிலாந்துக்குச் சென்ருர். துணைசேர்ந்த ஜுனகாத் வக்கீல் ஸ்ரீ திரியம்பகராவ் மஜும்தார் வயது மிக்க பெரியவர். அவருடன் பதினெட்டுவயது பிள்ளையாகிய காந்தி துணைபற்றிச் சென்ருர். இவைகளே காந்தி, இங்கிலாந்து செல்வதில் நிகழ்ந்த தடையும் விடையும்.

## கப்பற் செலவு

காந்தி சென்ற கப்பலில் மற்றும் பலர் சென்றனர். அவர்கள் ஒருவர்க் கொருவர் ஆங்கிலத்தில் பேசினுலும் காந்தி ஒருவருடனும் பேச விரும்பியதில்லை. ஆங்கிலத்தில் பேச அவர் மிக அஞ்சினர். ஆயினும் சிலர் வலியப் பேசி உறவாடினர். அவர்கள், ஊன் உண்ணவும் மது குடிக்கவும் காந்தியைத் தூண்டினர்கள். ஆனல், அவர் தமது உறுதி இழக்கவில்லை. கப்பல் பிஸ்கே குடா கடந்து முடிவில் சௌதாம்டன் துறைமுகத்தை யடைந்தது. அங்கே இறங்கும் போது காந்தி, தமது பொருள்களைக் கிரிண்ட்லே கம்பனியாரிடம் ஒப்படைத்தார். முடிந்தது கப்பற் செலவு.

## லண்டன் மா நகர்

காந்தி இங்கிலாந்துக்குப் போகும்போது சில பெரியோர்கட்கு அறிமுகக் கடிதம் கொண்டு சென்றர். அப்பெரியார்கள் டாக்டர் பி. ஜே. மேதா, ஸ்ரீ தளபதி ராம்சுக்லா, இராஜா ரஞ்சிதசிங், தாதாபாய் நௌரோஜி என்னும் நால்வராவார்கள்.

காந்தியும் ஸ்ரீமஜூம்தாரும் லண்டன் நகரில் விக்டோரியா ஓட்டலில் தங்கினர்கள். அவ்விடத்தில் காந்தியைப் பார்க்க டாக்டர் மேதா வந்தார்; பார்த்து மிக மகிழ்வுடன் பாராட்டுக் கூறினர்; லண்டனில் பிறருடன் பழகும் முறை சிலவற்றைக் கற்பித்தார். பின்னர் மால்டாவிலிருந்து கப்பலில் வந்த ஒருவர் காந்திக்கும் மஜூம்தாருக்கும் பழக்கமானர். ஓட்டலில் தங்கியிருத்தலால் செலவு மிகுகிறதென்று மூவரும்

சென்று வாடகை அறைகளில் சேர்ந்தார்கள். அங்கே காந்திக்கு எல்லாம் புதியன. ஆதலால், மிக வருந்தினர். அப்பொழுது தாயையும் பிறரையும் நினைந்து படுக்கையில் கண்ணீர் விட்டதாகவும் அவர் கூறுகிறார். தொடக்கத்தில் இந்த நிலையில் காந்திக்குத் துன்பமளித்தது லண்டன் நகரம்,

## லண்டன் வாழ்க்கை

புதிய அறையைத் தேடி டாக்டர் மேதா, காந்தியைப் பார்க்க வந்தார். அப்போது காந்தி, உடல் தேமல் பெற்றிருந்தார். அதற்கு மருத்துவம் செய்து கொள்வதற்காக காந்தி வேறிடம் மாற்றிக்கொண்டார். அவ்விடத்திலும் அவர்க்கு உணவுச் சங்கடமிருந்தது. ஆனால், மேனாட்டு நடை, உடை, கருத்து, பேச்சு முதலிய பயிற்சிகளைப் பெற்றார். அவ்விடத்தில் ஓட்டமீல் என்னும் தானியக் கூழ், பசலைக்கீரை, ரொட்டி ஆகியவைகளே காந்திக்குக் கிடைத்தன. அவ்விடத்திலும் காந்திக்கு வயிறு நிறையும் அளவு ரொட்டி கிடைப்பதில்லை. பாலும் கிடைப்பது அருமையாயிருந்தது. அங்கே காந்தியை ஆதரித்த நண்பர் புலாலுணவு கொள்ளுமாறு மிக வற்புறுத்தினர். ஆயினும் காந்தி, கருத்து மாறவில்லை. அப்படிப்பட்ட நேரங்களில் காந்தியின் செவிலித்தாய் அரம்பை கற்பித்த இராமநாமமே காந்திக்குப் பெருந்துணை புரிந்தது.

இந்த நிலையில் பயிற்சிக் காலம் ஒரு திங்களைக் கழித்தார் காந்தி. அந்தக் காலத்தில் அவர்க்குத் துணை புரிந்தவரில்லம் ரிச்மாண்டில் இருந்தது. ரிச்மாண்டி

லிருந்து லண்டனுக்குச் செல்லவேண்டுமென்றால் வாரத்தில் ஒருமுறை இருமுறைக்குமேல் இயலாது. ஆதலால், லண்டனிலேயே இருந்துவிடுமாறு காந்திக்கு மேதா கூறினர். ஸ்ரீ தளபதிராம் சுக்லாவும் அப்படியே நினைத்தார். முடிவாக அவர்களே வெஸ்ட்கேன்ஸிங்டன் என்னுமிடத்தில் ஓரில்லில் காந்தியைக் கொண்டுசேர்த்தார்கள். கைம்பெண்ணுயிருந்த அவ்வீட்டுத் தலைவி தன்னால் கூடிய மட்டில் காந்திக்கு உதவி செய்தாள். உணவு வகையில் மிகப் பொறுப்பேற்றுக் கொண்டாள். அவளுக்கிருந்த இரு பெண்கள் காந்தியினிடம் அன்புகொண்டு வேண்டியவைகளைத் தாமே அறிந்து உதவுவது வழக்கம்.

செய்தித்தாள் படிக்குமாறு காந்தியை மிகத் தூண்டினர் ஸ்ரீ சுக்லா. அவர் சொல்லை ஏற்று "டெய்லி நியூஸ்", "டெய்லி டெலிகிராப்", "பால்மால் கெஜட்" ஆகிய மூன்று தாள்களைப் படித்தார் காந்தி; செய்தித்தாள் படித்த நேரம் போக மற்ற நேரம் நகரைச் சுற்றிப் பார்ப்பதிற் கழித்தார். ஆதலால், புலால் அற்ற உணவு விடுதிகள் சிலவற்றைக் கண்டுபிடித்தார். அவற்றுள் பாரிங்டன் தெருவில் உள்ள விடுதி ஒன்று மிகச் சிறந்தது. காந்தி அவ்வுணவு விடுதியில் நுழையும்பொழுது விற்பனையின் பொருட்டு வைக்கப்பட்டிருந்த நூல் ஒன்றைப் பார்த்தார். அது "ஸால்ட்" என்பவரால் ஆக்கப்பட்டது. அதன் பெயர் (Plea for Vegetarianism) மரவகை உணவுக் கோள்கை பற்றிய தீர்ப்பு என்பதாகும். அதன் விலை ஒரு ஷில்லிங். அதைக் காந்தி வாங்கினர்; உள்ளே சென்றார். அவ்

வீட்டத்தில் அவர், தமக்கேற்ற உணவைக் கண்டார்; மனவிருப்பத்துடன் வயிறுரப் புசித்தார்.

தாம் வாங்கிய நூலைக் காந்தி ஆழ்ந்து படித்தார். இந்நாள்வரை, குடும்ப வழக்கம் பற்றியும் பிறர் கூறும் கருத்தைக் கேட்டும் புலாலை உண்ணுமலிருந் தார் காந்தி. ஸால்ட் எழுதிய நூலைப் படித்த நாள் தொடங்கி, காந்தி தம் முழு மனதுடன் மரவகை உணவில்தான் நன்மையுண்டு என்பதை உள்ளபடி அறிந்து, தமது விருப்பத்தால் அந்நிலையில் நின்ருர். இக்காரணத்தால் அவர்க்கு ஓரளவு மன அமைதியில் உற்றதுலண்டன் வாழ்க்கை.

## மூன்று திங்கள்

மரவகை உணவில் வன்மை இல்லை என்னும் எண்ணத்தைக் காந்திக்கு அடிக்கடி கூறுவார் நண்பர். புலாலுணவைப் புசிக்காவிடில் வாழ்க்கைக்கே தகுதியற்றுவிடும் உடல்நிலை என அவர் வற்புறுத்துவார். ஆயினும் காந்தி தமது மன உறுதியில் சிறிதும் தளரவில்லை. ஆதலால், இருவர்க்கும் சில வேளைகளில் மனப்பூசலும் விளைந்ததுண்டு. அன்பினுல் காந்தியைப் பற்றிப் பெரிதும் கவலை கொண்டிருந்த அவர்க்கும் காந்திக்கும் கருத்தும் செயலும் வேறுபட்டிருந்தன; ஆனுலும் இருவரிடையே இருந்த நட்புக்குச் சிறிதும் பழுது ஏற்படவில்லை. ஒருவரை ஒருவர் பல மடங்கு மதித்து ஒழுகினுர்கள். இதைக் காரணமாகக்கொண்டு காந்தி தமது பழக்கவழக்கங்களை மாற்றினுர். மேனுட்டு நாகரிகத்தின் முன்னணியில் நின்று தமது நண்பரை

மகிழ்விக்கக் கருதினர் காந்தி; அதற்காக உடைகள் நடனப்பயிற்சி, அதற்கேற்ற இசைப்பயிற்சி, இசைக் கருவிப்பயிற்சி, மொழிப்பயிற்சி முதலியவற்றைப் பழகினர்; பெரும் பணம் செலவழித்தார். இப்படித் தம் நிலையை உயர்த்திக்கொண்ட காந்தி, மீண்டும் தம் குறிக்கோளைக் கருதினர். பாரிஸ்டராகும் கருத்துடைய எனக்கு இவைகள் ஏன்? எனச் சிந்தித்துத் தம்பழைய நிலையைப் பின்பற்றினர். ஆயினும் உடையைப்பற்றிய ஆடம்பர விருப்பம் மாத்திரம் மனதைவிட்டு அகலவில்லை. இங்ஙனம் ஆடம்பரச் செலவிலும் நடையுடைக் கருத்துக்களிலும் காந்திக்குக் கழிந்த காலம் மூன்று திங்கள்.

## பல நிகழ்ச்சிகள்

மேனாட்டு வாழ்வில் காந்தி ஒவ்வொரு காலணவுக்கும் கணக் கெழுதுவார். அப்பழக்கம் அவர்க்கு என்றும் தொடர்ந்திருந்தது: செலவைத் திட்டப்படுத்துவதற்குப் பெரிதும் துணை செய்தது. அதனால் லண்டனில் தமது வாழ்க்கையை மிகச் சிக்கனப்படுத்தினர். பாரிஸ்டர் தேர்வுக்குப் படிக்கவேண்டியவை அளவில் மிகக் குறைவே. ஆதலால், அவர்க்கு ஓய்வு நேரம் மிக இருந்தது. அது கருதி, காந்தி ஆங்கிலமொழிப் பட்டம் பெற நினைத்தார். அன்றியும் போர்பந்தர் மன்னரிடமிருந்த காரியக்காரர் ஸர் - லெலி இவர்க்குக் கூறிய சொல் "நீ பி. ஏ. பட்டம் பெற்ற பின்னர் என்னை வந்துபார்" என்பது காந்தியின் நினைவுக்கு வந்தது. அதையும் கருதி லண்டன் மெட்ரிகுலேஷனுக்குப் படிக்கத் தொடங்கினர்.

மற்றும் காந்தி, சட்டத் தேர்வுக்கென லத்தீன் மொழி பயிலத் தொடங்கினர். முன்னரே காந்தி பிரெஞ்சு கற்கத் தொடங்கியிருந்தார்; எனவே மெட்ரிகுலேஷன் தேர்வுக்குரிய பாடங்களையும் லத்தீன், பிரெஞ்சு ஆகிய இருமொழிகளையும் கற்பதற்காகக் காலத்தைப் பங்கீடு செய்து கொண்டார். பெருங்கருத்துள்ள மாணவனுகைக் காந்தி பாடுபட்டுப் படித்தார். எனினும் இங்கிலையில் விதி கூடி வரவில்லை. என்றாலும் விடாமுயற்சியினல் இரண்டாம் முறையாகக் காந்தி மெட்ரிகுலேஷனில் தேறினர்.

படிப்பையும் பட்டத்தையும் முதன்மையானவைகளாகக் கருதிக் காந்தி லண்டன் சென்றார் எனினும் வாழ்க்கை நெறியையும் வகைப்படுத்திக்கொள்ள அவர் திட்டமிட்டிருந்தார்; புலாலல்லாத உணவுக்கொள்கையை மேற்கொண்டார். அன்றியும் அக்கொள்கையை நிலைப்படுத்தவும் பரப்பவும் முயன்றார். இவ்விழைவினல் மரவகை உணவுச் சங்கத்தில் உறுப்பினரானர். அச்சங்கத்தாரால் நடத்தப்பட்ட வாரத்தாள் ஒன்றுக்குப் பங்காளியும் ஆனர். நாளடைவில் காப்பாளருமானர். சில நாட்களுக்குள் பேஸ்வாடா என்னுமிடத்தில் புலாலல்லாத உணவுச் சங்கத்தை நிறுவினர். தாமே காரியம் பார்ப்பவராய் (Secretary) இருந்து நடத்தினர்.

காந்தி, பேரறிவு படைத்தவர்; ஆராய்ச்சியுடையவர்; அருளும் ஒழுக்கமும் அமையப் பெற்றவர். அமைதியே உருவானவர். ஆயினும் கூச்சம் (நாணம் (அ) அச்சம்) உடையவர். கூச்சம் மக்களின் வாழ்வுக்கு

ஓரளவு நன்மை புரியும். ஆயினும் அதனால் சிறிதளவு தீமையும் உண்டு என்பதைக் காந்தி வாழ்க்கை வரலாற்ருல் அறியலாம். காந்தி பல மன்றங்களில் பேச முற்பட்டுக் கூச்சத்தினுல் தோல்வி அடைந்தமையுண்டு. கடைசியாகக் காந்தி இங்கிலாந்திலிருந்து தாய்நாடு திரும்புகையில் ஒரு விருந்து நடத்தினுர். அவ்விருந்துக் கூட்டத்தில் பேச எழுந்து தத்தளித்துப் போனுர்; வந்தவர்களுக்கு ஒரே சொற்ருெடரில் நன்றி கூறி அமர்ந்தார்.

கூச்சத்தினுல் காந்திக்கு விளைந்த நன்மையை இங்குக் கூறுவது மிகப் பொருந்தும். வீண் சொற்களைக் கொட்டியளந்து பொதுமக்களின் காலத்தைப் பாழாக்கும் கொடுமை காந்தியிடம் சிறிதும் இல்லை. குறிப்பிட்ட பொருளைக் குறிப்பிட்ட நேரத்தில் கட்டுப்படுத்திப் பேசும் சிறப்பு காந்தியிடம் உண்டு. சொற் குற்றத்தாலே துன்புருதவாறு காந்தியைக் காத்தது கூச்சம் என்று சொல்லி மகிழ்வோம். கூச்சம் பலவகை இடர்ப்பாடுகளில் இருந்து காப்பதற்கும் உதவும் என்னும் பாடத்தை நாம் இதிலிருந்து கற்கிருேம்.

## பல கலைஞானம்

காந்தி, தமது படிப்புடன் நிற்கவில்லை; பல சமய நூல்களையும் தொடர்ந்து படித்து ஒப்பிடும் வழக்கம் கொண்டிருந்தார். புத்தரைப்பற்றி 'ஸர்-எட்வின் - அர்னுல் டைப்' எழுதிய "ஆசிய விளக்கம்" என்னும் நூலை எழுத்துவிடாமல் தொடர்ந்து படித்து முடித்தார். அன்றியும் அதே நூலாசிரியர் வரைந்த பகவத்

கீதை மொழி பெயர்ப்பை ஆங்கிலத்தில் படித்தார். கீதையைக் காந்தி குறிப்பிடும்போது "ஒரு விலையற்ற மாணிக்கம்" என்கிறார். மற்றும் "பிரம ஞானத்தின் திறவுகோல்" என்னும் நூலையும் காந்தி படித்தார். இந் நூல் பிளாவட்ஸ்கி என்னும் அம்மையார் ஒருவரால் வரையப்பட்டது. அதே காலத்தில் காந்தி, பெஸண்டு அம்மையாரையும் கண்டு உசாவியுள்ளார். மான்செஸ் டரிலிருந்து லண்டனுக்கு வந்திருந்த கிறிஸ்தவர் ஒரு வரைக் காந்தி நட்புக்கொண்டார். அப்போது அவரால் தரப்பட்ட ஆதியாகமம், எண்ணுகமம், மலைப்பொழிவு என்னும் நூல்களைப் படித்து கிறிஸ்து மதக்கொள்கை களை அறிந்தார். அதனால் தாம் குசராத்தி மொழியில் கற்ற பாடலின் கருத்தாகிய "ஒரு குவளை நீர்க்கு ஒரு வேளைவிருந்து" என்ற கருத்து நினைவுக்கு வந்தது.

கார்லைல் என்பார் எழுதிய நூலொன்று வீரரும் வீர பூசையும் என்னும் பெயருடையது. அந்நூலில் வீரதீர்க்கதரிசி என்ற பகுதி ஒன்றில் முகமதுநபியின் மேன்மை கூறப்படுகிறது. அதைக் காந்தி படித்து முக மது நபியின் மனவுறுதி, கடுவிரதம் ஆகியவற்றை அறிந்தார். இவையே அன்றி, காந்தி பிராட்லா என்ப வரைப்பற்றியும் கேள்விப்பட்டார். அவர் கொள்கை "கடவுளில்லை" என்பது. அதனைக் காந்தி வெறுத்தார். ஆயினும் அக்கொள்கையைப்பற்றிய நூலொன்றை யும் அவர் படித்தார். கடவுளில்லை என்னும் கொள் கையைக் காந்தி "பாலைவனம்" எனக் குறிப்பிடுகிறார். ஆனால், பிராட்லா இறந்தபோது சவத்துடன் முதுகாடு சென்று திரும்பினர் காந்தி.

10335

காந்தி லண்டனிலிருக்கும்போது நாராயண ஹேம சந்திரர் என்னும் புலவருடன் அளவளாவிப் பழகினர். அவருடன் சென்று பல பெரியோர்களைக் கண்டு நண்பராக்கிக் கொள்ளும் பேறு காந்திக்குக் கிடைத்தது. இங்ஙனம் காந்திக்கு வளர்வதாயிற்று பல கலைஞானம்.

### பாரிஸ்

உலகப் பழைய நகரங்களுள் பாரிஸ் ஒன்று என்று எவரும் அறிவர். அந்நகரின் கோயில்கள் பெருந் தோற்றமுடையன. பாரிஸ் நகர அமைப்பும் இன்பப் பொழுது போக்கின் பொருட்டுள்ள ஏற்பாடுகளும் பாராட்டக்கூடியன. அங்குள்ள ஒவ்வொரு தெருவும் கண்டு மகிழ்தற்குரியன. பாரிஸ் நகரில் 1890-இல் கண்காட்சி ஒன்று நடைபெற்றது. அக்காட்சிக்காகச் செய்யப்பட்ட பல சிறந்த ஏற்பாடுகள் செய்தித் தாள்களில் வெளியாயின. அதைக் கண்ணுற்ற காந்தி, பாரிஸ் போய்வர விழைந்தார்.

காந்தி, பாரிஸ் சென்றார்; அங்கே மரவகை உணவு விடுதி ஒன்றில் தங்கினர்; மிகமிகச் சிக்கனமாகக் காலம் கழித்தார். காந்தி பாரிஸில் கண்ட காட்சிகளுள் முதன்மையானது "எப்பேல் கோபுரம்" (Eiffel tower). அக்கோபுரத்தின் உயரம் ஏறக்குறைய ஓராயிரம் அடி.

பின்னர், அவர் நாட்டர்டேம் என்னும் கோவிலைப் பார்க்கச் சென்றார். அக்கோயிலின் அமைப்பு மிகப் புதுமை வாய்ந்தது. நாட்டர்டேம் கோயிலின் உட்

புறம் சிறந்த சித்திர வேலைப்பாடுடையது. அதிலுள்ள சிற்பங்கள், பார்த்தவர் உள்ளத்தில் பதிந்து, என்றும் அகலாமல் மகிழ்வளிக்கும். அக்கோவிலைப் பாரிஸ் நகர மக்கள் பலகோடிப் பொன்செலவு செய்து கட்டியிருக்க வேண்டும் என்றும் உண்மைக் கடவுட்பற்று ஒன்றிருந் தால் மாத்திரந்தான் அதுபோன்ற கோயில் கட்டும் கருத்து விளையும் என்றும் காந்தி சத்திய சோதனையில் குறிக்கின்றார்.

பாரிஸிலுள்ள கோயில்களுள் கன்னிமேரி கோயில் சிறந்தது ஒன்றாகும். கன்னிமேரியைத் தொழுவோ ரனைவரும் உண்மையன்புடனே தொழுகிறார்கள் என் பதைக் காந்தியறிந்து வந்து களிப்புடன் கூறியிருக் கின்றார்.

ஏழு நாட்கள் காந்தியினால் பார்க்கப்பட்டது அழ கிய நகராகிய பாரிஸ்.

### பாரிஸ்டர்

இங்கிலாந்தில் பாரிஸ்டர் பட்டம் பெறுவதில் இரு கட்டுப்பாடுகள் உண்டு. அவற்றுள் ஒன்று விருந்து மற்றொன்று தேர்வு. விருந்தென்பது மாணவர்களும் பட்டமளிக்கும் பாரிஸ்டர் நீதிபதிக் குழுவினரும் கூடி ஒருங்கிருந்து உண்பது. இப்படிப்பட்ட விருந்து ஒவ்வொரு மூன்று மாதங்கட்குள் 24-நடைபெறும். இவற்றுள் குறைந்தபாடு 6-விருந்துகளுக்காவது ஒவ் வொரு மாணவனும் சென்றாகவேண்டும் என்னும் சிறப்பு விதியுண்டு. இப்படி மூன்று யாண்டுகட்கு (யாண்டு ஒன்றுக்கு நான்காக 12-காலப் பகுதிகள்

விருந்துக்கெனப் பகுத்து மொத்தவிருந்துகள்) 288-நடைபெறும். இவற்றுள் ஒவ்வொருவரும் செல்ல வேண்டிய மொத்த விருந்தின் எண்ணிக்கை – 72. விருந்தில் கலந்து கொள்வோர் உண்ணுமாறு கட்டாயப் படுத்தப் படுவதில்லை. விருந்தில் இருந்து வருதலே வேண்டப்படும். இவ்விருந்தின் பயன் உலகியலறிவு வளர்ச்சி, பொது விடங்களில் பழகுதல், பேச்சுத் திறன் பெருகுதல் ஆகியவை பெறுதலே. இவ்விருந்தில் பாரிஸ்டர்களும் நீதிபதிகளும் தனியிடங்களில் ஒதுங்கி யமர்வார்கள். மாணுக்கர்கள் தனி யிடத்திலமர்வார்கள்.

அடுத்தது தேர்வல்லவா ? தேர்வென்பது பெயரளவில்தான் என்பதை எவரும் அறிவர். தேர்வு இரு வகை ; ஒன்று ரோமன் சட்டம். மற்ருென்று இங்கிலாந்தின் பழங்காலச் சட்டம். இவைகளுக்கென்று பாடப் புத்தகங்கள் உண்டு. எனினும் அவைகளை எவரும் அக்கரைகொண்டு படிப்பதில்லை. குறிப்புச் சுவடிகளைப் படித்தே ரோமன் சட்டத்தில் தேறியவர் பலர். இங்கிலாந்துச் சட்டத்துக் குறிப்புச் சுவடிகளை மாத்திரம் இரு திங்கள் அல்லது மூன்று திங்கள் படித்தாக வேண்டும். இருதேர்வுகட்கும் தரப்படும் விஞக்கள் மிக எளியன. தேர்வுக் குழுவினர் மிகத் தாராள மனப்பான்மையும் பெருநோக்கும் உடையவர்கள். தொடக்கத் தேர்வில் 100-க்கு 95-முதல் 99-வரையிலும் முடிவுத்தேர்வில் 100-க்கு 75-வரையிலும் மாணவர் தேர்வர் என்பதில் ஐயமே இல்லை. இத்தேர்வும் யாண்டொன்றுக்கு நான்கு முறை நிகழும். என்ருல் இதை விட எளிய தேர்வு என எதைக் கூறமுடியும் !

காந்தி மெட்ரிகுலேஷனுக்கு இலத்தீன் மொழி படித்திருந்தார். அம்மொழியிலேயே ரோமன் சட்டத்தைப் படித்தார்; எல்லாச் சுவடிகளையும் வாங்கி முற்றிலும் படித்தார். ரோமன் டச்சு சட்டமே தென்னுப்பிரிக்காவில் ஆட்சிமுறையில் கையாளப்படுவதாகையால் பிற்கால வாழ்வுக்குக் காந்தியின் பாரிஸ்டர் படிப்பு மிகப் பயன்படுவதாயிற்று. அப்படியே இங்கிலாந்து பழங்காலச் சட்டத்தையும் காந்தி ஒன்பது மாதங்கள் படித்தார். "இச்சட்டச் சுவடிகளுள் வில்லியம் எட்வர்ட் என்பவரால் எழுதப்பட்ட 'மெய்ச் சொத்து' என்னும் சட்ட நூல், புதுக்கதை நூல்போல் சுவைக்கும் எனக் காந்தி கூறுகிருர். "அதைப் போன்ற புத்தகம், மேயன் என்பவரால் எழுதப்பட்ட இந்து சட்டமே" என்றும் காந்தி கூறுகிருர். இப்படிப் படிப்பவரே பாரிஸ்டர்.

## பெரியார் அறிவுரைகள்

சட்டம் தேறிய பாரிஸ்டர் ஆயினர் காந்தி. ஆனால், அவர் சட்டத்தை வாதிக்கும் மனவன்மை உடையவராயில்லை. எப்படி நீதிமன்றத்தில் சொற்போர் நிகழ்த்துவது என்னும் கவலையும் அச்சமும் அவரைப் பிடுங்கித் தின்றன. நீதிமன்றத்தில் சிங்கம்போல் கர்ஜிக்கும் சர் பிரோஸிஷா மேதாவைப்போல் தாம் ஆவது எப்படி எனக் காந்தி கருதி ஏங்குவார். அதைக் கருதி அறிவுரை கேட்க அவர் தாதாபாய் நௌரோஜியிடம் சென்ருர். அவர் காந்தியைப் பார்த்து "நீ விரும்பிய போதெல்லாம் என்னிடம் வரலாம், உனக்கு வேண்டிய புத்தி மதிகளைக் கூற நான் தவறமாட்டேன்" என்று புன்னகை கலந்த நயமொழி கூறி ஊக்கினர்.

பின்னர் காந்தி, பிரடரிக்-பிங்கட் என்னும் பேரறி ஞரிடம் சென்றார். அவர் காந்திக்குக் கூறிய அறிவுரை "வக்கீலாவதற்கு, தகுதிக்கேற்ற முயற்சியும் கண்ணி யமும் இருந்தால் போதும்'' என்பதே. அன்றியும் சில நூல்களைப் படித்தறியுமாறும் காந்திக்கு பிங்கட் கூறி னார். இயற்கையிலேயே முயற்சியும் கண்ணியமும் உடைய காந்திக்கு மிகப் பயனளிப்பனவாயின பெரியார் அறிவுரைகள்.

**பம்பாயடைந்தார்**

காந்தி எல்லாத் தேர்வுகளிலும் தேறி, 1891-ஆம் யாண்டு ஜூன் திங்கள் 10-ஆம் நாள் பாரிஸ்டர் குழுவில் சேர்த்துக்கொள்ளப்பட்டார். மறுநாள் (11-6-1891) உயர்நீதி மன்றத்தில் நீதிவாதியாகப் பதிவு செய்யப் பட்டார். அடுத்தநாள் (12-6-1891) இந்தியாவை நோக்கித் திரும்பினார்; அவர் எஸ். எஸ். அஸ்ஸாம் என் னும் கப்பலில் ஏறிவந்து பம்பாயடைந்தார்.

**மூவர்**

காந்தி, லண்டனிலிருந்து திரும்புங்கால் டாக்டர் மேதாவும் உடன் வந்தார், பம்பாய்த் துறைமுகத்தில் இறங்கி இருவரும் டாக்டர் மேதா வீட்டுக்கே சென்ற னர். காந்தி லண்டனிலிருந்தபோதே புத்லிபாய் இறந் தார். ஆனால், அச்செய்தியைக் காந்திக்குத் தெரிவிக்காம லிருந்தார் அண்ணன். காந்தி பம்பாய் வந்தவுடன் அன்னையைப் போய்ப் பார்க்கவேண்டுமென விழைந் தார். துறைமுகத்தில் வந்திருந்த அண்ணன் தாயின் இறப்பைக் கூறினார். காந்தி, அச்செய்தியைக் கேட்டு

அளவு கடந்த துன்பக் கடலில் மூழ்கினர். என்றாலும் "ஆதலும் அழிவும் எல்லாம் பொருள்கட்கு இயல்பு" எனத் தெளிந்தார்.

டாக்டர் மேதாவுக்கு உடன்பிறந்தார் ஒருவர் இருந்தார். அவர் பெயர் ஸ்ரீ ரேவாசங்கர் ஜகஜீவன். அவர்க்கும் காந்திக்கும் சிறந்த நட்பு நேர்ந்தது. டாக்டர் மேதாவின் அண்ணனுக்கு மாப்பிள்ளை ஒருவர். அவர்பெயர் கவி-ராய்சந்து. இவரை இராஜ சந்திரர் எனவும் கூறுவர். இவர் ஒரு நகைக்கடையின் பங்காளி. இவருடன் காந்தி நட்புகொண்டார். கவி - ராய்சந்து சதாவதானி எனப் பாராட்டப்பட்டவர்; சிறந்த ஆராய்ச்சியாளர்; கடவுட் பற்றுள்ளவர்; நூலாசிரியர். எனவே கவி-ராய்சந்து, காந்திக்கு வாழ்க்கை வழிகாட்டியாயினர். இவரேயன்றி காந்திக்கு வாழ்க்கைக்கு வழிகாட்டியவர்கள் டால்ஸ்டாய், ரஸ்கின் என்னும் இருவரும் ஆவார்கள். டால்ஸ்டாய் எழுதிய "ஆண்டவன் ஆளுகை உனக்குள்ளே" என்னும் நூலையும் ரஸ்கின் எழுதிய "முடிந்தநிலை" என்னும் நூலையும் காந்தி படித்ததனால் இவ்விருவரையும் கவி - ராய்சந்து என்பவருடன் சேர்த்தார். தமது வாழ்க்கை வழிகாட்டிகளாகக் காந்தியால் கொள்ளப்பட்டவர்கள் மூவர்.

# 3. துன்பியல்

## பம்பாய் வாழ்வு ஆறு திங்கள்

காந்தி இராஜகோட்டைக்குப் போகவேண்டும். ஆனால், குலத்திற்காகாத வழக்கம் - வெளிநாடு செல்வது - கப்பலேறிச் செல்வது என்னும் காரியத்தைச் செய்தது பெருங் குற்றமாகக் கருதப்பட்டது. எனவே மரபினரை மகிழ்விப்பதற்கென்று அண்ணன் நாசிக் நகர்க்குக் காந்தியைக் கூட்டிச்சென்றார். கோதாவரியில் மூழ்குவித்தார் காந்தியை. பின்னர் வீடுசென்று குல விருந்தொன்று தரப்பட்டது. இவை செய்ததனால் உறவினர் பலர் உள்ளமுவந்தனர். மற்றும் சிலர் முற்றும் மறுத்து நெடுக ஒதுங்கியே இருந்தனர். ஆயினும் காந்தி அவர்களுக்கு மாறாக ஏதும் செய்யாததனால் பகை வளராமற் கழிந்தது.

காந்தி லண்டனிலிருந்து திரும்பிய பின்னர், அவர் குடும்பத்துப் பழக்க வழக்கங்கள் ஓரளவுக்கு மாறியமைந்தன. வீட்டுக் குழந்தைகளைப் படிப்பிப்பதும் பழக்குவதும் காந்தியின் பொறுப்பாயின. இதனிடையே கஸ்தூரிபாய்க்கும் கற்பிக்கக் கருத்துக்கொண்டார் அவர். ஆனால், அவரிருவர்க்கிடையே இருந்த பெரும் பற்று கல்விக்குத் தடையாயிருந்தது. நடை, உடை, உணவு ஆகிய அனைத்தும் மேனாட்டு வழக்கத்தை யொட்டி யமைந்தன காந்தியின் இல்லத்தில்.

வாழ்க்கைநிலை காந்தியின் இல்லத்தில் மாறி ஏறியது எனினும் வருவாய்நிலை ஒருசிறிதும் மாறி ஏற

வில்லை. பட்டம் பெற்றுவந்த பாரிஸ்டார்க்குத் தக்க வேலை ஒன்றும் இராஜகோட்டையில் வாய்ப்பதாயில்லை. வாய்ப்பதாயினும் தரகர்க்குப் பங்குதர வேண்டும். தரகர்க்குப் பங்கு தருவதைக் காந்தி ஒப்புக் கொள்ளவில்லை. ஆதலால், அவர் பம்பாய்க்குச் செல்ல விரும்பினார். காந்தியின் அண்ணனும் அக்கருத்துக்கிசைந்தார். இரவி சங்கர் என்னும் சமையற்காரனுடன் காந்தி பம்பாய் சென்றார். அவர் எதிர்பார்த்தவாறு பம்பாயில் வருவாய் இல்லை. பெருஞ் செலவாய் இருந்தது. எனினும் பொறுமையுடன் இந்தியச் சட்டம் படித்துக் கொண்டிருந்தார். அப்போது காந்தியுடன் சேர்ந்திருந்தவர் வீரசந்திர காந்தி.

காந்திக்கு முதல் வழக்காக ஒரு வாய்ப்பைத் தந்தவர் மமிபாய். அவரால் கொண்டுவரப்பட்டது மிகச் சிறிய வழக்கு. அதைக் காந்தி நடத்தி வென்று தருவதாக ஒப்புக்கொண்டார். அதிலும் தரகர்க்குக் கூலி தர வியலாதெனக் காந்தி கூறிவிட்டார். வழக்கு ஒரே நாளில் முடியும் எனத் தெரிந்து முப்பது ரூபாய் பேசிக் கொண்டார். வழக்கில் வாதிப்பதற்கென்று காந்தி நீதி மன்றம் சென்றார். வழக்கு எடுக்கப்பட்டது. காந்தி எழுந்து நின்றார். வாய்திறந்து பேசமுடியாமல் கலங்கி நின்றார். சிறிதுநேரத்தில் இருக்கையில் அமர்ந்தார். அவ்வழக்கின் கதி என்னாயிற்று? காந்தி வாங்கியிருந்த ரூபாய் முப்பதையும் திருப்பிக் கொடுத்து "ஸ்ரீ படேல் என்பவரைக் கொண்டு வழக்கை நடத்திக்கொள்ளுங்கள்" எனச் சொல்லிவிட்டார். ஸ்ரீ படேல் ரூபாய் ஐம்பத்தொன்று பெற்றுக்கொண்டு மிக எளிதில் சிறு

பிள்ளை விளையாட்டுப்போல் வென்று தந்தார். இந்நிகழ்ச்சியினால் காந்தி, இனி மனம் உறுதியுறும்வரையில் வழக்கு எடுப்பதில்லை என்னும் முடிவுக்கு வந்தார். எனினும் விண்ணப்பம் எழுதித் தரும் வேலைமாத்திர முடைய வழக்கொன்று காந்தியிடம் வந்தது.

இப்படிப் பம்பாயில் வாழ்க்கை நடத்துவது எப்படி? என எண்ணி, எண்ணி ஏங்கினார் காந்தி ; பின்னர், ஆசிரியர் வேலையாவது செய்யலாமெனக் கருதினார் ; விண்ணப்பம் ஒன்று அனுப்பினார். நேரில் வரவேண்டும் என, அவ்வேலைதரும் தலைவர் கட்டளையிட்டார். அவ்வாறே காந்தி சென்றார். தலைவர் என் செய்வார்? "பி. ஏ. படிக்காதவர்க்கு இங்கே வேலை கிடைக்காது காந்தி" எனக் கூறிவிட்டார். ஆதலால், இனிப் பம்பாயில் இருந்து பயனில்லை எனத் தெரிந்துகொண்டு காந்தி இராஜகோட்டை திரும்பினார். அங்கே வக்கீலாயிருந்தார் காந்தியின் அண்ணன். காந்தி அவருடன் சேர்ந்து உறைந்தார். காந்தியின் பம்பாய்வாழ்வு ஆறுதிங்கள்.

## முதல் தாழ்வு

பம்பாயைவிட்டு இராஜகோட்டைக்குச் சென்ற காந்தி தனியே அலுவலகத்தை அமைத்தார். அவர் வரவு திங்களொன்றுக்குச் சுமார் முந்நூறு ரூபாய் என்னலாம். ஆயினும் அவ்வரவுக்கு அண்ணன் செல்வாக்கே காரணமாயிருந்தது. அன்றியும் பம்பாயில் தரகரை ஏற்றுக்கொள்ளாத காந்தி, இராஜகோட்டையில் தரகரை வைத்தே வழக்குப்பிடித்தார். அண்ணனும் காந்தியும் வேறு வேறாயிருந்து அலுவல் செய்தார்களாயினும் குடும்பம் ஒன்றாகவே இருந்தது. இந்நிலையில்

போர்பந்தர் இளவரசர் சம்பந்தமாக அண்ணன்மீது குற்றம் ஒன்று வந்துற்றது. அதைப்பற்றிக் காந்தி அரசியல் தலைவரிடம் (Political Agent) கலந்து பேசச் சென்றார். அத்தலைவர் இங்கிலாந்திலிருந்து வந்தவர். முன்னரே காந்தியை இங்கிலாந்தில் அறிந்தவர். ஆயினும் அவரை நாடிச்சென்ற காந்தியை அத்துரை மகன் மிகத் தாழ்வுபடுத்திவிட்டார். அதே காரணத்தால் காந்திக்கும் அத்தலைவர்க்கும் பகை விளைந்தது. இவ் விளைவினால் காந்தி மனம்குழம்பினார். இனி இராஜ கோட்டையில் இருக்கக்கூடாது என்று கருதிக்கொண்டிருந்தார். இக்கருத்திற்குக் காரணம் முதல் தாழ்வு.

## தென் ஆப்பிரிக்காச் செலவு

போர்பந்தரில் "தாதா அப்துல்லா அண்டு கம்பெனி" என ஒன்றிருந்தது. அக்கம்பெனி தென்னாப்பிரிக்காவிலும் வாணிபம் புரிந்தது. அக்கம்பெனியாருடைய வழக்கு ஒன்று அங்கேயுள்ள நீதிமன்றத்தில் நடந்துகொண்டிருந்தது. அது நாற்பதினாயிரம் பவுன் பற்றியதொரு பெரிய வழக்கு. அவ்வழக்குக்காகப் பல பெரிய வக்கீல்களையும் பாரிஸ்டர்களையும் அங்கே அமர்த்தியிருந்தார்களாயினும் அவர்கட்குத் துணையாகக் காந்தியை அனுப்பக்கூடுமா என அண்ணனை அவர்கள் கேட்டிருந்தார்கள். அதை அவர் தமது தம்பியிடம் கூறினார். அங்கே செல்வதனால் புதிய நாடு பார்க்கலாம்; புதிய பலர் நட்பாவார்கள். என்பதைக் காந்தி கருதினார். ஆதலால், அவர்கள் கேட்டிருந்தவாறு ஓர்யாண்டு கால எல்லைக்கு காந்தி தென்னாப்பிரிக்கா சென்றிருக்க ஒப்புக்கொண்டார்.

காந்தி தென்னுப்பிரிக்கா செல்லும்போது காந்திக்கு இரு குழந்தைகளிருந்தன. மேலும் கஸ்தூரி பாய்க்கு ஆசிரியராகவும் இருந்தார். எனவே தமது செலவைக் குறித்துத் தயங்கினர். என்ருலும் செல்வதற்கே பெருவிழைவு கொண்டார். கப்பலில் முதல் வகுப்புச் சீட்டு கிடைப்பது அருமையாயிருந்தும் காந்தி தாமே நேரில் சென்று தலைமை அலுவலரிடம் பேசினர். அதன் பயனுக அத்தலைவர்க்குரிய அறையிலே காந்திக்கு இடம் தந்து கூட்டிச் செல்வதாக அவர் இசைவுற்ருர். பேருவகையுடன் 1893-ஆம் யாண்டு ஏப்ரல் திங்களில் காந்தி கப்பல் ஏறினர்.

காந்தி கப்பல் ஏறிய பதின்மூன்ரும் நாள் லாமூ துறைமுகம் சேர்ந்து சில மணிநேரம் தங்கியிருந்தது. பின்னர், அது புறப்பட்டுச் சென்று மோம்பாஸா அடைந்தது. பின்பு, அங்கிருந்து ஸான்ஸிபார் சென்றது. அவ்விடத்தில் சுமார் பத்து நாட்கள் தங்கியிருக்க நேர்ந்தது. ஆகையால் ஊர்க்குள் தங்கினர். அவ்வூர் மிகச் செழிப்பானது. சோலைகளால் பேரெழில் வாய்ந்தது. உயர்ந்தோங்கிய மரங்களடர்ந்த அவ்வூர்க் காட்சி கண்ணைக் கவர்வதாயிருந்தது. அம்மரங்களில் உள்ள பெரிய பழங்கள் பெருவியப்பினை யூட்டுவன. "அவ்வூரின் கவின்மிகு காட்சி நம்நாட்டு மலையாளம்போன்றிருந்தது" எனக் காந்தி பாராட்டுகிருர். அவ்வூரில் எல்லாவிடங்களையும் சுற்றிப் பார்த்துவிட்டுக் கப்பல் ஏறி மோஸாம்பிகை துறைமுகம் கடந்து டர்பன் அடைந்தார். அதுதான் நேட்டாலின் துறைமுகம். கப்பல் அத்துறைமுகம் சேர்ந்ததும் பலர் கரையிலிருந்து கப்பலை நோக்கி

வந்தனர். அவர்களுள்ளே அப்துல்லாசேத் ஒருவர். அவர் காந்தியைக் கூட்டிச் சென்றார்.

## நேட்டாலின் துன்பம்

நேட்டாலில் இந்தியர்களுக்குச் சிறிதும் மரியாதை கிடைக்காது. அவ்வூரில் பெரிய வணிகருள் ஒருவராகிய சேத் அப்துல்லாவுக்கே அவ்விடத்தில் மரியாதை கிடைப்பதில்லை. ஆயினும் தென்னாப்பிரிக்காவில் வாணிபம் புரிவதற்குச் செல்கிறவர்கள் மரியாதையைப் பற்றிச் சிறிதும் கவலைகொள்வதில்லை. பொருள் திரட்டுதலாகிய கருமமே கண்ணாயிருந்தார்கள்.

அப்துல்லா சேத், காந்தியைக் கண்டு மனம் குழம்பி விட்டாரென்றே சொல்லவேண்டும். அதற்குக் காரணம் காந்தியின் உயர்நிலை உடைகளேயாகும். காந்தியின் திறமை, குணம் முதலியவற்றை உள்ளவாறறியாமல் சேத் அப்துல்லா எப்படி நம்புவார்? அவர்களுடைய வழக்கு நடக்கும் இடம் டிரான்ஸ்வால். மறு கட்சியினர் இருந்த இடம் பிரிடோரியா. பிறகட்சியினர் காந்தியைத் தம் கருத்துக்கு ஈர்த்துவிடக்கூடும் என்றும் சேத் அப்துல்லா கருதினார். ஆதலால், காந்தியை எப்படிப்பட்ட வேலை வாங்குவதென்ற முடிவே அவர்க்குத் தோன்றவில்லை.

காந்தி நேட்டாலையடைந்த இரண்டாம் நாள் சேத் அப்துல்லா, அவரை டர்பன் நீதிமன்றத்துக்குக் கூட்டிச் சென்றார். அங்கேயுள்ள தமது நண்பர்கட்குக் காந்தியைப் பழக்கப்படுத்தினார். தமது வக்கீலின் பக்கலில்

அமர்த்தினர். காந்தி, தலைப்பாகை அணிந்து சென்றிருந் தாராதலால் நீதிபதி அவரைச் சிறிதுநேரம் நுணுகிப் பார்த்தார். தலைப்பாகையை நீக்குமாறு உரைத்தார். ஆனல் காந்தி, பாகையை எடுக்க விரும்பாமையை யறி வித்து வெளியேறினர். ஆயினும் தென்னப்பிரிக்கா வில் இந்தியர் நிலைமை எப்படியிருக்கிறதென்பதைத் தெள்ளத் தெளியக் கேட்டிருந்தார். அவ்விடத்தில் எப்படிப்பட்ட இந்தியனும் கூலி என்றே கூப்பிடப்படு வது வழக்கமென்பதைக் கேட்டு மனம் பதைத்தார்.

இந்தியர் நிலைமையைப்பற்றிக் காந்தி வருந்தினர். ஆயினும் அவர்க்கு அப்போது முதல் வேலையாயிருந் தது வழக்கு அல்லவா? ஆதலால், அதில் தமது கருத் தைச் செலுத்தினர். அதனல் பல புதிய செய்திகளை அறிந்தார். அதே நேரத்தில் பிரிடோரியா வக்கீலிட மிருந்து ஒரு கடிதம் வந்தது. அதில் சேத் அப்துல்லா பிரிடோரியா வரவேண்டும். அல்லது அவருடைய காரியக்காரர் ஒருவராவது வரவேண்டும் என எழுதப் பட்டிருந்தது ஆதலால், காந்தி பிரிடோரியா அனுப்பப் பட்டார். டர்பனிலிருந்து புறப்பட்டார் காந்தி. புகை வண்டி ஏறி மேரிட்ஸ்பர்க்கு வந்து சேர்ந்தார். அவர் முதல் வகுப்புச் சீட்டு வாங்கியிருந்தார்; ஆயினும் முதல் வகுப்பில் அவர் போகக்கூடாதெனத் தடுக்கப் பட்டார். அன்றியும் கையைப் பிடித்திழுத்து வெளியே தள்ளப்பட்டார். அப்பொழுது அவரடைந்த நாண மும் மனவேதனையும் அளவுகடந்தன. ஆயினும் பொறுத்துக்கொண்டு அடுத்த வண்டியில் அதே முதல் வகுப்புப் பெட்டியில் ஏறி சார்லஸ் நகர்க்குச் சென்றார்.

சார்லஸ் நகரிலிருந்து ஜோகானிஸ்பார்க்குக்குப் புகைவண்டி இல்லை. குதிரை வண்டியில் ஏறிச்சென்ருர். அதிலும் அவர்க்கு அளவுகடந்த இன்னல்கள் விளைந்தன. சார்லிஸ்க்கும் ஜோகானிஸ் பார்க்குக்கும் இடையேயுள்ள பர்தேகோப் என்னுமிடத்தை யடைந்தவுடன் வண்டியின் தலைவன் காந்தியை வண்டியின் வெளியே அமரச்சொல்லி வற்புறுத்தினுன். அவர் அப்படிச் செய்யாததால் அவர்மீது பாய்ந்து அடித்து வருத்தினுன். அப்படியும் அவர் கடவுளை நம்பிக் குறை இரந்து அவ்வண்டியிலேயே சென்ருர். வண்டி ஸ்டாண்டர்டனை அடைந்தது. சிலர் அங்கே காந்திக்காகக் காத்திருந்தனர். அவர்கள் காந்தியைக் கூட்டிச்சென்று ஈசாசேத் கடையில் விட்டார்கள். மறுநாள் காந்தி மிக வாய்ப்பான வண்டியேறி ஜோகானிஸ் பர்க் அடைந்தார். அங்கேயிருந்த அப்துல் கனிசேத் என்பவரைச் சந்தித்து மறுநாள் பிரிடோரியா போகப் புறப்பட்டார். முதல் வகுப்பிலேயே சென்ருர். பிரிடோரியாவை அடைந்த காந்தி, முதல் நாள் ஒரு விடுதியில் தங்கினுர். அடுத்தநாள் காலையில் மிஸ்டர் - பேகர் என்னும் தம் கட்சி வக்கீலின் (Attorney) இல்லத்துக்கு ஏகினுர். அங்கே இருவரும் வழக்கைப்பற்றிக் கலந்து பேசினுர்கள். மிஸ்டர் - பேகர், ஏழைப்பெண் ஒருத்தி வீட்டில் காந்திக்கு இடமும் உணவும் ஏற்பாடு செய்தார். மிஸ்டர் பேகருடன் காந்தி பெருநட்பு கொண்டார். அவர் வழியாகப் பல கிறிஸ்தவர்கள் காந்திக்கு நண்பர்களானுர்கள்.

காந்தி நேட்டாலில் பல வணிகர்களைக் கண்டார். அவர்களுடன் நெருங்கிப் பழகி நேசம் பூண்டார். அவர்

கள் அந்நாள் வரையில் கொண்டிருந்த தப்பு எண்ணத்தை அகற்றினர். அதாவது வாணிகம், உலக சம்பந்தம் என்றும் உண்மை மதச்சம்பந்தம் என்றும் இது வரையில் அவர்கள் கருதியிருந்தனர். அவ்வெண்ணத்தை அகற்றி உண்மை ஒன்றினல் தான் வாணிகம் வளரமுடியும் என எடுத்துக் காட்டினர். இந்தியர்க்கென ஒரு சங்கம் நிறுவினர்.

தென்னப்பிரிக்காவில் இந்தியர், மிகத் தாழ்வாகக் கருதப்படுவதைக் காந்தி எல்லாத் துறையிலும் கண்டார். கண்ணீர் வடித்தார். ஆசியாக்காரர் - கறுப்பு மக்கள். இந்தியர் எவரும் டிரான்ஸ்வால் சென்றல் தலைக்கு மூன்றுபவுன் வரி கொடுக்கவேண்டும். அவர்கள் பொதுவான வழியில் நடக்கக் கூடாது. இரவு ஒன்பது மணிக்குப் பின்னர் இசைவுச் சீட்டு இன்றி வெளிவருதலாகாது என்னும் சட்டங்கள் 1886-ஆம் யாண்டு செய்யப்பட்டன.

டிரான்ஸ்வாலில் இருக்கும்போது காந்திக்கு மிஸ்டர் - கோடேஸ் நண்பரானர். இவர்கள் இருவரும் இரவில் உலவச் செல்வார்கள். ஆதலால், சட்டப்படி காந்திக்குத் துன்பம் விளையுமோ என மிஸ்டர் - கோடெஸ் கருதினர். அங்கே அரசியல் வக்கீலா யிருந்த டாக்டர் - கிராஸே என்பவரைக் காந்திக்கு நட்புப் படுத்தினர். அதனல், காந்திக்கு டாக்டர் கிராஸே உரிமைக் கடிதம் ஒன்று தந்தார். அதில் எப்போது வேண்டுமானலும் போலீஸ் தொந்தரவு இல்லாமல் வெளியே உலவலாம் என்னும் உரிமை காந்திக்கு வழங்கப்பட்டிருந்தது.

காந்தி உலவச் செல்லும்போது தலைவர் குருகர் வீடுள்ள தெருவழியே செல்வார். இதைப்பார்த்த காவற்சேவகன் ஒருவன் வந்து காந்தியை உதைத்து இழுத்துத் தெருவில் தள்ளினான். அதனால், காந்தி வருந்தவில்லை. வழக்கைப் பற்றிய கருத்து கொண்டிருந்தார். அவ்வழக்கின் நுணுக்கங்களை ஆராய்ந்தார். இருகட்சியினரிடமும் கலந்து பேசி, வழக்கைச் சமாதானப்படுத்தி, கட்சிக்காரர்களின் மன வேறுபாட்டை ஒழித்து ஒன்றுபடச் செய்வதே உண்மை வக்கீலின் கடமை என, காந்தி நன்குணர்ந்தவர். தமது வாழ்க்கையில் இத்தொண்டை அவர் சிறக்கச் செய்தவரும் ஆவார்.

காந்தி தென்னாப்பிரிக்காவுக்குச் செல்வதற்குக் காரணமாயிருந்த வழக்கு ஒருவகையாக முடிவுபெற்றது. ஆதலால் அவர், தாய்நாடு திரும்பக் கருதினார். அப்பொழுது அப்துல்லா சேத், காந்திக்கு விருந்தொன்று நடத்தினார். அவ்விருந்தில் பல பெரியோர்கள் கலந்து கொண்டார்கள். அந்நாள் செய்தித் தாளில் "இந்தியர்களின் வாக்குரிமை" என்னும் செய்தி வந்திருந்தது. அதைப்பற்றி அனைவரும் கலந்து பேசினார்கள். காந்தி பின்னும் ஒருதிங்கள் அங்கேயே தங்க வேண்டும் என்னும் முடிவுக்கு வந்தார்கள். இந்தியருடைய தன்னுரிமை (சுயமரியாதை)க்காக உழைக்க காந்தி ஒப்புக்கொண்டார்.

நேட்டாலில் இந்திய மக்கட் கூட்டத்துத் தலைவர்களுள் முதன்மை பெற்றவர் சேத்ஹாஜி முகமதுஹாஜி தாதா என்பவர். அவர் 1893-ஆம் யாண்டு பொதுக் காரியங்களில் முதன்மைப் பதவி பெற்றார். அவர்

தலைமையில் பொதுக்கூட்டம் ஒன்று நடைபெற்றது. அக்கூட்டம் நடைபெற்ற இடம் சேத் அப்துல்லா வீடாகும். அதில் "இந்தியர்களின் வாக்குரிமை மசோதாவை எதிர்ப்பதாக முடிவு கொள்ளப்பட்டது. இவ்வியக்கத்தில் அளவு கடந்த தொண்டர்கள் சேர்ந்தார்கள். இதனால் குலப் பிரிவு, தொழிற்பிரிவு, பதவிப்பிரிவு என்னும் பிணி நீங்கி எல்லோரும் இந்தியத் தாயின் வயிற்றிற் பிறந்த ஒரு குடும்ப மக்கள் என்னும் உணர்ச்சி ஊடுருவிப் பாய்ந்தது.

வாக்குரிமை மசோதாபற்றின விண்ணப்பம் அனுப்புவதற்குரிய முயற்சியை மேற்கொண்டார் காந்தி. உணர்ச்சி மிகுதியினல் அவருடன் பலர் ஒத்துழைத்தார்கள். ஆயினும் மசோதாவை அரசியலார் நிரைவேற்றினர். ஆதலால், இரண்டாம் முறை விண்ணப்பம் அனுப்பும் முயற்சியில் ஈடுபட்டார் காந்தி.

காந்தி இங்நிலையில் நேட்டாலிலேயே தங்கவேண்டியிருந்தது. அவர் சிறந்த வாழ்க்கைக்கு உரிய பொருளுதவியைப் பற்றிப் பொது மக்கள் ஏற்றுக்கொள்ள முன்வந்தார்கள். ஆனால் அவர் அதை மறுத்தார். எனவே பெரிய வியாபாரிகள் சுமார் இருபதின்மர் காந்தியையே வக்கீலாக அமர்த்திக்கொண்டு முன்பணம் தந்தார்கள். ஆதலால், காந்திக்கு நேட்டாலில் அமைந்தது நிலைத்த வாழ்வு.

## *நிறத்தடை*

காந்தி நேட்டாலில் உயர்நீதிமன்றில் அட்வோகேட் பதவியேற்க விண்ணப்பம் தந்தார். அவ்விண்ணப்பம்

ஏற்கப்படவில்லை. அதை வக்கீல் சங்கத்தினர் மறுத்து விட்டனர். இரண்டாவதாக காந்தி, வக்கீல் சங்கத்தினர் ஒப்புக் கொள்ளும் காரணங்களைக் கூறினார். ஆதலால், காந்தி உயர்நீதி மன்றின் அட்வொகேட்டாகப் பதிவு கொள்ளப் பட்டார். இச் சமயத்தில் பல பத்திரிகை களின் செயலால் காந்தியின் பெயர் எங்கும் பரவிற்று. இடையே காந்திக்கு மனவருத்தத்தை யளித்தது நிறத் தடை.

## நேட்டால் இந்தியக் காங்கிரஸ்

நேட்டாலில் தாம் தங்கிய கருத்து நிறைவேறு மாறு காந்தியின் பொதுமக்கள் தொண்டு முதன்மையாக வேண்டுமன்றோ! ஆம்; அவ்வாறே சேவை செய்தார் காந்தி. இரண்டாவதாகவே தமது வக்கீல் தொழிலை அவர் நினைத்தார். இந்தியர் தென்னாப்பிரிக்காவில் வாக்குரிமை பெறவேண்டுமானால் இடைவிடாதமுயற்சி வேண்டும்; பலருடைய ஒத்துழைப்பும் வேண்டும். இத்துறையில் காந்திக்கு செல்வாக்கு ஏற்பட்டது. அதன் பயனாக ஒரு காங்கிரஸ் அமைந்தது. அதன் பெயர் நேட்டால் இந்தியக் காங்கிரஸ்.

## கூட்டங்கள்

காங்கிரஸ் கூட்டங்கள் திங்கட்கு ஒருமுறை அல் லது வாரத்துக்கு ஒருமுறை கூடுவதுண்டு. இவ்வியக் கத்தில் கல்விச் சங்கம், நூல் நிலையம், அறிக்கை என்னும் துறைகள் அமைக்கப்பட்டன. அறிக்கைத் துறையில் செய்த வேலை பெரும்பயன் விளைத்தது. அப்பயனாவது தென்னாப்பிரிக்காவில் உறையும் மக்கள் எவரும் இந்தி

யரிடம் உருக்கம் கொண்டமையாகும். நாளடைவில் பெரும்பயன் விளைத்தது கூட்டம்.

**பாலசுந்தரன்**

காந்தி, என்றும் ஏழைகட்குத் தொண்டு புரிவதில் பெருவிழைவுடையவர். ஆதலால், அவர் ஏழைகளுடனே இருந்து காலம் போக்கினர். அதே சமயத்தில் இந்தியக் கூலி ஒருவன், பெயர் பாலசுந்தரம். அவன் ஐரோப் பியர் ஒருவர்க்குக் கூலி. ஏதோ குற்றம் காரணமாகத் தலைவர் கூலியை மிகமிகத் தாக்கிவிட்டார். அதனால், அவனுக்கு முன்பற்கள் இரண்டும் உடைந்தன. அவன் கிழிந்தவுடையும், வழியும் குருதியும், நடுங்குமுடலும், அழுகண்ணிருமாய் வந்து காந்தியின் முன் நின்றான். அவனைக் கண்ட அருள் வள்ளல், அரும்பாடு பட்டு வேறு தலைவரிடம் வேலைக்கு அமர்த்தினர். அதுமுதல் கர்ந்தி யின் பெயர் ஒவ்வொரு ஒப்பந்தத் தொழிலாளிக்கும் தெரிந்தது. அவர்களனைவரும் காந்தியைத் தமது நண்ப ராக - உயிர் நண்பராகக் கருதி, நம்பிக் கலந்திருந்தார்கள். அன்று தொடங்கி, நாளும் பல ஒப்பந்தத் தொழிலாளி களின் குறைகளைக் கேட்டறிந்து, ஆறுதல் கூறும் வேலை வளர்ந்தது காந்திக்கு. ஆதரவு பெற்றான் பாலசுந்தரன்.

**தலைவரி**

நேட்டாலிலிருந்த ஐரோப்பியர் கரும்புப் பயிரிடல் வாய்ப்புடைத் தொழிலென அறிந்தார்கள். அதற்கு வேலைசெய்ய இந்தியரை அமர்த்தினர்கள். எதிர் பார்த்த அளவுக்குப் பலமடங்கு மிகுதியாக இந்தியரால் பயன்

பெற்றார்கள் ஐரோப்பியர்கள். இந்தியர் கருப்பந் தோட்டங்களில் மிகக் குறைந்த செலவில் பெரும்பயன் விளையச் செய்தார்கள். காய் கறிகளை மேலும் மேலும் புதிது புதிதாகக் கொண்டுவந்து சேர்த்துப் பெருக்கினார்கள். இந்தியரைக் காட்டிலும் வேறெவரும் எவ்வகையிலும் திறமையில் குறைந்தவர்களே என்பது ஐரோப்பியர்க்கு அங்கை நெல்லிபோல் விளங்கிற்று. ஆதலால், ஐரோப்பியருளத்தில் அளவு கடந்த பொறாமை பெருகிற்று அது வளர்ந்ததன் விளைவாக இந்தியரின் சொல்லுரிமையைப் பறிக்கும் சட்டமும் வரிவிதிக்கும் சட்டமும் உருவடைந்தன. காங்கிரசின் முயற்சியால் தலைவரி யாண்டு ஒன்றுக்கு 25-பவுனிலிருந்து 3-ஆகக் குறைந்தது. ஆனாலும் இவ்விளைவை ஒரு வெற்றியாகக் காங்கிரஸ் கருதிவிடவில்லை. மேலும் அதை ஒழிக்க முயன்றது. பின்னர் இருபது யாண்டுகள் முயன்ற பின்னரே ஒழிந்தது தலைவரி.

### மதம்

காந்தி தொண்டு புரிவதையே தமது மதமாகக் கொண்டிருந்தார். அதிலும் பாரதநாட்டுத் தொண்டை முதன்மையாகக் கொண்டார். தொண்டினால் தான் கடவுளின் நிலையை அறிய முடியும் என்பது அவருடைய முழுநம்பிக்கை. இதே மனப்பான்மையில் காந்தி தமது வாழ்க்கையை நடத்தினார். அர்னால்டின் எழுதிய "ஆசியதீபம்" என்னும் நூலை இரண்டாம் முறையாகக் காந்தி படித்துக் கொண்டிருந்தார். அப்பொழுது அவர், ஒரு கிறிஸ்தவக் குடும்பத்துத் தலைவியுடன் பேசிக் கொண்டிருந்தார். அவர்களிடையே ஏசுநாதர்க்

கும் புத்தபெருமானுக்கும் பொதுவாயிருந்த பெருங் கருணை ஆராயப்பட்டது. காந்தி, புத்தரைப் பற்றிப் போற்றினர்.

“புத்தருடைய பெருங்கருணை என்னைத் திடுக்கிடச் செய்கிறது. அவர் கருணையின் எல்லை மக்களுயிரளவில் நிற்கவில்லை. எல்லா உயிர்களையும் அணைத்துக் கொண்டிருந்தது. புத்தர் தோள் மீது முடமான ஆடு தாங்கியிருந்ததை நினைக்கும் எந்த உள்ளத்திலும் அருள் பெருகி, அலைமோதிப் பெருக் கெடுத்து ஓடுமன்றோ! புத்தரை போலப் பொது நோக்குள்ள அருளைக் காந்தி பெரிதும் பாராட்டுவார். அருளே அவருடைய சிறந்த மதம்.

## தாய் நாட்டு மீட்சி

காந்தி இந்தியாவை விட்டு மூன்று யாண்டுகள் தென்னாப்ரிக்காவில் இருந்தார். அங்கே அவர்க்கு பாரிஸ்டர் வேலை மிகச் சிறப்பாக நடந்தது. அங்குள்ள மக்களுக்குக் காந்தி மிக இன்றியமையாதவரானர். எனவே அவர் நெட்டாலில் நெடுங்காலம் வாழவேண்டியவரானர். இதைக்கருதி, காந்தி தாய்நாடு வந்து மனைவி, மக்களைக் கூட்டிச் செல்லக் கருத்துற்ருர். இவ்விருப்பம் அவருளத்தில் சிலநாட்கள் இருந்தன. ஆயினும் தலை வரி ஒழிப்பு முயற்சியில் ஈடுபட்டிருந்ததால் அதை விட்டுவரவில்லை. அது நிறைவேறிய பின்னர் காந்தி 1896-ஆம் யாண்டின் இடையில் போங்கோலா என்னும் கலத்தில் ஏறி இந்தியா நோக்கி வந்தார். இருபத்து நான்கு நாட்கள் நீரோட்டத்தில் கப்பல் கல்கத்தா வந்து சேர்ந்தது. ஹூக்ளியாற்றின் அழகில் ஈடுபட்ட காந்தி

மீண்டும் இரயிலேறி, பம்பாய் வந்தார். காந்திக்குக் கட்டுமட்டில்லாக் களிப்பை விளைத்தது தாய்நாட்டு மீட்சி.

## புதிய நட்பு

பம்பாய்க்குச் செல்லுங்கால் புகைவண்டி அலகாபாத்தில் முக்கால் மணி நேரம் நின்றது. அந்தநேரத்தில் கடைவீதிக்குப் போய் வருவோம் எனக்கருதிச் சென்றார் காந்தி. அங்கே கடைக்காரனுடைய உறக்கத்தால் சிறிது நேரம் வீணாயிற்று. ஆகவே வண்டி போய் விட்டது. ஆதலால், காந்தி ஒரு நாள் பம்பாயில் தங்கினார். அங்கே 'பயனியர்' தாளின் ஆசிரியர் மிஸ்டர் செஸ்னியின் நட்பைப் பெற்றார். அதனால், அத்தாளில் காந்தியின் எழுத்துக்கு இடம் தருவதாக ஆசிரியர் உறுதி கூறினார்.

காந்தி பம்பாய் வந்து சேர்ந்தவுடன் அங்குத் தங்காமலே இராஜகோட்டைக்குப் போனார். அங்கிருந்தவாறே ஒரு திங்களுக்குள் ஒரு துண்டு விளம்பரம் வெளியிட்டார் "பச்சையறிக்கை" என்பது அதன் பெயர். அவ்விளம்பரத்தில் நேட்டாலில் ஐரோப்பியரிடம் இந்தியர் படும் துன்பம் கூறப்பட்டிருந்தது. இவ்வறிக்கைக்கு மிக துணைதந்தது "பயனியர்" தாளே. அத்தாளைப் பின்பற்றிப் பலதாள்களும் எழுதத்தொடங்கின. இவ்வகையில் காந்திக்குப் பேருதவியளித்தது புதிய நட்பு.

## மணி விழா

காந்தி, இராஜகோட்டையை அடைந்தபோது விக்டோரியா பேரரசியார் ஆட்சியில் அறுபதாம் யாண்டு

நிறைந்தது. ஆகையால், மணிவிழாவுக்கு ஏற்பாடு நடந்து கொண்டிருந்தது. அதற்கென அங்கங்கே அலுவற் குழுக்கள் அமைக்கப்பட்டன. இராஜகோட்டையிலும் அஃதமைந்தது. அக்குழுவில் ஓர் உறுப்பினராகக் காந்தியும் கொள்ளப் பட்டார். ஆகவே, அவர், அவ்விழாவைச் சிறப்பிக்கும் கடமையில் ஈடுபட்டார். மிகச் சிறப்பாக நடந்தேறியது மணிவிழா.

## நற்றொண்டு

காந்தி மற்றொருவகைத் தொண்டில் பெருவிருப்பம் உடையவர். அதாவது பிணியாளர்க்கு உதவி செய்வது. நோயாளர் எவராயிருப்பினும் மனம் விரும்பிச் செய்யும் தொண்டில் அருள் ஒளிர்கிறது என்பதை அவர் நம்பினர். அதற்கேற்ப, காந்தியின் மைத்துனர் ஒருவர் - உடன் பிறந்தாளின் கணவன் பிணியுற்றிருந்தார். அவரைப் பார்க்கக் காந்தி சென்றார். அப்பிணியாளர்க்கு உற்றார் எவருமில்லையாதலால் காந்தியே கூட்டிவந்து, அருகிருந்து தொண்டுபுரிந்தார். ஆயினும் அம்மைத்துனர் பிணியிலிருந்து மீளாமல் மரித்தார். மற்றும் காந்தியினிடம் நிலைத்துப் பயன்பட்டது இந்நற்றொண்டு.

## பம்பாய்க் கூட்டம்

தென்னாப்பிரிக்காவில் இந்தியர் நிலையை விளக்கிச் சொல்ல நகரங்களில் பொதுக்கூட்டம் நடத்துவதனால் பெரு நன்மை விளையும் என்பது காந்தியின் கருத்து. ஆதலால், பம்பாயில் முதல் கூட்டம் நடத்தவேண்டு

மென அவர் விரும்பினர்; அதன் பொருட்டு நீதிபதி-ரானடே, ஸர்—புரோசிஷாமேதா, நீதிபதி - பட்ருடின் தயாப்ஜி, முதலியவர்களின் துணையைக்கொண்டு பெரிய கூட்டம் நடத்தினர். அக்கூட்டத்தில் காந்தியே பேசினர். அப்பேச்சினல் பல பெரியோர் உண்மையுணர்ச்சி பெற்றுர்கள். மிகப் பலர் காந்தியின் சொல்லைப் பாராட்டினர்கள். சிலர் காந்தியுடன் தென்னுப்பிரிக்கா வருவதாகத் துடித்தார்கள். ஆனல், பெஸ்டோன் ஜி என்னும் புலவர் மாத்திரம் மறுத்தார். நம் தாயகத்தார்க்கு நாம் செய்யவேண்டிய தொண்டுகள் வேறு பலவுண்டு எனக் கூறினர். அச் சொறகள் காந்தியின் மனக்கருத்துக்கு மாறுபட்டதாயிருந்தன. காந்தியின் திறமையை உள்ளபடி காட்டியது பம்பாய்க் கூட்டம்.

## பூனக் கூட்டம்

காந்தி அடுத்து பூண சென்றுர். அங்கே லோக மான்ய பாலகங்காதர திலகரைக் கண்டார். பின்னும் ஆசிரியர் பந்தர்க்கர் கோகலே முதலியவர்களின் உதவி கொண்டார். அங்கே பொதுக்கூட்டம் நடத்த முயன்ருர். அக்கூட்டம் பெருஞ் சிறப்புடனும் அமைதியுடனும் நிகழ்ந்தது. காந்தியின் உள்ளத்தில் பெரு நம்பிக்கையை விளைத்தது பூண கூட்டம்.

## சென்னை நகர்

பூண கூட்டத்தினல் மகிழ்ச்சி மலையுச்சியேறினர் காந்தி. அங்கிருந்து சென்னை சேர்ந்தார். சென்னைப் பகுதியைச் சார்ந்த மக்கள் கொண்டிருந்த மனக்

கிளர்ச்சிக்கு மட்டளவில்லை. பம்பாயிலும் பூனுவிலும் ஆற்றிய சொற்பொழிவுகளிலும் சென்னை சொற் பொழிவு சற்றுப் பெரிதாகவே இருந்தது, அவ்விடத் தில் காந்தியால் கூறப்பட்டது பாலசுந்தரத்தின் நிலை. அச் செய்தி மக்களின் மனதில் அளவிலடங்காத ஆத் திரத்தை யுண்டாக்கியது. சென்னையில் பச்சையறிக்கை மிக அருமையாகக் கொண்டாடப்பட்டதும் கொள்ளப் பட்டதும் கூறுந்தரத்தது அன்று. காந்தியின் சிறப் பியல்புகளை யுள்ளபடி அறிந்து அவர் கருத்தை அப் படியே ஏற்றது சென்னைக் கூட்டம்.

**கல்கத்தா**

சென்னையில் செல்வாக்கு மிகப் பெற்ற காந்தி, கல் கத்தாவிலும் பொதுக் கூட்டம் நடத்த நயந்தார். அங் குச் சென்று, வங்காளத்தின் விளக்கமாகிய சுரேந்திரநாத் பானர்ஜியைப் பார்த்தார். அவர் கூறியதைக்கொண்டு ராஜா—ஸர்-பியாரி மோகன் முகர்ஜி, மகாராஜா தாகூர் முத லியவர்கள் உதவியையும் நாடினுர். ஆனுல், காந்தி மிக ஏமாற்றமடைந்தார். மற்றும் "அமிருத பஜார்" "வங்க் வாஸி" என்னும் வெளியீட்டு அலுவலகம் சென்று தாழ்வு மிகவுற்ருர், இவ்வகைகளில் மனந்தளர்ந்த காந்தி "இங்கிலீஷ்மான்" அலுவலகம் சென்று சிறப் புற்ருர். இவ்வெளியீட்டின் ஆசிரியர் மிஸ்டர்-சாண் டர்ஸ் நல்ல அறிவாளியாதலால் காந்தியிடத்திலிருந்த உண்மைபற்றும் உள்ளதைக் கூறும் செயலும் ஆகிய இரண்டுமே ஸாண்டர்ஸின் மனதைக் கவர்ந் தனவாயின.

## தந்தி

காந்தி கல்கத்தாவிலிருக்கும்போது அவரைத் தேடி ஒரு தந்தி வந்தது, டர்பனிலிருந்து வந்த அத் தந்தி காந்தியை மிகப் பதைக்கச் செய்தது. அது கூறிய செய்தியாவது "ஜனுவரியில் பார்லிமெண்டு கூடுகிறது; விரைந்து திரும்புக" என்பதே. உடனே, காந்தி சில செய்தித் தாள்களுக்குத் தமது செலவு பற்றித் தெரிவித்துவிட்டார். அப்பொழுதே தாதா அப்துல்லா கம்பெனியைச் சார்ந்த பம்பாய்க் காரியக்காரர்க்கு ஒரு தந்தியடித்தார். அதில் தென்னாப்பிரிக்காவுங்குப் போகும் முதல் கப்பலில் இடம் ஒதுக்கிவைக்குமாறு தெரிவித்திருந்தார்.

தாதா அப்துல்லா அண்மையில் "கோர்லாண்டு" என்னும் நீராவிக் கப்பலை வாங்கியிருந்தாராதலால் காந்தியை அக்கப்பலிலேயே மனைவி மக்களுடன் செலவின்றி கூட்டிச் செல்வதாகப் பதில் தெரிவித்தார். அவர் விரும்பியவாறு காந்தி குடும்பத்தோடு டிசம்பர்த் திங்களின் தொடக்கத்தில் கோர்லாண்டில் ஏறிச்சென்றார். அதே பொழுது நாடேரி என்னும் நீராவிக்கப்பலும் தென்னாப்பிரிக்காவுக்குப் புறப்பட்டது. அதிலும் டிரான்ஸ்வாலுக்குச் செல்வோர் நானூறுபேர் சுமார் சென்றார்கள். இப்படி காந்தியை இரண்டாம் முறை நேட்டாலுக்குக் கூட்டிச் சென்றது தந்தி.

## பெருந் துன்பங்கள்

உலகம் போற்றும் உயர்குணச் செம்மலாகிய காந்தி பொதுமக்கள் தொண்டு - இந்தியர் பொருட்டுத்

தொண்டு - அருள் தொண்டு செய்ததன் பயனாக அடைந்த பல இன்னல்களைப் பொதுவாகச் சொல்லும் பகுதி துன்பியல் எனப் பெயர்பெற்றது. இதில் பெருந் துன்பம் எனச் சிறு பகுதி ஒன்று கூறுகிறோம். ஆயினும் அவற்றை விரித்துரைத்து மனத்துயர் பெருக்காது சுருக்கியே கூறுதல் நலம்.

காந்தி நேட்டாலில் வாக்குரிமைக்குப் போராடினார். இந்தியக் காங்கிரஸ் அமைத்தார். தாய்நாடு திரும்பிப் பல நகரங்களில் பொதுக்கூட்டங்கள் நடத்தினார். பச்சை அறிக்கை விடுத்தார். இவ்வளவும் வெள்ளையர்க்கு எதிர்பானவையன்றோ! எனவே காந்தி நேட்டாலுக்குத் திரும்புகிறார் என்ற செய்தி கேட்ட வெள்ளையர், கோர்லாண்டு, நாடேரி என்னும் இரு கப்பல்களையும் இந்தியாவுக்குத் திருப்ப முயன்றனர். அம் முயற்சியவர்கட்குக் கைக்கூடவில்லை. ஆதலால் சில நாட்கள் கடந்து கப்பலைத் துறைமுகத்திற்குள் விடவும் மக்களை யிறக்கவும் கட்டளை பிறந்தது. கப்பலில் இருந்தவரனைவரும் இறங்கினர்.

காந்தி தமது மனைவி மக்களுடன் அப்போதே இறங்கினால் உயிர்க்கு இடையூறு நேரும் எனத் தெரிந்து கொண்டார். என் செய்வார். மனைவி மக்களை வேறொரு நண்பருடன் கூட்டி ஸ்ரீ ரஸ்டம்ஜியின் வீட்டுக்கு அனுப்பினார். தாம் மிஸ்டர் லாப்டனுடன் இறங்கினார். அவ்வளவுதான்; எங்கும் காந்தி காந்தி என்கிற கூக்குரல். அக் கூக்குரலுடன் எங்குமிருந்து சிறுவர் பலர் திரண்டு ஓடிவந்தனர், காந்தி மீது கற்களும் அழுகிய முட்டைகளும் வீசப்பட்டன; அவரு

டைய தலைப்பாகை பறிக்கப்பட்டது. பலர் திரண்டு அடித்தனர்; உதைத்தனர். அவர் களைத்து மூச்சுத் திணறினார். அப்பொழுதும் வெள்ளையர் மேலும் மேலும் தாக்கினர். நிற்க முடியாமல் காந்தி தவித்தார். அவ்வேளையில் போலீஸ் சூப்பரிண்டெண்டெண்டின் மனைவியார் அவ்வழி வந்து கொண்டிருந்தார். அவர் காந்தியை நன்கறிந்தவர். விரைந்து வந்து காந்திக்குத் துணைபுரிந்தார். காந்தியின் உடம்பு முழுதும் தழும்புகள்; ஓரிடத்தில் பெருத்த காயம். இந்த நிலையில் கப்பலின் மருத்துவர் ஸ்ரீதாதிபர்ஜார் பேருதவி புரிந்தார். காந்தி மிஸ்டர் ரஸ்டம்ஜியின் இல்லமடைந்தார்.

சிறிது நேரத்தில் மிஸ்டர் ரஸ்டம்ஜியின் வீட்டை வெள்ளையர் சூழ்ந்தனர். காந்தியை வெளியே விடுங்கள் என மூலைக்கு மூலை கத்தினார்கள். நல்ல வேளையாக காந்தி உருமாறி வெளியேறிச்சென்று மறைந்தார். பின்னர் காந்தியை அரசியல் தலைவர் மிஸ்டர் கோம்ப் அழைத்தார் துன்பியற்றியவர்மீது வழக்குத் தொடருமாறு கூறினார். ஆனால் காந்தி "என்னைத் தாக்கியவர்கள்மீது வழக்குத் தொடரக்கூடாதென்பது என் உறுதியான கொள்கை" என எழுதிக் கொடுத்தார். இந்தியரை டிரான்ஸ்வாலிலிருந்து வெளியேற்றச் சட்டம் பிறப்பித்த தென்னாப்பிரிக்க அரசை எதிர்த்ததன் காரணமாகக் காந்தி இருதிங்கள் சிறையிடப்பட்டார். காந்திக்கு எளியனவாகவே இருந்தன இப் பெருந் துன்பங்கள்.

# 4. சிறப்பியல்

## விளைவு

டர்பனில் காந்திக்கு நேர்ந்த இன்னலைப்போலப் பல மடங்கு பெருமையும் வளர்ந்தது. வாழ்க்கை மிக விரைவில் வாய்ப்புடையதாய் அமைந்தது. வழக்குகள் மேலும் வந்து குவியலாயின. அப்போது ஸ்ரீ மனு சுக்லால் நாகார் காந்தியுடன் கூடிப் பொதுத்தொண்டு புரிந்தார். நேட்டாலில் அமைக்கப்பட்ட இந்தியக் காங்கிரஸ் எல்லாவகையிலும் நன்னிலையுற்றது. காந்திக்கு இயற்கையாயுள்ள அருள், அமைதியை ஈன்றது. மேலும் அவர்க்கு வெள்ளையர்க் கிடையேயும் பரவிய பெருமதிப்பு அமைதியின் விளைவு.

## மைந்தர் படிப்பு

காந்தி 1897-ஆம் யாண்டு டர்பனுக்குச் சென்ற போது மூன்று சிறுவர்களைக் கூட்டிச் சென்றார். அவர்களுள் இருவர் தம் மைந்தர்கள். ஒருவன், உடன்பிறந்தாளின் மகன். அவர் மூவரையும் படிப்பிக்கும் வகையில் காந்திக்கு முயற்சி பெரியதாயிற்று. தக்க பள்ளிகளில்லை. இருந்த சில பள்ளிகளின் நடப்புமுறை நன்னிலையில் இல்லை. மாணக்கர்களின் விடுதியால் கேடு விளையுமென்பதை அவர் நன்கறிந்திருந்தார். எனவே தாமே ஒருவகையில் கல்விப்பயிற்சி யளித்தார். நூற்கல்வியை விட உரிமைக் கல்வி சிறந்தது என்னும் நோக்குடைய காந்தி, தம் மக்களைப் பள்ளிக்கனுப்பாமலே உரிமையுணர்ந்த வீரர்களாக்கினர். ஆதலால், மாண்புற்றது மைந்தர் படிப்பு.

## உயிர்க் கருணைத் தொண்டு

எல்லா மக்களையும் உடன் பிறந்தாராகக் கருதும் காந்தி உயிர்த்தொண்டு புரிவதில் பெருவிழைவு கொண்டிருந்தார். அவரில்லத்துக்குக் குட்டநோய் உடையவன் ஒருவன் வந்தான். அவனை அவர்தம் மனையிலிருத்தினார்; புண்களைக் கட்டினார். சிலநாள் கடந்து மருத்துவச் சாலையில் சேர்த்தார். பார்ஸி ரஸ்டம்ஜியின் கொடைப் பொருளால் டாக்டர் பூத் ஒரு மருத்துவ நிலையம் நிறுவியிருந்தார். அங்கே ஏழை இந்தியர் பலர் மருத்துவத்துக்கு வருவதுண்டு. அதைக் கண்ட காந்தி, அம்மருத்துவச் சாலையில் நாளும் சுமார் இரண்டு மணிநேரம் மருந்து கலந்து கொடுக்கும் தொண்டு புரிந்தார். அருளுருத் திருவாளராகிய காந்தி, பலவகையிலும் ஓயாமல் புரிந்தார் உயிர்க் கருணைத் தொண்டு.

## எளியவாழ்க்கை

காந்தி உயர்நிலையில் பலயாண்டு வாழ்ந்தார். ஆனால், பகட்டு வாழ்க்கையை நாளடைவில் அவர் வெறுத்தார். பலகாரணங்களால் தமக்குரிய எல்லாத் தொழிலையும் அவரே செய்யக் காந்தி கருதினார். அம்முயற்சிகாரணமாக வீட்டு உடைகளைத் தாமே சலவை செய்து கொள்ளலானார். அத்தொழிலில் தம் மனைவிக்கும் நல்ல பயிற்சியளித்தார். சலவைத் தொழிலில் காந்தி மிகத் தேர்ந்தவர். ஒருமுறை கோகலே தென்னாப்பிரிக்கா வந்திருந்தார். அப்போது அவர்க்கு ஒரு விருந்து நடந்தது. கோகலே பயன்படுத்தும் மேல் துணி மிகச் சிறந்தது. அத்துணியை கோகலேவுக்குப் பரிசாகத் தந்தவர் மகாதேவ கோவிந்தரானடே. அச்

சிறந்த உடையைக் காந்தி சலவை செய்து மடிப்பிட்டுத் தந்தார். அப்போது கோகலே "நீர் வக்கீல் தொழிலில் மிக வல்லவராயிருப்பதுபோலவே சலவைத் தொழிலி லும் மிக வல்லவர்" எனப் பாராட்டினர்.

காந்தி தமது தலைமயிரை வெட்டிக் கொள்ளச் சென்று பலமுறை ஆங்கிலேயரிடம் தாழ்வுற்ருர். எனவே, அவர்தாமே தமது தலைமயிரை வெட்டிக் கொள்ளப் பழகினர். இங்ஙனம் தன் முயற்சிக் கருத்துடைய காந்திக்கு எல்லாவகையிலும் அமைந்தது எளிய வாழ்க்கை.

## போயர் போர்

போயர் போர் தொடங்கிய போது காந்தி போர் வீரர்கட்குத் தொண்டு செய்யக் கருதினர்; மேலும் பிரிடிஷார்க்குப் பேருதவி புரியவும் விழைந்தார்; எனவே பலதோழர்களைக் கூட்டி, படைத் தொண்டுப் படை (Ambulance Corps) ஒன்று நிறுவினர். அதை அரசியலார் ஏற்க மறுத்திருந்தும் மேலும் மேலும் நயந்து ஏற்கும்படி செய்தார் காந்தி. இத் தொண்டுக்கு டாக்டர் பூத் பேருதவி புரிந்தார். இப்படை ஆயிரத்து ஒரு நூறு தொண்டரைக் கொண்டிருந்தது. இவர்களுள்ளே நாற்பது தலைவர்களிருந்தனர். இப்படை செஞ்சிலுவைச் சங்கத்தோடு (Red Cross Society) ஒத்த பாதுகாப்பு பெற்றது. ஸ்பியான் கோப் போரில் துப்பாக்கிக் குண்டு பறக்கும் எல்லைக்குள்ளும் இப் படை சென்று தொண்டு புரிந்தது.

இத்தொண்டர் படை இயக்கத்தால் இந்தியர்க்குள்ளிருந்த குலவேறு பாடு அற்றது. ஒற்றுமையுற்றது. சில்லி பாசறையில் லார்டு ராபர்ட்ஸின் மகன் லெப்டினெனட் ராபர்ட்ஸ் படுகாயத்தால் மாண்டார். அவரை இப்படையினர் தூக்கிச் சென்று பெருமை பெற்றனர். இங்கிலையில் காந்தியின் அருளில் பங்கு கொண்டது போயர் போர்.

## நலன் காப்புச் சீர்திருத்தம்

குறைகளைப் போக்கிக் கொள்ளாமல் உரிமைக்குப் போராடுதல் கூடாது என்பது காந்தியின் கருத்து. எனவே இந்தியர், வீடுகளையும் சுற்றுப் புறங்களையும் திருந்தவைத்துக் கொள்ளாத குற்ற முடையவர்கள் என்னும் உண்மையைக் காந்தி கண்டார். அதன் பொருட்டுப் பாடுபடக் காந்தி முனைந்தார். வெற்றி பெற்றார். டர்பனில் பிளேக் நோய் பரவியபோதும் காந்தி இத்தொண்டைச் செய்தார். காந்திக்குப் பெரும் பாராட்டு விளைவித்தது நலன் காப்புச் சீர்திருத்தம்.

## வறுமை யொழிப்பு

1897-ஆம் யாண்டிலும் 1899-ஆம் யாண்டிலும் இந்தியாவில் பெரும் பஞ்சங்கள் தோன்றின. அப்பொழுதெல்லாம் காந்தி உண்மைத் தொண்டு புரிந்திருக்கிறார். தென்னாப்பிரிக்காவில் இருந்த இந்தியர்களிடையே சென்று பணம் திரட்டினார். காந்தியின் முயற்சியைக் கண்ட ஒப்பந்தக் கூலிகளும் உதவி செய்தார்கள். அப்பொருளைக் கொண்டு பஞ்சக்

கொடுமையைத் தீர்த்தார் காந்தி. உண்மை என்னும் மரத்தை அருள் என்னும் நீர் ஊற்றி வளர்த்தார் காந்தி. அப்பெருமரம் நாட்டில் ஒற்றுமைக் கனிகளையளித்தது. காந்திக்கு மிக எளிதில் முடிந்தது வறுமையொழிப்பு.

## பரிசுப் பொருள்கள்

*1901*-ஆம் ஆண்டில் காந்தி இந்தியா திரும்பினர். அவர்க்கு எங்கும் பாராட்டுகள், பலபரிசுகள், பலப்பலப் விருந்துகள் என்னும் சிறப்புக்கள் நடந்தன. முதல் முறை **1896**-இல் தென்னுப்ரிக்கா விலிருந்து இந்தி யாவுக்குத் திரும்பியபோதே காந்திக்குப் பல அரிய பரிசுப் பொருள்கள் குவிந்தன. இரண்டாம் முறை அதிலும் பன்மடங்கு திரண்டன. அனைத்தையும் அவர் இந்திய காங்கிரசுக்கு வழங்கினர்; பொது நன் மைக்கே பயன்பட்டன பரிசுப் பொருள்கள்.

## இந்தியாவில் தொண்டு

காந்தி, தாய் நாட்டுக்குத் திரும்பும்போது மொரீ ஷியஸ் (மோர்சி) துறைமுகத்தில் இறங்கினர். அஃ தொரு தீவு. அத்தீவின் கவர்னராயிருந்த ஸர் சார்லஸ் புரூஸ், காந்திக்கு விருந்தளித்துச் சிறப்பித்தார். அதை விட்டுக் காந்தி இல்லமடைந்தார்; நாட்டுச் சுற்றுச் செலவைத் தொடங்கினர். *1901*-ஆம் யாண்டு கல்கத் தாவில் நடந்த காங்கிரஸ் கூட்டத்துக்குக் காந்தி முதல் முறையாகச் சென்றார். அக்கூட்டத்தின் தலைவர் சர் டின்ஷாவாச்சா. அவரிடமும் நெருங்கிப் பழகினர் காந்தி. இக்காலத்தில்தான் காந்தி தொடங்கினர்

இந்தியாவில் தொண்டு. கல்கத்தா காங்கிரஸ் கூட்டத்தில் காந்தி, ஸ்ரீ கோஷாவுக்கு எழுத்தாளர் (Clerk=குமாஸ்தா) வேலைசெய்தார். மற்றும் பல குற்றேவல்கள் செய்தார். தொடங்கினுர் இந்தியாவில் தொண்டு.

## உண்மைக் கடைப்பிடி (சத்தியாக்கிரகம்)

எந்த ஒன்றுக்கும் உண்மையையே கையாளுதல் நற்குடிப் பிறந்தவர்களின் பண்பு. கீழ் மக்கள் பொய் ஒன்றையே துணையாகக்கொண்டு ஒழுகுவர். அவர் வாழ்க்கை மண் குதிரை ஏறி வெள்ளம் கடப்பது போலும் கண்ணை விற்றுச் சித்திரம் கொள்வது போலும் முடியும். இந்த உண்மைகள் காந்திப் பெரியாரின் முடிந்த கொள்கைகள். உண்மைக் கடைப்பிடியின் பிரிவுகள் உண்ணு நோன்பு, சிறை, தீங்கிழைத்தவர்க்கு நலமிழைத்தல் என்பனவாகும்.

பீஹார் மாகாணத்தின் வடபகுதி சம்பாரன் ஜில்லா. அங்கே ஒரு முறை ஆங்கிலக் கம்பனிக்கும் குடிகட்கும் நேர்ந்த கலகத்தைத் தீர்க்கும்பொருட்டு காந்தி சென்ருர். குடிகள் கட்சியில் காந்தி தலைவராஞர். ஆனல், ஆங்கிலக் கம்பனிக்குப் போலீஸ் உதவியிருந்தது. எப்படியோ உண்மையைத் துணைகொண்டு உழைத்த காந்திப் பெரியார் வெற்றிகொண்டார்.

ஒருபோது இந்தியர்கட்கும் முகம்மதியர்கட்கும் இடையே சிறு கலகம் ஏற்பட்டது. அதனல் நம்நாட்டு ஒற்றுமை கெடுமே! ஒற்றுமை கெட்டாலிருவர்க்கு மன்றே தாழ்வு! என மனமிரங்கினுர். இரு வகுப்பினர்க்கும் இனிய மொழிகளியம்பினுர். என்ன சொல்லி

யும் கலகம் அடங்கவில்லை. அதனால் காந்தி உண்ணா நோன்பிருந்தார். அப்போது டாக்டர் அன்சாரி, காந்தியின் அருகிலிருந்து தொண்டு புரிந்தார். இதன் பயனாக இந்து முஸ்லிம் ஒற்றுமை ஏற்பட்டது. பின்னர் காந்தி யுணவுகொண்டார். எவர் குற்றத்தையும் காந்தி தண் டித்துத் திருத்துவதில்லை. தாம் உண்ணாநோன்பு ஏற்றே பிறரைத் திருத்துவார். 1934-ஆம் யாண்டிலும் காந்தி ஒருண்ணா நோன்பியற்றினார். சில காரணங்களைக் கொண்டு அவர் 1934 செப்டெம்பரில் காங்கிரஸ் இயக் கத்திலிருந்து விலகினார். அதன் பின்பு தீண்டாமையை ஒழிக்கப் பெரிதும் முயற்சி செய்து தாழ்த்தப்பட்ட வர்க்குத் தகுதியளித்தார்.

இக் காரணங்களால் காந்தியை மகாத்மா என எல் லோரும் கொண்டேத்தினார்கள். மகாத்மா, என்பதற்கு பெரியார் என்பது பொருள். ஆதலால், நாம் இனி, அவரைப் பெருமான் காந்தி என்றே குறிப்போம்.

பெருமான் காந்தி விடுதலை உணர்ச்சியை மக்க ளிடை யூட்டி வந்தார். அவரைப் பின்பற்றிப் பலர் அச் செயலை ஏற்றனர். அதனால் அரசியலார் அடக்குமுறை யைக் கையாண்டார்கள். அதை எதிர்த்ததனால் பெரு மான் காந்திக்குச் சிறைத்தண்டனை ஏற்பட்டது. மற் றும் உப்பு வரியை எதிர்த்ததன் காரணமாகப் பெருமான் காந்திக்கு இருமுறை சிறையீடு கிடைத்தது. பின்பு மீண்டும் 1942-ஆம் ஆண்டு பெருமான் காந்தி சிறை புகுந்தார். அப்பொழுது திருவாட்டி கஸ்தூரிபாய் இறுதியுற்றார். இப்பெரும்பிரிவு பெருமான் காந்தியின் உள்ளத்தில் பெரு நடுக்கத்தை விளைவித்தது. சிறை

வாழ்வே அமரர் வாழ்வாக ஏற்று உண்மையைக் கடைப்பிடித்து சால்பு என்னும் நற்பண்பினுல் ஆங்கில ஆட்சிக்கு அச்சத்தை விளைவித்தார் காந்தி. உலகெங்கும் பெருமான் காந்தியைப் பெயரால் குறிக்காமல் மஹாத்மா என்றே வழங்கும் தகுதி ஏற்பட்டது. பெருமான் காந்தியின் புகழ் குன்றின் மேலிட்ட விளக்காயமைவதற்குக் காரணமாயிருந்தது, உண்மைக் கடைப்பிடி.

## விடுதலை

பெருமான் காந்தியின் விடாமுயற்சி இந்தியப்பெரு மக்கள் பலரை ஊக்கியது. அவர்களின் ஒத்துழைப்பு பெருமான் காந்தியின் மனவன்மையுடன் சேர்ந்து பெருவலியுற்றது. ஆங்கிலேயர் அச்சமுற்றனர். அதன் விளைவு என்ன? 1947-ஆம் யாண்டு ஆகஸ்டுத் திங்கள் 15-ஆம் நாள் கிடைத்த விடுதலை.

## கொடி

இந்தியர் உரிமைக்கு அறிகுறி மூவர்ணக்கொடி. அதனிடையே உள்ள அசோக சக்கரமே பெருமான் காந்தியின் அருளாழி. மூவர்ணங்களின் சின்னம் உண்மை, துறவு, செழிப்பு என்பன. இவற்றை விளக்குவதே காங்கிரஸ் கொடி.

101335

# 5. முடிவியல்

## கொடுமை

பெருமான் காந்தியைப் பற்றிப் பேசிய நாம் உள்ளப் பெருமிதம் சிறக்கப் பேசினோம்.

> "கெடுவாக வையா துலகம் நடுவாக
> நன்றிக்கண் தங்கியான் தாழ்வு"

என்னும் சிறந்த குறளின் கருத்துக்கு மகாத்மா இலக்கியமாயினார். ஆனால் இம்முடிவியல் நமக்கு முடிவிலாப் பெருந்துயர் விளைக்கும். கேட்டார் யாவரும் கிடுகிடுக்கும் கொடுமை இம்முடிவியலில் கலந்துளது.

நன்றி கெட்டவன் இந்தியன், எனப் பிறநாட்டினர் எள்ள, உடனிருந்து உயிர்க்கு ஊறு செய்த இகழ்ச்சி இந்தியரைச் சார்ந்தது. 1948-ஆம் யாண்டு ஜனுவரித் திங்கள் முப்பதாம் நாள் கோட்சே என்பவனால் சுட்டுக் கொல்லப்பட்டார் காந்தி. அவருள்ளம் அப்பொழுதும் அருள் எண்ணங்களால் நிறைந்திருந்தது. அவர் வாய், அருள் மொழிகளைச் சொரிந்தது. அவர் கண்கள், அருட் பார்வையைச் செலுத்தின. மகாத்மா காந்தியடிகளின் அருள் எங்கும் தண்ணிலவு பொழியத் தவறவில்லை. ஆயினும் அவருயிர்க்கு விளைந்த இன்னலைப் பற்றிய எண்ணமாகிய இருள் இடையிடையே காட்சியளித்துக் கருத்தைக் கலக்குகிறது. இஃதொரு கொடுமை.

அருள்—அழியாத அருள்—கடவுட் சிறப்பமைந்த அருள் வாழ்க.

Printed
at the
Rathnam
Press,
Madras-1